மனோன்மணியம்சுந்தரனார்பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

TIRUNELVELI

தொலைநெறித்தொடர்கல்விஇயக்ககம்

DIRECTORATE OF DISTANCE AND CONTINUING EDUCATION

B.A TAMIL

இரண்டாம் பருவம்- **Semester II**

விருப்பப்பாடம்

# செம்மொழித்தமிழ்


முனைவர் ரெ.சுகிதாராணி

உதவிப் பேராசிரியர்

தமிழியல் துறை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக

முதுகலைவிரிவாக்கமையம்

நாகர்கோவில்

அலைபேசி எண் : 9487185553

Email ID : suhitharani@gmail.com

| Learning Objectives | |
|---|---|
| • உலக மொழிகளில் செம்மொழித் தமிழினை அடையாளம் காணச்<br>• செய்தல்.<br>• செம்மொழிீப்போராட்டத்தில்  கலைஞரின் பங்களிப்பை உணரச்செய்தல்<br>• செம்மொழித் தமிழின் தகுதிகளைப் பிற மொழிகளில் கண்டறியச்செய்தல்.<br>• செம்மொழித் தமிழ் இலக்கியங்களைக் கற்பித்தல்.<br>• இன்றைய நிலையில் செம்மொழித் தமிழின் பயன்பாட்டினை உணர்த்துதல், | |

# செம்மொழித்தமிழ்

## Unit-I - செம்மொழி -தகுதி

செம்மொழிகளின்தகுதிகள், அறிஞர்களின்கருத்துகள், செம்மொழி-இலக்கணம், உலகச்செம்மொழிவரலாறு, கிரேக்கமொழி, இலத்தீன்மொழி,சமஸ்கிருதம், ஹீப்ருபோன்றசெம்மொழிகள்குறித்தஅறிமுகம்.

## Unit-II - தமிழ்-செம்மொழிஏற்பளிப்பு

தமிழ்செம்மொழியாகஏற்கப்படுவதற்குத்தமிழ்அறிஞர்களின்பங்களிப்பு. இலக்கணஇலக்கியவளர்ச்சிஅறிவியல்தமிழ், இணையப்பல்கலைக்கழகம், தமிழ்ச்செம்மொழிவரலாறு, மொழிஅறிஞர்களின்ஏற்பு, பரிதிமாற்கலைஞரின்முழக்கம்,

சங்கங்களின்தீர்மானங்கள், இந்தியஅமைச்சகத்தின்ஏற்பு, நாடாளுமன்றஉறுப்பினர்களின்முயற்சி, தமிழகஅரசின்செம்மொழிஅறிக்கை, தமிழ்ச்செம்மொழிமாநாட்டுஉரைகள். பல்கலைக்கழகங்களின்பெரும்பங்கு - போராட்டங்களின்வெற்றி - பயன்கள் - செம்மொழித்தமிழாய்வுமத்தியநிறுவனம்.

**Unit- IIIஇந்தியச்செம்மொழிகள்-அறிமுகம்**

இந்தியச்செம்மொழிகள்சமஸ்கிருதமொழி, பாரசீகமொழி, பிராகிருதமொழி, பாலிமொழி. அராபிமொழி- வாழும்செம்மொழிதமிழ் - தமிழ்ச்செம்மொழிதொடர்பாகச்செய்யவேண்டுவன.

**Unit – IV தமிழின்தொன்மை**

தமிழின்தொன்மை- தமிழின்சிறப்புகள்முதல்மொழிதமிழ் - தமிழ்ச்செம்மொழியின்பண்புகள்தமிழ்இலக்கியச்செம்மை -

தமிழ்ச்செம்மொழிஇலக்கியத்தின்பாடுபொருள்சிறப்புகள் -

தமிழ்ச்செம்மொழிஇலக்கியத்தின்கட்டமைப்பு.

**Unit-V தமிழின்சிறப்புகள்**

செம்மொழித்தமிழ்இலக்கியங்கள்செவ்விலக்கியங்கள்,இந்திய ச்செவ்விலக்கியங்கள். தொல்காப்பியம், இறையனார்களவியல்உரை, சங்கஇலக்கியங்கள், இரட்டைக்காப்பியங்கள், பதினெண்கீழ்க்கணக்குநூல்கள், முத்தொள்ளாயிரம்செவ்வியல்இலக்கியக்கூறுகள் - தமிழ்செம்மொழிநூல்கள்தொகுப்புமுறைகள்பதிப்புமுயற்சிகள் -

தமிழ்ச்செம்மொழிநூல்கள்குறித்தநினைவுக்குறிப்புகளும்அட்ட வணைகளும்.

# அலகு - 1

## செம்மொழிகளின்தகுதிகள்

ஒருமொழிசிறந்தமொழியாகவும், உயர்ந்தமொழியாகவும்இருக்கலாம். அதிகமானமக்களால்பேசவும்எழுதவும்பயன்படுத்தப்பட்டுவரலாம். ஆனால், அதுசிறப்பானமொழியாகக்கருதப்படுமேதவிரசெம்மொழியாகக்கருதப்படாது.

ஒருமொழியைச்செம்மொழியாகஏற்கஅதற்குமொழியியல்அடிப்படையில் 11 தகுதிகள்இருந்திடல்வேண்டும். அவை. 1.தொன்மை (Antiquity), 2.தனித்தன்மை (Individuality), 3. பொதுமைப்பண்பு (Common character), 4.நடுவுநிலைமை (Neutrality), 5.தாய்மைத்தன்மை (Parental kinship), 6.பண்பாடு, கலை, பட்டறிவுவெளிப்பாடு, 7.பிறமொழித்தாக்கமில்லாத்தனித்தன்மை, 8.இலக்கியவளம்(Literary Process), 9.உயர்சிந்தனை(Noble ideas and ideals), 10. கலை,

இலக்கியத்தனித்தன்மைவெளிப்பாடு-பங்களிப்பு, 11.மொழிக்கோட்பாடு (Linguistic Principles) ஆகியனவாகும்.

## அறிஞர்களின்கருத்துகள்

**கில்பெர்ட்சிலேட்டர்**

பழங்காலத்தில்தமிழ்மொழிசெவ்வியல்நிலையைஎய்தியது. இதுதிராவிடநாகரிகத்தின்தனிச்சிறப்பைஉலகத்திற்குக்காட்டும்சான்றாகநிலை பெற்றுவிட்டது. மேலும், கிரேக்கர்களோடுதமிழர்கள்தொடர்புகொள்வதற்குமுன்பே, தமிழ்மொழிசெவ்வியல்நிலையைஅடைந்திருக்கவேண்டும்என்றும்கருத்துத்தெரி வித்துள்ளார்.

**கமில்சுவலபில்**

சங்கஇலக்கியப்பாடல்கள்தேர்ந்தெடுத்ததன்னுணர்ச்சிப்பாடல்களோடுஒ ப்பிடும்தகுதியுடையன.

உலகஇலக்கியப்படைப்புகளில்சங்கஇலக்கியத்தொடர்கள், உச்சநிலையைஎட்டிப்பிடிக்கின்றனஎன்றுகூறியுள்ளார்.

**ஜார்ஜ்எல். ஹார்ட்**

தமிழ்மொழிமிகவும்தொன்மைவாய்ந்தது. இதுசமஸ்கிருதத்திலிருந்துஉருவாகவில்லை. இதுஇந்தியாவிலேயேதோன்றியஇலக்கியமரபுடையது. சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன், சீனம், பாரசீகம், அரபுமொழிஆகியவற்றுக்குஇணையானசெவ்வியல்இலக்கியங்களைஇதுபெற்றுள்ளது. நவீனஇந்தியாவின்பண்பாட்டுமரபுஆகியவற்றுக்குமுதன்மைஆதாரமாகத்தமிழ்மொழிபயன்பட்டுவருகின்றதுஎனக்குறிப்பிட்டுள்ளனர்.

**ஏ.கே.இராமானுஜம்**

இன்றுள்ளஇந்தியமொழிகளில்செவ்வியல்மொழியாகஅமைந்துஅதேசெழுமையுடன்தொடரும்ஒரேமொழிதமிழ்என்றுசுட்டிக்காட்டியுள்ளார்.

**தாமஸ்பர்ரோ**

மொழிபழங்காலத்தில்தமிழ்மொழிலிலிருந்துஏராளமானசொற்களைக்கடன்வாங்கிக்கொண்டதுஎன்றுபெருமைபடகூறியுள்ளார்.

## செம்மொழி-இலக்கணம்

ஒருமொழிசெம்மொழிஎனவரையறுத்தற்குரியதகுதிகளுள்மிகமுதன்மையானதுஅம்மொழிசெவ்விலக்கியங்களைப்பெற்றிருத்தல்வேண்டும்என்பதாகும். ஓர்இலக்கியம்செவ்விலக்கியமாஎனஅறிதற்கானஉரைகல்லாகத்தகுதிகள்சிலவற்றைஅறிஞர்கள்குறிப்பிடுகின்றனர். அவை:

1.தொன்மை 2. பிறமொழிக்கலப்பின்மை (தூய்மை)

3.தனித்தன்மை 4. துல்லியம்

5.செறிவு 6.தனக்கேஉரிமையுடைமை

7. நேர்த்தி 8. எளிமை

9. கட்டுப்பாடு 10. உலகளாவியதன்மை

11. பலமொழிஇலக்கியங்களுக்குக்கொடை

12.பிற்காலஇலக்கியங்களுக்குவிதை (நீண்டமரபுடைமை)

13. உயர்ந்தகுறிக்கோள்

14. சமயம், இனம்முதலியசார்பின்மை

15. இயற்கைத்தனம்

16. முருகியல்

என்பனவாகும்.

செம்மைஅல்லதுசெவ்வியல்தன்மைஎன்பதற்குஆங்கிலஅகராதிகள்மிகஉயர்ந்ததரம்அல்லதுதகுதியைப்பெற்றிருத்தல் (having very high standrad or quality) என்றுவிளக்கம்தருகின்றன. மேலேகுறிக்கப்பெற்றயாவற்றையும்இத்தகையவரையறைக்குள்அடக்கிவிடலாம். செம்மைஎன்னும்தமிழ்ச்சொல்லுக்கும்குறைவில்லாதநேர்த்திஎன்றுதான்பொருள். முற்றிலும்முழுமையான (perfection) இலக்கியங்களைச்செவ்விலக்கியங்கள்எனலாம்.

செவ்விலக்கியத்திற்கானஇப்பண்புகள்யாவற்றையும்உலகளாவியசார்பற்றதும், உயர்ந்தகுறிக்கோளைஉடையதுமானகருத்துக்களை, செறிவானசொற்களால், எளியநடையில்விவரிக்கிற, தொன்மைக்காலத்திலிருந்தேதனிவகைமரபாக, ஒருகட்டுக்கோப்புக்குள்அமைக்கப்பெற்று,

தனக்குப்பின்தோன்றுகிறஇலக்கியங்களுக்குவிதையாகஇருக்கிற, இயற்கைத்தனம்நிறைந்தஇலக்கியமேசெவ்விலக்கியம்என்றுதொகுத்துக்கூறலாம்.

தொடக்கக்காலத்தில்மேலைநாட்டினரிடமேசெம்மொழி, செவ்விலக்கியம்எனமொழிகளையும்இலக்கியங்களையும்திறனாய்வுசெய்துகணிக்கும்போக்குக்காணப்பெற்றது. கிரேக்கம், இலத்தீன்மொழிகளைமட்டுமேசெம்மொழிகள்என்றும், அவற்றிலுள்ளஒருகுறிப்பிட்டகாலத்தில்தோற்றுவிக்கப்பெற்றஇலக்கியங்களைமட்டுமேசெவ்விலக்கியங்கள்என்றும்வரையறுத்தனர். பின்னர்இந்தவரிசையில்சமஸ்கிருதமொழியும்இலக்கியங்களும்உலகஅளவில் சேர்க்கப்பெற்றன. தொடர்ந்துபாரசீகம், சீனம்எனச்செம்மொழிகள், செவ்விலக்கியங்களின்தொகைபெருகியது.

## உலகச்செம்மொழிவரலாறு

உலகஅளவில்மிகத்தொன்மைக்காலத்திலேயேசெம்மொழிஎனும்சொல்லுக்குஇணையானசொற்களைப்பெயராகக்கொண்டமொழிகள்இரண்டேஎனலாம்.

ஒன்றுதமிழ்,

மற்றொன்றுசமஸ்கிருதம்.தமிழில்செந்தமிழ்எனும்சொல்செம்மைப்படுத்தப்பட்ட, செவ்வியல்தரம்வாய்ந்த, சீராக்கப்பட்ட, ஒழுங்குநெறிகளுக்குஉட்படுத்தப்பட்டதமிழ்எனப்பொருள்படும். சமஸ்கிருதம்என்பதும்அவ்வாறே. செந்தமிழ், சமஸ்கிருதம்இரண்டும்மிகப்பழங்காலத்தில்வழங்கப்பெற்றமையால்அவற்றில் பேச்சுமொழிகளும்இலக்கியவகைகளும்பல்கின. எனவேஅவையாவற்றையும்ஒருவழிப்படுத்தி, ஒருகட்டுக்கோப்பானஅமைப்பிற்குள்கொண்டுவந்தமுயற்சியின்விளைவேசெந்தமிழ், சமஸ்கிருதம்எனும்இருசொற்களுமாகும்.

இந்நாளில்உள்ளவாறானசெம்மொழிஎனும்கருத்தியலைஐரோப்பியமொழியறிஞர்களேஉருவாக்கினர். அவர்கள்கண்டறிந்ததகுதிகளின்அடிப்படையில்கிரேக்கமொழியும்இலத்தீன் மொழியும்மட்டுமேசெம்மொழிகள்எனப்போற்றப்பட்டன. கி.பி. பதினெட்டாம்நூற்றாண்டுவரையில்இவ்விருமொழிகளுமேசெம்மொழிகள்எனஅறியப்பட்டிருந்தன.

ஆனால்பதினெட்டாம்நூற்றாண்டிற்குப்பின்னர்ச்செம்மொழிப்பட்டியலில்மேலும்சிலமொழிகள்சேர்க்கப்பட்டன.

வில்லியம்ஜோன்ஸ், மாக்ஸ்முல்லர்போன்றபேரறிஞர்கள்வடமொழியானசமஸ்கிருதத்தையும்அதன் இலக்கியவளத்தையும்கற்று, உலகெங்கும்பரவச்செய்தனர். அம்மொழியின்இலக்கியங்கள்பலசெவ்வியல்தரம்மிக்குஇருத்தல்உணரப்பட்டது. கிரேக்க, இலத்தீன்மொழிகளைப்போன்றுசமஸ்கிருதமும்செம்மொழியேஎன்றுஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர்மேலும்சிலமொழிகள்இத்தகையசிறப்பினைஎய்தின.

உலகமொழிகளுள்சிலசெம்மொழிகளாகஏற்றுப்போற்றப்படுகின்றன. அவைதொடர்ந்துவிவரிக்கப்படுகின்றன.

## கிரேக்கமொழி

### ஐரோப்பியமொழிகளின்தாய்

உலகின்தொன்மையானநாகரிகத்திற்குச்சொந்தமானமாந்தர்களுள்கிரேக்கர்களும்அடங்குவர். மருத்துவம். கணிதம், வானியல், தத்துவம்எனப்பல்வேறுதுறைகளில்மாபெரும்அறிஞர்கள்பலரைஉலகிற்குஈந்தம

க்கள்கிரேக்கர்கள்.

எனவேஇவர்களின்மொழியும்பல்வேறுதுறைகள்சார்ந்தசொல்வளத்தைநிரம்பப் பெற்றுள்ளது.

கிரேக்கமொழிஆங்கிலம், இலத்தீன்போன்றஐரோப்பியமொழிகள்பலவற்றிற்குவளர்ப்புத்தாயாகிசொல்வளத்தையும்இலக்கியமுன்மாதிரிகளையும்வாரிவழங்கியுள்ளது. ஐரோப்பியமொழிகள்பலவற்றிற்குஇதுதாய்மொழியாகவிளங்குகிறது. இம்மொழிமேலைநாட்டுமொழிகளில்மிகப்பழைமையானது.

கிரேக்கமொழிசமஸ்கிருதம், இலத்தீன்மொழிகளோடுசொல்லமைப்பில்ஒப்புமைஉடையது. இம்மூன்றிலும்சொற்கள்பலஒலியமைப்பில்பெரிதும்ஒத்துக்காணப்படுகின்றன.

ஐரோப்பியர்கள்கிரேக்கமொழியேஉலகிலுள்ளமொழிகளுள்அழகு, நேர்த்தி, இனிமைஉடையதுஎன்பர். இதன்எழுத்தொலிகள்இசைபோன்றுஇனிமையும்மென்மையும்உடையனஎன்று கூறுவர்.

கிரேக்கமொழிமிகப்பழங்காலத்திலேயேசீரானஇலக்கியவளம்மிகுந்தசெம்மொழியாகும். இதுஇந்தோ-ஐரோப்பியமொழிக்குடும்பத்துக்கென்றம்என்னும்கிளையில்ஹெலனிக்பிரிவைச்சார்ந்தது.

ஐரோப்பியப்பெருநிலப்பரப்பில்வழங்குகிறமொழிகளுள்பிறமொழிகளின் உதவியின்றித்தானாகவேசெழித்துத்தழைத்தமொழி.கி.மு.2000 முதல்இந்நாள்வரையில்தொடர்ச்சியாகக்கிரேக்கமக்களின்தாய்மொழியாகவழங்கிவருகிறமொழிஎன்பனகிரேக்கமொழிக்குரியதனிச்சிறப்பாகும்.

மாமன்னன்மகாஅலெக்சாண்டரும்அவரதுதந்தைபிலிப்மன்னனும்கிரேக்கமொழியின்வளர்ச்சிக்குமுதன்மையானவர்கள். அலெக்சாண்டரின்பேரரசுபரவியிருந்தபோதுஎகிப்து, சிரியா, ஆசியாமைனர், கிரேக்கநாடுகளில்இம்மொழிஆழமாகவேரூன்றித்தழைத்துச்செழித்துஉலகமொழிஎனும்தகுதியைப்பெற்றிருந்தது.

**கிரேக்கக்கிளைமொழிகள்**

கிரேக்கமக்கள்கிரேக்கநாட்டில் (கிரீஸில்) வந்துகுடியேறுதற்குமுன்னரேகிரேக்கமொழியில்பலகிளைமொழிகள்இருந்தனஎனும்செய்திஸ்டிராபோமுதலியபழங்காலஅறிஞர்களால்கூறப்படுகிறது.

ஒவ்வொருகிளைமொழியிலும்வெவ்வேறுவகையானவாய்மொழிஇலக்கியங்கள் வழங்கின.

அயோலிக்கிளைமொழியில்கவிதைகள்,டோரிக்கிளைமொழியில்உணர்ச்சிப்பாடல்கள்,அட்டிக்கிளைமொழியில்உரைநடைஇலக்கியங்கள்எனஇலக்கியங்கள்தழைத்தன.

**கிரேக்கஎழுத்துக்கள்**

கிரேக்கர்கள்நாகரிகம், பண்பாடு, அறிவியலில்மேம்பட்டவர்கள்என்றுபாராட்டப்படுகின்றனர். ஆயினும்அவர்களதுமொழிக்குரியஎழுத்துக்கள்அவர்களுக்குச்சொந்தமானவை அல்ல.அவர்களேமுயன்றுபடைத்துக்கொண்டவைஅல்ல. 24

எழுத்துக்களைச்செமிட்டிக்குடும்பத்தைச்சார்ந்தபினீஷியமொழியிலிருந்துஅமைத்துக்கொண்டனர். இவ்வெழுத்துக்களைக்கிரேக்கர்கள்முதலில்அராபிஎழுத்துக்களைப்போன்றுவலமிருந்துஇடமாகஎழுதினர். பின்னாளில்கி.மு. நான்காம்நூற்றாண்டிற்குப்பின்னர்இடமிருந்துவலமாகஎழுதினர். ஆங்கிலம், பிரஞ்சுமுதலாயஐரோப்பியமொழிகளின்எழுத்துக்களானஇன்றையரோமன்எழுத்துமுறைக்குக்கிரேக்கமொழியேமுன்னோடிஆகும்.

**கிரேக்கஇலக்கியங்கள்**

கிரேக்கமொழியில்இந்நாளில்கிடைக்கப்பெற்றுள்ளமுதலாவதுஎழுத்து மொழிச்சான்றுகள்கல்வெட்டுவடிவில்காணப்படுகின்றன. இவைகி.மு. எட்டாம்நூற்றாண்டிற்குஉரியவை. இவைடிப்ளான்கல்வெட்டுக்கள்எனப்படுகின்றன. ஏதென்ஸ்நகரில்உள்ளன. தொடக்கத்தில்இலக்கியங்கள்எழுதப்படாது, வாய்மொழிக்கவிதைகளாகவேஇருந்தன. ஹோமர்இலியட், ஒடிசிஎனும்இருபெருங்காப்பியங்களைக்கிரேக்கமொழியின்ஒருகிளையாகியஅ யோனிக்மொழியில்எழுதினார். இவரேகிரேக்கமொழியின்'ஆதிகவி' என்றுபோற்றப்படுகிறார்.

கி.மு. நான்காம்நூற்றாண்டில்மாமன்னன்அலெக்சாண்டர்ஆட்சியின்போதுஆட்டிக்எனும்கிளைமொழிஆதரிக்கப்பட்டது.பிறகிளைமொழிகள்நாளடைவில்மறையலாயின. இலக்கியமொழிஎனும்எழுத்துமொழியாகஆட்டிக்ஏற்றம்பெற்றது. அதுவேமக்களின்பொதுமொழிஆனது.

கிரேக்கநாட்டில்வழக்கிலுள்ளஇந்நாளையகிரேக்கமொழிகி.பி.

ஆறாம்நூற்றாண்டளவில்செப்பனிடப்பட்டுஉருவானதாகும்.

கிரேக்கஇலக்கியங்களின்பிதாமகர்எனஹோமர்போற்றப்படுகிறார்.

இவரதுகாவியங்கள்இரண்டும்தெய்வங்களின்போர்த்தொடர்பானவை.

டிராய்நகரமுற்றுகையைவிவரிக்கிறவீரயுகக்காவியங்கள்இவை.சமஸ்கிருதத்தி

ன்ரிக்முதலானவேதங்களுக்குஅடுத்துமிகப்பழைமையானஎழுத்துவடிவங்களாக

இவைகருதப்படுகின்றன.

தொடக்கக்காலத்தில்கிரேக்கமொழியில்கவிதைவடிவிலேயேஇலக்கியங்க

ள்படைக்கப்பட்டன.

இலக்கியங்களைப்படைப்பதைமட்டுமேதொழிலாகக்கொண்டவர்கள்என்றுகூற

த்தகுந்தவர்கள்யாரும்இல்லை.

சமூகத்தின்பல்வேறுபணிகளைச்செய்தவர்களேபடைப்பாளிகளாகவும்இருந்தன

ர்.

இதுசங்ககாலப்புலவர்களுள்பல்வேறுசமூகஇனத்தவர்கள்இருத்தலைப்

போன்றதாகும். பின்னாளில்இலக்கியப்படைப்பாளிகளின்குழுக்கள்தோன்றின.

எங்கிலஸ்,

சோபக்கிளீஸ்போன்றநாடகப்பேரறிஞர்கள்பலநூற்றுக்கணக்கில்நாடகங்களை

எழுதிக்குவித்தனர். சைமனடீஸ், பாக்கிலிடீஸ், பிண்டர்முதலியபெருங்கவிஞர்கள்இசைப்பாடல்கள்பலவற்றையாத்தனர். சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில்போன்றபேரறிஞர்களின்கருத்துக்கள்உரைஇலக்கியங்களாகவெளிவந்தன. பிளேட்டோஎழுதியகுடியரசுஎனும்நூல்உலகப்புகழ்பெற்றது.

கிறிஸ்தவர்களும்துருக்கியர்களும்படையெடுத்துக்கிரேக்கமொழியின்வளத்தைச்சிதைத்தனர். பெரும்பான்மைநூல்கள்தீக்கிரையாக்கப்பட்டன.

கிரேக்கர்களின்தொன்மையானசமயம்வீழ்ச்சிப்பெற்றது. கிறிஸ்தவம்தழைத்தது. எனவேகிறிஸ்தவசமயம்சார்ந்தபடைப்புக்கள்பலஉருவாயின.

கிரேக்கமொழியில்இக்காலத்தில்செம்மொழி(தூயமொழி), மக்கள்மொழிஎனஇருவகைவழக்குகள்உள்ளன. செம்மொழிபழையகிரேக்கமொழியைஒட்டியஎழுத்துமொழி.இதுகல்விமொழியாகவும்அரசுமொழியாகவும்உள்ளது. மக்கள்மொழியிலேயேஎழுத்தாளர்கள்கவிதைகளைஎழுதுகின்றனர். இம்மொழியில்பிறமொழிச்சொற்கள்தாராளமாகக்கடன்வாங்கிப்பயன்படுத்தப்ப

டுகின்றன.

இவர்கள்கருத்துக்களுக்கும்உணர்ச்சிகளுக்கும்முதலிடம்தருகின்றனர்.

இத்தகையஎழுத்தாளர்களைத்தூயமொழியைப்பயன்படுத்துகிறவர்கள்எதிர்க்கி

ன்றனர்.

தமிழகத்தில்இருப்பதுபோன்றுமொழிக்கலப்புஎதிர்ப்புஉணர்ச்சிகிரேக்கர்களிட

மும்காணப்படுகிறது.

## இலத்தீன்மொழி

### கத்தோலிக்கப்போதனைமொழி

இலத்தீன்மொழிகிரேக்கமொழிக்குஅடுத்தசிறப்பிற்குஉரியசெம்மொழியா

கப்போற்றப்படுகிறது. இந்நாளில்பேச்சுவழக்கில்இல்லை.

முற்காலத்தில்கிறிஸ்தவம்பரவியநாடுகளில்எல்லாம்இதுவும்தன்விழுதுகளைஊ

ன்றிஇருந்தது.

கிறிஸ்தவம்பிளவுற்றபோதுகத்தோலிக்கர்களின்சமயப்போதனைமொழியாகப்

போற்றப்பட்டது.

இந்நாளில்இதற்கெனஉரிமையுடன்பேசத்தகுந்ததாகஎந்தவொருநாடும்இல்லை

கத்தோலிக்கர்களின்தலைமையிடமாகியவாத்திகனிலும்கூடஇம்மொழிமுழுமை

யாகப்பேணப்படவில்லை.

பேச்சுவழக்குஅற்றுப்போனசெம்மொழிகளுள்இலத்தீனும்ஒன்று.

**வீரமாமுனிவர்**

கி.பி.

பத்தொன்பதாம்நூற்றாண்டுவரையில்இலத்தீனுக்குக்கத்தோலிக்கசமயத்தில்சிறந்தசெல்வாக்குநிலவியது.

சமயத்தைப்பரப்புதற்காகஇத்தாலிநாட்டிலிருந்துதமிழகம்வந்தஇயேசுசபைஊழியர்கள்பலரும்தங்களது. குறிப்புக்களையும்இலக்கியம், மொழிநூல்களையும்இலத்தீன்மொழியிலேயேஎழுதினர்.

வீரமாமுனிவர்தமதுநூல்களுள்பலவற்றைஇம்மொழியிலேயேஎழுதினார்.

அவரதுசெந்தமிழ்இலக்கணம், கொடுந்தமிழ்இலக்கணம், கிலாவிஸ்எனும்மூன்றுஇலக்கணநூல்களும்இலத்தீனிலேயேஎழுதப்பட்டன.

கிலாவிஸ்இன்னும்மொழிபெயர்க்கப்படாமல்இலத்தீனிலேயேமுடங்கிக்கிடக்கிறது.

**பலமொழிகளின்தாய்**

இலத்தீன்கென்றம்எனும்கிளைக்குடும்பத்திலுள்ளஇத்தாலிப்பிரிவைச்சார்ந்தஇந்தோ- ஐரோப்பியமொழி. ரோமான்ஸ்மொழிகள்எனப்படும்ஸ்பானிஷ்,

போர்ச்சுக்கீஸ்,போர்ச்சுக்கீஸ்கிரியோல், பிரஞ்சு, இத்தாலி, ருமேனியன்முதலியமொழிகள்பலவற்றிற்குத்தாய்மொழி. ஆங்கிலம், பிரஞ்சுபோன்றஐரோப்பியமொழிகள்இலத்தீன்சொற்களைமிகுதியாகஉண்டு கொழுத்துச்செழித்துள்ளன. திரேக்க, சமஸ்கிருதமொழிகளின்சொற்கள், இலக்கணஅமைப்புக்களுடன்இலத்தீன்மொழிக்குமிகநெருக்கம்உண்டு.

**இலத்தீன்எனும்பெயர்**

இலத்தீன்மொழியின்பிறப்பிடம்இத்தாலிநாடாகும். டைபர்ஆற்றங்கரையில்வாழ்ந்தலேட்டியமக்களின்தாய்மொழியாகப்பேசப்பட்ட தால், இம்மொழிக்குஇலத்தீன் (லத்தீன்) எனும்பெயர்அமைந்திற்று.

**ஆட்சிமொழி**

இலத்தீன்கி.மு. ஏழாம்நூற்றாண்டில்ரோம்நகரில்மட்டுமேஆதிக்கம்செலுத்தியது. ஆனால்கி.மு.3ஆம்நூற்றாண்டில்ரோமானியர்களின்ஆட்சிபேரரசானபோதுஐ ரோப்பியநிலப்பரப்பின்பலபகுதிகளில்பரவி, அங்குப்பேசப்பட்டமொழிகள்பலவற்றிற்குஇறுதிஉண்டாக்கியது. பிரான்ஸ்,

ஸ்பெயின், டென்மார்க், போர்ச்சுக்கல்முதலியநாடுகளில்இலத்தீன்மொழியேபேராட்சிசெய்தது.

**இலத்தீன்எழுத்துக்கள்**

இலத்தீன்மொழியின்பழையஎழுத்துவடிவமாகக்கி.மு. ஏழாம்நூற்றாண்டைச்சார்ந்தகல்வெட்டுஒன்றுபிரனெஸ்டியில்கிடைத்துள்ளது. அதில்நான்குசொற்கள்மட்டுமேகாணப்படுகின்றன. கி.மு. ஆறாம்நூற்றாண்டைச்சார்ந்தகல்வெட்டுஒன்றும்கிடைத்துள்ளது. அதில்எழுத்துக்கள்கீழிருந்துமேல்நோக்கிப்படிக்கும்முறையில்எழுதப்பட்டுள்ளன. கி.மு. மூன்றாம்நூற்றாண்டுக்குப்பின்னர்ப்பலகல்வெட்டுக்கள்கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில்கவிதைகளும்வரலாற்றுக்குறிப்புக்களும்இடம்பெற்றுள்ளன.

இந்நாளில்ரோமன்எழுத்துக்கள்என்றுகூறப்படுகிற A,B,C,D….எனும்எழுத்துக்களுக்குத்தாய்வடிவம்இலத்தீன்எழுத்துக்களே. இவற்றைஇலத்தீன்மொழிஎத்துருஸ்கன், கிரேக்கமொழிகளிலிருந்துபெற்றுக்கொண்டது. ரோமன்எழுத்துக்களுள் 24 வடிவங்கள்எத்துருஸ்கனுக்குச்சொந்தமானவைஎன்பதுகுறிக்கத்தக்கது.

**இலத்தீன்இலக்கியவரலாறு**

ரோமஅரசர்கள்கிரேக்கநாட்டைவென்றபோது, கிரேக்கத்திலிருந்துபலஅறிஞர்களையும்கலைஞர்களையும்தங்கள்நாட்டிற்குப்பிடித்துச்சென்றனர். அவர்களைஆசிரியர்களாகவும்நுண்கலைத்தொழிலாளர்களாகவும்பயன்படுத்திக்கொண்டனர். கிரேக்கமொழியைப்போன்றுதங்கள்தாய்மொழியையும்வளப்படுத்தஎண்ணினர். கிரேக்கக்கல்வியாளர்களைக்கவிதை, தத்துவங்கள், காப்பியங்களைப்படைத்திடத்தூண்டினர்.

தொடக்கக்காலஇலத்தீன்மொழியில்வசைப்பாக்களேஇலக்கியவடிவில்இருந்தன. கிரேக்கமொழியின்தொடர்பினால்இம்மொழியில்பல்வேறுதுறைகளையும்சார்ந்தநூல்கள்பெருகின.

இலத்தீன்மொழியில்தொடக்கத்தில்கிரேக்கநூல்கள்மொழிபெயர்க்கப்பட்டன. பின்னர்அவற்றின்தழுவலாகப்பலஇலக்கியங்கள்எழுதப்பட்டன. இலத்தீனில்எழுதப்பட்டமுதலாவதுகாவியம்ஹோமர்கிரேக்கமொழியில்எழுதிய

ஒடிசிஆகும். - இதனைஆண்ட்ரோனிக்கஸ்மொழிபெயர்த்தார். இதுகி.மு.மூன்றாம்நூற்றாண்டில்நிகழ்ந்தது.

இத்தாலியர்களுக்கும்ரோமானியர்களுக்கும்இடையேநடைபெற்றசமூகப் போர்இலத்தீன்மொழியின்வாழ்வுக்குவளமாகஅமைந்திற்று. சமூகப்போர்க்காலம்தொடங்கிஅகஸ்டஸ்சீசரின்ஆட்சிவரையில் (கி.பி. 14வரையில்) இந்தவளம்நீடித்தது.

நேயஸ்நேவியஸ்என்னும்அறிஞர்கி.மு. மூன்றாம்நூற்றாண்டில்கிரேக்கநாடகங்களைமுன்மாதிரியாகக்கொண்டுநாடகங் கள்பலவற்றைஎழுதினார். இவரதுநாடகங்கள்மேலைநாட்டுநிகழ்வுகளைக்கருப்பொருளாகக்கொண்டிருந்த ன. இவர்பியூனிக்போரில்கலந்துகொண்டவர்.

இந்தப்பியூனிக்போர்நிகழ்ச்சிகளைக்கருவாகக்கொண்டுவர்ஜில்எனும்ம காகவிஈனிடுஎனும்காவியத்தைப்படைத்தார். இக்காவியம்ஐரோப்பியமொழிகள்பலவற்றில்மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது.

இலத்தீன்இலக்கியவரலாற்றில்குவிண்டஸ்ஈனியஸ்குறிக்கத்தக்கவர். இவர்கி.மு. மூன்றாம்நூற்றாண்டைச்சார்ந்தவர். துன்பியல்,

இன்பியல்நாடகங்கள்பலவற்றைஎழுதியவர்.

இவரதுபடைப்புக்கள்மக்களின்வாழ்வு, பண்பாடுபற்றியவை. இவரே 'இலத்தீன்இலக்கியத்தந்தை' எனும்பெருமைக்குஉரியவர்.

இலத்தீனில்கி.மு. இரண்டாம்நூற்றாண்டளவில்உரைநடைஇலக்கியங்கள்தோன்றிப்பெருகலாயின. டிஅக்ரிகல்சரஎன்பதுஇலத்தீனில்உள்ளமிகப்பழையஉரைநடைநூலாகும். இதுவேளாண்மைபற்றிஎழுதப்பட்டது.கி.மு. இரண்டாம்நூற்றாண்டில்இலத்தீன்மொழிஇலக்கணத்தைவர்ரோஜுஎன்பவர்எழுதினார்.

இலத்தீன்எழுத்தாளர்களுள்மிகவும்போற்றுதற்குஉரியவர்மார்கஸ்டல்லியஸ்சிசரோஆவார். கி.முஇரண்டாம்நூற்றாண்டின்தொடக்கத்தில் (கி.மு. 106-43) வாழ்ந்தசிசரோஒருசட்டமேதை,தத்துவப்பேராசிரியர்,அணியியல்புலவராகவிளங்கினார். இவரதுபடைப்புக்கள்தத்துவம், இலக்கியம், கடிதம், சொற்பொழிவுகள்என800க்கும்மேற்பட்வையாகும். சீர்திருத்தவாதியானஇவர்மன்னன்அந்தோனியைஎதிர்த்து 14 சொற்பொழிவுகளைமுழங்கினார். ஆட்சியாளரால்கொல்லப்பட்டார்.

அகஸ்டஸ்சீசரின்ஆட்சியின்போதுஇலத்தீன்மொழிஉரைநடைநூல்கள், இதிகாசங்கள், கவிதைகள்எனப்பல்வேறுபடிமலர்ச்சிகளுடன்தழைத்துஓங்கியது. இக்காலம்இலத்தீன்இலக்கியத்தின்பொற்காலம்எனப்படுகிறது.

அகஸ்டஸ்சீசருக்குப்பின்னர்ச்சிலஆண்டுகள்இலத்தீன்இலக்கியவெள்ளிக் காலம்எனப்படுகிறது. இக்காலத்தில்செனிக்கா, பிளினிஎனும்பெரும்அறிஞர்கள்கட்டுரைகள், கடிதங்கள், வரலாறுஎனநூல்களைஎழுதிக்குவித்தனர். பிளினிஇயற்கைவரலாறுஎழுதுவதில்வல்லவர்.

கி.மு. இரண்டாம்நூற்றாண்டின்இறுதியில்கிறிஸ்தவசமயத்தின்ஆதிக்கம்ஏற்பட்டது. இலத்தீன்கிறிஸ்தவர்களின்புனிதமொழியானது. கிறிஸ்தவபள்ளிகளிலும்இம்மொழிஆட்சிமடங்களிலும்செலுத்தியது. கிறிஸ்தவத்தைஒட்டிநூல்கள்பலஎழுதப்பட்டன.

# சீனமொழி

**சீனஎழுத்துக்கள்**

சீனமக்கள்தங்கள்எழுத்துக்களேஉலகில்மிகத்தொன்மையானதுஎன்றுகூறிக்கொள்வதில்பெருமைகொள்கின்றனர். சீனமொழியிலுள்ளஎழுத்துக்களையும்வேதங்களையும்கடவுளேபடைத்தார்என்பதுஅவர்களதுநெடுங்காலத்தையநம்பிக்கையாகும்.

சீனமொழிப்பற்றாளர்கள்தங்கள்எழுத்துக்கள் 10 இலட்சம்ஆண்டுகளுக்கும்முந்தையதுஎன்றுகூறுகின்றனர். சீனப்புலவர்கள்சிலர்கி.மு.முப்பதாம்நூற்றாண்டில்ட்ஸங்-சிஎனும்அமைச்சரேஎழுத்துக்களைஉருவாக்கினார்என்கின்றனர். ஆனால்மொழியறிஞர்களோட்ஸங்-சிஎன்பவர்அவருக்குமுன்னர்வழங்கியஎழுத்துக்களைச்சீர்மைப்படுத்தினார்என்றுகூறுகின்றனர்.

உலகமாந்தர்களுள்சீனர்கள்மிகத்தொல்காலத்திலேயேஎழுத்துக்களைஉருவாக்கிக்கொண்டனர். பழையஎழுத்துக்கள்இந்நாளில்வழக்கில்இல்லை. கி.மு. ஒன்பதாம்நூற்றாண்டில்லி-ஸுஎனும்அமைச்சரால்சீர்செய்யப்பட்டன.

சென்மோஎனும்அறிஞரும்சீர்திருத்தம்செய்தார்.கி.பி.1913ஆம்ஆண்டுசீனஅரசுஎ

ழுத்துக்களில்சிலசீர்திருத்தம்செய்தது.

சீனஎழுத்துக்களைஉரோமன்எழுத்துக்களால்எழுதுகிறமுறையைஅரசுஅறிவிக்க

வேண்டும்என்றுஇயக்கங்கள்சிலவிரும்புகின்றன.

இவ்வாறுசீனஎழுத்துக்களின்வரலாறுஒருசீர்திருத்தவரலாறாகக்காட்சிதருகிறது.

***சீனஇலக்கியங்கள்***

சீனமொழிசீனநாட்டின்தேசியமொழியாகும்.

இதனைநூறுகோடிக்கும்மிகுதியானமக்கள்பேசுகின்றனர். இதுசீனோ-

திபெத்தியமொழிக்குடும்பத்தைச்சேர்ந்தஒருசெம்மொழி.

சீனப்படைப்புக்கள்பண்டையநூல்கள், வரலாற்றுநூல்கள்,

தத்துவநூல்கள், இலக்கியங்கள்எனநான்குவகைப்படும்.

பண்டையநூல்கள்பலஅவ்வப்போதுஅழிக்கப்பட்டுவிட்டன.

பேரறிஞர்கன்பூசியஸ்எழுதியநூல்களேமிகப்பழைமையானவை. இவைகி.மு.

ஆறாம்நூற்றாண்டைச்சேர்ந்தவை.

இவற்றுக்குவிளக்கஉரைநூல்கள்பலஎழுதப்பட்டன.

தாவோகொள்கைகளைவிளக்குகிறநூல்களும்சீனமொழியில்ஏராளம்.

சீனமொழியில்நாடகம், கவிதை, உரைவிளக்கம்எனப்பலவகைகளில்இலக்கியவளம்பெருகியுள்ளது. சீனநாடகங்களும்பிறஇலக்கியங்களும்தொடக்கக்காலத்தில்கவிதைநடையில்எழுதப்பட்டன. பின்னாளில்கவிதையின்இடம்உரைநடைக்குக்கைமாறியது.

இக்காலச்சீனஇலக்கியங்கள்மேலைநாட்டுஇலக்கியங்களைமாதிரியாகக் கொண்டுபடைக்கப்படுகின்றன. சிறுகதைகள், புதினங்கள், இதழ்கள். பாடநூல்கள்எனமக்களின்பேச்சுமொழிஎல்லாத்தளங்களிலும்பேராட்சிசெலுத்தி வருகிறது.

## ஈப்ருமொழி

ஈப்ரு (ஹீப்ரு)மொழிஎபிரேயமொழிஎன்றும்கூறப்படுகிறது. இதுசெமிட்டிக்மொழிகளிலுள்ளஒருசெம்மொழியாகும். நெடுங்காலமாகமறைந்துபோனஇதன்பேச்சுவழக்கிற்குஇஸ்ரயேல்அரசுபுத்துயிர்ப்புஅளித்துவருகிறது. இஸ்ரயேலிலும்பாலஸ்தீனநாட்டிலும்ஈப்ருஆட்சிமொழியாகிஉள்ளது.

ஈப்ருமொழியூதமக்களின்தாய்மொழிகி.மு.

மூவாயிரம்ஆண்டிற்குமுந்தையஇலக்கியவரலாறுஇதற்குஉண்டு. யூதர்களின்சமயமறையாகியதால்மதுவும்கிறிஸ்தவர்களின்பழையஏற்பாட்டில்உள்ளமோசசுக்குக்கடவுளின்கட்டளைகளும்பழங்காலஈப்ருமொழியில்எழுதப்பெற்றவை. இயேசுகிறிஸ்துபேசியமொழிகளுள்இதுவும்ஒன்று.

யூதர்கள்பாலஸ்தீனநாட்டிலிருந்துவிரட்டப்பெற்றுவெவ்வேறுநாடுகளில் சென்றுகுடியேறினர். அங்குப்பேசப்பட்டமொழிகளின்கலப்போடுதம்தாய்மொழிஈப்ருவைப்பேசினர். அதனால்ஈப்ருமொழியில்பல்வேறுமொழிகளின்கலப்புஉண்டானது.

ஈப்ருமொழியில்பலஅராபிநூல்கள்மொழிபெயர்க்கப்பெற்றன. அதனால்அராபிச்சொற்கள்மிகுதியாகக்கடன்வாங்கப்பெற்றன.

கி.பி.

பத்தொன்பதாம்நூற்றாண்டில்ஈப்ருமொழியைமீண்டும்பேச்சுமொழியாக்குதற்கு முயற்சிமேற்கொள்ளப்பட்டது. அம்முயற்சிவெற்றியும்எய்தியது.

ஈப்ருமொழிஇலக்கியப்படைப்பாளிகளுள்சீதியாபென்ஜோசப், ஷெரீரா, ராஷி, ஜூடாஹாலெவிமுதலியோர்குறிக்கத்தக்கவர்கள். இவர்களுள்ஜூடாஹாலெவி'ஈப்ருக்கவிதைமணி' எனப்போற்றப்படுகிறார்.

தொடக்கக்காலத்தில்சமயக்கருத்துக்களேஇலக்கியங்களுக்குக்கருக்களாக இருந்தன.

ஆனால்இக்காலத்தில்பிறமொழிகளிலுள்ளதுபோன்றுஈப்ருவிலும்மேலைநாட்டு முறையில்இலக்கியங்கள்மக்கள்வாழ்வியலைமையப்பொருளாகக்கொண்டுஎழு தப்படுகின்றன. சிறுகதை,கவிதை, கட்டுரைஎனஇலக்கியவளர்ச்சிதொடர்கிறது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கிரேக்கஇலக்கியங்கள்குறித்துஎழுதுக. | K4 | CO1 | PO4 |
| 2 | செம்மொழிகளின்தகுதிகள்யாவை? | K5 | CO2 | PO5 |
| 3 | ஈப்ருமொழிகுறித்துவிளக்குக. | K3 | CO4 | PO1 |
| 4 | கத்தோலிக்கபோதனைமொழியைப்புலப்படுத்துக. | K5 | CO2 | PO2 |
| 5 | சீனமொழிகுறித்துவிளக்குக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | உலகசெம்மொழிவரலாறுபற்றிவிரித்துரைக்க. | K2 | CO5 | PO4 |
| 2 | இலத்தீன்இலக்கியவரலாறுகுறித்துவிளக்குக. | K3 | CO3 | PO6 |
| 3 | செம்மொழிகுறித்தஅறிஞர்களின்கருத்துக்களைவிவரிக்க. | K2 | CO5 | PO5 |
| 4 | ஐரோப்பியமொழிகளின்தாய்கிரேக்கம்என்பதனைநிறுவுக | K5 | CO3 | PO6 |
| 5 | செம்மொழிஇலக்கணம்குறித்துவிவரி | K3 | CO3 | PO3 |

# அலகு – 2

## தமிழ்-செம்மொழிஏற்பளிப்பு

தமிழ்மொழிஇனிமையும்நெகிழ்வாகியஎளிமையும்உடையமொழி.எனவே இம்மொழிமாறிவருகிறகாலத்தின்பண்பாட்டுச்சூழலையும்,அறிவியல்வளர்ச்சி யையும்தனக்குள்ஈர்த்துக்கொண்டுநிலைத்துநிற்கிறது. காலச்குழலுக்கேற்பச்சமூகத்தின்தேவைகளுக்குஏற்பமொழியமைப்பிலும்இலக்கி யக்கொள்கைகளிலும்புதுமைகளைப்படைத்துவருகிறது.

**'கடிசொல்இல்லைகாலத்துப்பாடினே'**என்றுதொல்காப்பியம்கூறுகிறது. இதனையே,

**புதியனபுகுதலும்பழையனகழிதலும்**

**வழுவலகாலவகையினானே**

என்றுநன்னூல்விவரிக்கிறது.

புதியனபுகுதல்,பழையனகழிதல்எனும்இவ்விருகொள்கைகளும்தமிழ்மொழிபல் லாயிரம்ஆண்டுகளாகஅழியாஇளமையுடன்கன்னித்தமிழாகவளர்ந்துவருதற்குக் காரணமாகும்.

### இலக்கணஇலக்கியவளர்ச்சி

தமிழில்காலந்தோறும்புதிதுபுதிதாகஇலக்கணநூல்களும்இலக்கியச்செல்வங்களும்தோற்றுவிக்கப்பெற்றுவளம்தொடர்ந்துபெருகிக்கொண்டிருக்கிறது. தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், யாப்பருங்கலம், தண்டியலங்காரம், மாறனலங்காரம்எனமொழி, இலக்கியஅமைப்புக்களைவிவரிக்கிறஇலக்கணநூல்கள்முழுமையாகவும்பகுதியாகவும்பெருகிஇருத்தற்குக்காலத்தின்தேவையேகாரணம்ஆகும்..

இலக்கணப்பகுப்பிலும்மாற்றங்கள்ஏற்பட்டுள்ளன. தொடக்கநிலையில்எழுத்து, சொல், பொருள்எனமூன்றுபிரிவுகள்மட்டுமேஇருந்ததற்குத்தொல்காப்பியம்சான்றாகநிற்கிறது. ஆனால்அம்மூன்றனுள்அடக்கிவிவரிக்கப்பெற்றகருத்துக்கள்பின்னாளில்ஐந்தாகப்பிரிக்கப்பெற்று, விரிவாகக்கூறப்பெற்றன. பொருள்எனும்பகுதிபொருள், யாப்பு, அணிஎனமூன்றுபெரும்தனித்தனிஇலக்கணங்களாகக்கருதப்பெற்றன.

பொருளும்பின்னாளில்அகப்பொருள், புறப்பொருள்எனத்தனிப்பகுப்பினைக்கொண்டது. நம்பியகப்பொருள், புறப்பொருள்வெண்பாமாலைஎனும்சீர்மிகுஇலக்கணநூல்கள்இதனாலேயேதோற்றுவிக்கப்பெற்றன.

இத்தகையவளர்ச்சியாப்புஎனும்செய்யுள்இலக்கணத்திலும்உருவானது. அதுயாப்பு, பாட்டியல்எனத்தனித்தனியாக்கப்பெற்று, பலபாட்டியல்நூல்கள்தோன்றி, இலக்கியவகைகளின்இலக்கணத்தைவிவரித்தன.

தமிழ்இலக்கணக்கொள்கைகளில்தேவைக்கேற்பமாற்றம்ஏற்பட்டதைப் போன்றுஇலக்கியங்களிலும்உருவானது, தனிமனிதனின்அக, புறஉணர்வுகளைவெளிப்படுத்துகிறதுண்டுப்பாடல்களாகச்சிலஅடிகளில்செறிவானபொருள்கொண்டசிலசொற்களில்பண்டைக்காலப்புலவர்கள்பாடினர். செய்யுள்வடிவம்சிறிதாகவும்பொருண்மைஆழமாகப்பெரிதாகவும்இருந்ததால்உள்ளுறை, இறைச்சிபோன்றபடிமங்களைவிவரிப்புமுறைகளாகப்புகுத்தினர். எட்டுத்தொகைப்பாடல்களில்இம்முறையைத்தெளிவாகக்காணலாம்.

ஆனால்நாளடைவில்விரிவாகக்கதைபோன்றுகருத்துக்களைக்கேட்கிறமாந்தரின்விருப்பம்முதன்மைபெற்றது. அதனால்நூற்றுக்குமேற்பட்டஅடிகளைக்கொண்டபாடல்கள்சொற்கள்பலவற்றால்ஆக்கப்பெற்றன. பத்துப்பாட்டில்இடம்பெற்றுள்ளபாடல்கள்யாவும்இத்தகையன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம்எனக்காப்பியங்கள்தோன்றின. இக்காலத்தில்சீர்திருத்தச்சமூகக்கருத்துக்கள்மக்களின்தேவையாகஇருந்தன. சமயச்சார்புஅல்லதுசார்பின்மையுடன்இவைவிரிவாகக்கதைகளாகப்புனையப்பட்டன. இவ்வாறேஅறஇலக்கியங்கள், பக்திஇலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், புதுக்கவிதைகள், ஐக்கூக்கவிதைகள், திரையிசைப்பாடல்கள்எனத்தமிழ்க்கவிதைகள்காலத்திற்கேற்பக்கருத்திலும்வடிவத்திலும்மாறுதல்களைஏற்றுக்கொண்டுநிலைத்துநிற்கின்றன.

அச்சுப்பொறிகண்டறியப்பட்டு, மக்களாட்சிபரவிநிலைத்தஇந்நாளில்கல்விஇன, பொருளியல்கட்டுப்பாடுகளைக்கடந்துமக்கள்அனைவருக்கும்பொதுச்சொத்தாக ஆயிற்று. தங்குதடையின்றிக்கருத்துக்களைஎடுத்துரைத்தற்கும்சுவைப்பதற்கும்ஏற்றதாகஉரைநடைஇருந்ததால், உரைநடைஇலக்கியஇலக்கணஉலகின்ஆட்சியைப்பற்றிக்கொண்டது. சிறுகதை, நெடுங்கதை,

கட்டுரைகள்எனயாவும்உரைநடையிலேயேஎழுதப்படுகின்றன.

இந்நிலைதமிழில்மட்டுமன்றி,

உலகில்உள்ளஅனைத்துமொழிகளிலும்காணப்படுகிறஉண்மையாகும்.

**அறிவியல்தமிழ்**

இயல், இசை, நாடகம்எனமூன்றுபெரும்பிரிவுகளாகத்தமிழ்இலக்கியங்களைப்பகுத்துப்பழந்தமிழ்அறிஞர்கள்போற்றினர். ஆனால்இந்நாளில்கவின்தமிழ், அறிவியல்தமிழ்எனும்பகுதிகளும்தோற்றுவிக்கப்பெற்று, மக்களின்இக்காலத்தேவையைநிறைவுசெய்யும்ஆற்றலைத்தமிழ்மொழிபெற்றுள்ளது.

இருபதாம்நூற்றாண்டின்இறுதியில்தொடங்கிஇந்நாள்வரையிலும்அறிவியலின்ஆதிக்கம்உலகமக்களின்சமூகத்தைப்பற்றிப்பிணித்துக்கொண்டிருக்கிறது. எனவே, அறிவியல்தேவைக்குஏற்பத்தமிழும்தன்னைவளர்த்துக்கொண்டிருக்கிறது. புதியஅறிவியல்கலைச்சொற்கள்ஆக்கப்படுகின்றன. அறிவியல்துறைதோறும்பாடநூல்கள்எழுதப்பெற்றுவருகின்றன.

பள்ளி, கல்லூரிகளில்அறிவியலைக்கற்பிக்கிறபயிற்றுமொழியாகத்தமிழ்வளர்ச்சிபெற்றுள்ளது. பொறியியல்கல்வி, மருத்துவக்கல்விபோன்றதொழிற்கல்விகளிலும்தமிழ்பயிற்றுமொழியாக்கப்படுதல்வேண்டும்என்பதேதமிழ்அறிஞர்களின்அவா. இந்தஅவாநிறைவேறிக்கொண்டிருக்கிறது.

தமிழில்பொறியியல்பயிலும்மாணாக்கர்களுக்குஅரசுப்பணிகளில்முன்னுரிமைவழங்கப்படும்எனும்ஆணையைத்தமிழகஅரசுபிறப்பித்துள்ளது. அரசுப்பொறியியல்கல்லூரிகளில்மாணாக்கர்கள்தமிழ்வழியில்பயிலுதற்குச்சேர்ந்துள்ளனர்.

## இணையப்பல்கலைக்கழகம்

கணிப்பொறிகண்டறியப்பட்டதன்விளைவாகமிகமேம்பட்டவளர்ச்சியைப்பெற்றதுறைதகவல்தொடர்பியல்எனின்அதுமிகையாகாது. கணிப்பொறியின்உதவியோடுஎண்ணற்றநூல்களைமிகக்குறைந்தகாலத்தில்குறைந்தபொருட்செலவில்அச்சேற்றிவெளியிடமுடியும். ஆனால்நூல்களேஇல்லாமல்மிகுதியானகருத்துக்களைக்கணினியில்உள்ளஇ

ணையத்தளத்தின்வழிஅறிந்துகொள்ளஇயலும். இந்நாளில்எல்லாத்துறைகளும்இணையத்தின்ஆதிக்கத்திற்குஉட்பட்டுள்ளன. தமிழ்மொழியும்இணையத்தைத்தனதுவளர்ச்சிக்குப்பெரிதும்பயன்படுத்திக்கொண்டுள்ளது. உலகமொழிகளில்சீனமொழிக்குஅடுத்துஇணையத்தைமிகுதியாகப்பயன்படுத்திக்கொண்டிருக்கிறமொழிதமிழேஆகும்.

தமிழின்மொழி, இலக்கியம், பண்பாடுஎனும்அனைத்துநிலைகளுக்கும்இணையத்தளங்கள்பலஉள்ளன.

தமிழ்இணையப்பல்கலைக்கழகம்ஒன்றுசென்னைமாநகரம்தரமணியில்உள்ளது. இப்பல்கலைக்கழகத்திற்கானஅறிவிப்பு 2000-ஆம்ஆண்டுசூலைத்திங்கள் 5-இல்அரசிடமிருந்துவெளியானது. மறுஆண்டுபிப்ரவரி 17-இல்இப்பல்கலைக்கழகம்செயல்படத்தொடங்கியது.

இணையப்பல்கலைக்கழகம்தமிழ்மொழிவளர்ச்சிக்கானதிட்டங்கள்பலவற்றைச்செயற்படுத்திவருகிறது. உலகஅளவில்இதற்குமுப்பத்தேழுமையங்கள்உள்ளன. சான்றிதழ்,

பட்டயப்படிப்புக்களைத்தமிழுக்காகநடத்துகிறது. அயல்நாட்டுமாணாக்கர்கள், பலர்இதனால்பயனடைந்துகொண்டிருக்கின்றனர். அவ்வாறேஇதில்இளநிலைப்பட்டத்திற்கானவகுப்புக்களும்நடத்தப்பெறுகின்றன. இந்தப்படிப்பிற்கானசான்றிதழ்களையும்பட்டங்களையும்தஞ்சாவூர்தமிழ்ப்பல்கலைக்கழகம்வழங்கிவருகிறது. முதுகலைத்தமிழ்ப்படிப்பிற்கானமுயற்சியும்உள்ளது.

இணையப்பல்கலைக்கழகத்தின்தமிழ்ப்பணிகளுள்கலைச்சொல்அகராதித் தயாரிப்புமுதன்மையானது. பதினான்குதொகுதிகள்வெளியிடுவதுஇப்பணியின்இலக்காகும். இந்நாள்வரையில்பன்னிரண்டுதொகுதிகள்வெளியிடப்பெற்றுள்ளன.

தமிழ்இலக்கண, இலக்கியங்கள்பெரும்பான்மையும்இணையத்தளத்தில்பதிவுசெய்யப்பெற்றுள்ளன. திருக்குறளுக்குமேற்கொள்ளப்பெற்றிருக்கும்மொழிபெயர்ப்புகள்யாவும்இதில்பதிவாக்கம்பெற்றுள்ளன. மென்பொருள்கள்பலவற்றைத்தமிழில்உருவாக்கிவருகின்றனர். தவிர,

பிறர்உருவாக்குகிறமென்பொருள்களையும்தக்கவிலைகொடுத்துவாங்குகின்றன
ர்.

அறிவியல்காலத்துச்சூழலுக்குஏற்பத்தமிழ்மொழியும்வளர்ந்துவருகின்றது. இதன்வளர்ச்சிபல்வேறுஆற்றான்நாள்தோறும்தொடர்ந்துகொண்டிருக்கிறது. தமிழ்மொழிதுறைதோறும்வளரும். வளம்கொழித்துவளரும்.

## தமிழ்ச்செம்மொழிவரலாறு

### மொழிஅறிஞர்களின்ஏற்பு

'சொல்லில்உயர்வுதமிழ்ச்சொல்லே' என்றும் 'உயர்தனிச்செம்மொழி' என்றும்தமிழ்போற்றப்படுகிறது. இயல்பாகவேநெடுங்காலத்திற்குமுன்னரேசெவ்வியல்பண்புகளை - தகுதிகளைப்பெற்றிருந்ததமிழ்மொழிக்குசெம்மொழிஎன்றஅரசின்ஏற்பினைப் (அங்கீகாரத்தைப்) பெறுதலில்ஓர்வரலாறேமுகிழ்த்துவிரிந்துவிட்டது. தங்கத்தைஅதுதங்கமேஎன்றுஏற்றுக்கொள்ளுதற்குப்போராட்டம்நிகழ்த்தியதைப் போன்றதுதமிழ்ச்செம்மொழிஏற்புப்போராட்டமும்எனலாம்.

அமெரிக்கநாட்டுக்கலிபோர்னியாபல்கலைக்கழகத்தில்தமிழியல்துறைத்தலைவராகப்பணிபுரிகிறபன்மொழிஅறிஞர்பேராசிரியர்ஜார்ஜ்எல். ஹார்ட், 'தமிழ்ஒருசெவ்வியல்மொழி'

என்றகருத்தைநிலைநாட்டுவதற்காகநான்இதைப்போல்ஒருகட்டுரைஎழுதவேண்டியுள்ளதுஎன்றஎண்ணமேஎனக்குஇயல்புக்குமாறானவிந்தையானதாகத்தோன்றுகிறது. இச்செய்திஎப்படிஇருக்கிறதுஎன்றால், 'இந்தியாஒருபெரியநாடு, இந்துசமயம்உலகின்மிகப்பெரும்சமயங்களுள்ஒன்றுஎன்னும்கூற்றைநிலைநாட்டுவதற்குமுற்படுவதுபோன்றுள்ளது' என்றுகூறுதல்இங்குக்குறித்தற்குரியது.

தமிழ்மிகத்தொன்மையானதும்நன்குசீர்செய்யப்பெற்றதுமானசெவ்வியல்தரமுள்ளமொழிஎன்பதனைமேலைநாட்டுமொழியறிஞர்கள்பலரும்அவ்வப்போதுகுறிப்பிட்டுள்ளனர்.

வீரமாமுனிவர்தமிழ்மொழிஇருவகைவழக்குகளானசெந்தமிழுக்கும்கொடுந்தமிழுக்கும்இலக்கணங்கள்எழுதியவர்.தேம்பாவணிஎனும்பெருங்காப்பியமும்பலசிற்றிலக்கியங்களும்அகராதிகள்,

உரைநடைநூல்கள்எனப்பலவகைஇலக்கியவளங்களைத்தமிழுக்குப்பெருக்கியவர்.

அவர்தம்நூல்களில்வாய்க்குந்தோறும்தமிழ்மொழியின்செவ்வியல்சிறப்புக்களையும்இலக்கியங்களின்விழுமியங்களையும்பாராட்டிஎழுதியுள்ளார்.

தமிழ்மொழியின்செவ்வியல்பண்புகளேவீரமாமுனிவரைஒத்தமேலைநாட்டுஅறிஞர்களைத்தமிழைஊன்றிப்பயிலவும்சுவைக்கவும்தூண்டின.

'திராவிடமொழிகளுள்தமிழ்மட்டுமேமிகமிகத்தொன்மைவாய்ந்ததும்பெரு வளம்பொருந்தியதும்மிகவும்சீர்திருந்தியதுமானஉயர்தனிச்செம்மொழியாகும். இம்மொழிசொல்வளம்மிக்கது. அளவிட்டுக்கூறுதற்குஇயலாததொன்மைக்காலத்திலிருந்தேவழங்கப்படுகிறது. இதில்வகையாகவும்,தொகுப்பாகவும்,தனிப்பாடலாகவும்கணக்கிலாஇலக்கியங் கள்உள்ளன. அவையாவும்திருந்தியவடிவமானசெந்தமிழால்ஆனவை.' இவ்வாறுஇந்தியாவின்மொழிஆய்வுஎனும்நூலில்அறிஞர்கிரியர்சன்விவரிக்கிறா ர். இவர்இந்தியமொழிகள்யாவற்றையும்கணக்கெடுத்துஆய்வுசெய்தவராவார்.

தமிழைமிகவும்தொன்மையும்மிகமிகஉயர்ந்தசெம்மையாக்கப்பெற்றதுமா னசெம்மொழிஎன்றுகால்டுவெல்குறிப்பிடுகிறார். இவ்வாறேவின்ஸ்லோ, ஜி.யு.போப், கமில்சுவலபில்முதலியஅயல்நாட்டார்பலரும்தமிழ்மிகச்சிறந்தசெம்மொழிஎன்று விவரிக்கின்றனர்.

இந்தியமொழியியல், வரலாற்றுஅறிஞர்கள்பலர்தமிழ்பண்டைக்காலத்திலேயேசெவ்வியல்தரம்மிகுந்து விளங்கியதைவிவரிக்கின்றனர்.

சுனிதிகுமார்சட்டர்ஜிவங்கமொழியின்பிறப்பும்வளர்ச்சியும்எனும்நூலில் 'முற்காலத்தில்தமிழ்இந்தியத்துணைக்கண்டம்முழுவதுமாகப்பேசப்பட்டது' என்றும் 'தமிழ்ச்சொற்கள்ரிக்வேதத்தில்கலந்துசமஸ்கிருதவளர்ச்சியில்பங்குபெற்றிருந்தன' என்றும்சான்றுகளுடன்விவரிக்கிறார்.

**பரிதிமாற்கலைஞரின்முழக்கம்**

தமிழ்ஒருபண்பட்டதொன்மையானசெம்மொழியாயினும்அதனைஉலகுக்குஎடுத்துரைக்கும்குரல்கள்ஓங்கிஎழவில்லை, இந்தக்குறைமதுரைதமிழ்ச்சங்கநிறுவனர்வள்ளல்பாண்டித்துரைத்தேவர், தமிழவேள்உமாமகேசுவரம்பிள்ளை, கா.சு. பிள்ளை, தேவநேயப்பாவாணர்போன்றதமிழறிஞர்கள்பலரின்நெஞ்சளவில்உறுத்திக்கொண்டிருந்தது. அதனைஅறிஞர்கள்நடுவிலும்அரசின்காதுகளிலும்ஓங்கிஒலிக்கச்செய்துஅடித்தளம்அமைத்தவர்களுள்முதன்மையானவர்பரிதிமாற்கலைஞரேஎனின்மிகையாகாது.

வி.கோ. சூரியநாராயணசாஸ்திரிஎன்றுபெற்றோரும்உற்றாரும்தமக்குச்சூட்டியபெயர்வ

டமொழிஎன்பதைஉணர்ந்துபரிதிமாற்கலைஞர்என்றுதமிழ்ப்படுத்திக்கொண்டவ ர்.

அத்தமிழ்ப்பெரியார்தமிழைச்செம்மொழியாகச்சென்னைப்பல்கலைக்கழகம்ஏற் றுஅறிவித்தல்வேண்டும்என்றுகுரல்எழுப்பினார்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்வெளியீடாகியசெந்தமிழ்இதழில்பரிதிமாற்க லைஞர்தமிழ்செம்மொழியாகஅறிவிக்கப்படவேண்டும்எனும்தம்கோரிக்கையை எழுப்பினார்.

“தென்னாட்டின்கண்சிறந்தொளிரநின்றநம்அமிழ்தினுமினியதமிழ்மொழிஎ வ்வாற்றானும்உயர்தனிச்செம்மொழியாம்என்பதுதிண்ணம்.

இத்துணைஉயர்வும்சிறப்பும்வாய்ந்தநம்அருமைத்தமிழ்மொழியைஉண்ணாட்டு ப்புன்மொழிகளோடும்ஒருங்குஎண்ணுதல்தவிர்த்து, வடநாட்டுஉயர்தனிச்செம்மொழிசமஸ்கிருதமெனக்கொண்டாற்போலத்தென் னாட்டுஉயர்தனிச் "செம்மொழி" தமிழெனக்கொண்டுவிதிகள்வகுத்தலேஏற்புடைத்தாம்"என்று 1902இல்எழுதினார்.

பின்னர்அவர்அடுத்தஆண்டில்எழுதிவெளியிட்டதமிழ்மொழியின்வரலாற்றில்,

செம்மொழிஎன்பதற்கானவரைவிலக்கணத்தையும்அதனோடுதமிழ்மொழியைப் பொருத்தியும்விவரித்தார்.

"வடமொழி, இலத்தீன், கிரீக்முதலியனபோலத்தமிழ்மொழியும்உயர்தனிச்செம்மொழியாம்என்பதைகாண்போம்.

தான்வழங்கும்நாட்டின்கண்ணுள்ளபலமொழிகட்குத்தலைமையும்அவற்றினும்மிக்கமேதமையுமுள்ளமொழியேஉயர்மொழி, இவ்விலக்கணத்தால்ஆராயுமிடத்துத்தமிழ் - தெலுங்குமுதலியவற்றிற்குஎல்லாம்தலைமையும்அவற்றினும்மிக்கமேதமையும்உடைமையால்தானும்உயர்மொழியேஎன்க.

தான்வழங்கும்நாட்டில்பயிலும்மற்றையமொழிகளின்உதவியின்றித்தனித்துஇயங்கவல்லஆற்றல்சான்றதேதனிமொழிஎனப்படும்.

தான்பிறமொழிகளுக்குச்செய்யும்உதவிமிகுந்தும், அவைதனக்குச்செய்யும்உதவிகுறைந்தும்இருத்தலேவழக்காறு.

தமிழ்மொழியின்உதவிகளையப்படின், தெலுங்குமுதலியனஇயங்காது.மற்றும்தமிழ்அவற்றின்உதவிஇல்லாமலேயேசிறிதும்இடர்ப்படுதல்இன்றித்தனித்துஇனிமையாகஇயங்கவல்லது.

இஃதுஇந்தியமொழிநூற்புலவர்கள்பலர்க்கும்அறியமுடிந்தது.

ஆதலின்தமிழ்தனிமொழியேதமிழ்என்க.

செம்மொழியாவதுயாதுஎனின்,திருந்தியபண்புஞ்சீர்த்தநாகரிகமும், பொருந்தியதூய்மொழிபுகல்செம்மொழியாம்என்பதுஇலக்கணம். இம்மொழிநூலிலக்கணம்தமிழ்மொழியின்கண்ணும்அமைந்திருத்தல்தேற்றம். இடர்ப்பட்டசொல்முடிவுகளும்பொருள்முடிவுகளுமின்றிச்சொற்றான்கருதியபொருளைக்கேட்டான்தெள்ளிதின்உணரவல்லதாய்ப்பழையனகழிந்துபுதியனபுகுந்து திருத்தம்எய்திநிற்றலேதிருந்தியபண்பெனப்படுவது. இதுதமிழ்மொழியின்கண்முற்றிலும்அமைந்திருக்கிறது.

நாட்டின்நாகரிகமுதிர்ச்சிக்கேற்பச்சொற்களும்ஏற்பட்டுப்பாஷைக்கும்நாகரிகநலம்விளைத்தல்வேண்டும். அவ்வாறுசொற்கள்ஏற்படுமிடத்துப்பிறபாஷைச்சொற்களின்றிதன்சொற்களேமிகுதல்வேண்டும். இவையும்உயர்தனிமொழிக்குப்பொருந்துவனவாம்.

ஆகவேதமிழ்தனிமொழிக்குப்பொருந்துவனவாம். தமிழ்தூயமொழியேயாம். எனவேதமிழ், செம்மொழியென்பதுஉறுதி.இதுபற்றிஅன்றேதொன்றுதொட்டுத்தமிழ்மொழிசெ

ந்தமிழ்எனநல்லிசைப்புலவரால்நவின்றோதப்பெறுவதாயிற்று.

ஆகவேதென்னாட்டின்கண்சிறந்தொளிராநின்றஅமிழ்தினும்இனியதமிழ்மொழி எவ்வாறுஆராய்ந்தவழியும், உயர்தனிச்செம்மொழியேயாம்என்பதுநிச்சயம். இவ்வளவுஉயர்வும்சிறப்பும்வாய்ந்தஅருமைத்தமிழ்மொழியைதனிச்செம்மொழி எனக்கொண்டுவாழ்த்திடவேண்டும்.

சமஸ்கிருதத்திற்குஇணையாகக்செம்மொழியாகக்கொள்ளாததோடு, உயர்தனிச்செம்மொழியானதமிழ்மொழியைமலையாளம், தெலுங்கு, இந்தி, பஞ்சாபிபோன்றஇலக்கியஇலக்கணச்சீர்மையில்லாதபுதிதாகப்பிறந்தமொழிகளுடன்ஒப்பக்கருதியதுபரிதிமாற்கலைஞரைப்பெரிதும்புண்படுத்திவிட்டது.

சென்னைப்பல்கலைக்கழகம்தெலுங்கு, தமிழ்முதலியஇந்தியமொழிகளைப்பாடத்திலிருந்துநீக்குதற்குமுயன்றது. அதனைக்கடுமையாகஎதிர்த்தபரிதிமாற்கலைஞர்தம்முடன்பணிபுரிந்தஅறிஞர்பூர்ணலிங்கம்பிள்ளையுடன்சென்னை / மாநகரின்இல்லந்தோறும்சென்றுஅக்கொடுமையைஎடுத்துரைத்தார். பல்கலைக்கழகம்தனதுமுயற்சியைக்கைவிட்டது.

**சங்கங்களின்தீர்மானங்கள்**

தமிழ்மொழியைச்செம்மொழியாகஅறிவிக்குமாறுசிலஅமைப்புக்களும்குரல்எழுப்பின. சைவசித்தாந்தமகாசமாஜம் 1918ஆம்ஆண்டுமார்ச்சுத்திங்கள் 15ஆம்நாளில்சென்னைப்பச்சையப்பன்கலாசாலை (பச்சையப்பன்கல்லூரி) மண்டபத்தில்கூடியது. ஏறக்குறைய 400 தமிழ்அறிஞர்களும்பட்டதாரிகளும்குழுமினர். தமிழ்அகராதியைத்தயாரித்தகுழுவின்தலைவரானசாண்டலர்தலைமைஏற்றார். அக்கூட்டத்தில்தமிழைச்செம்மொழியாகஏற்றுப்பல்கலைக்கழகம்அறிவிக்கவேண்டும்என்றுதீர்மானம்நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தில்தமிழின்செவ்வியல்பண்புகள்பலவிவரிக்கப்பெற்றன.

"திராவிடமொழிகளுள்சீர்மையும்தலைமையும்பெற்றுஒளிர்கின்றஉயர்தனிச்செம்மொழிதமிழேஆகும். தமிழ்தொன்மையானஎழுத்துக்களைஉடையது. தனக்கேஉரியஅகப்பொருள், புறப்பொருள்இலக்கியங்களைக்கொண்டது. தொல்காப்பியம்வடமொழியிலுள்ளபாணினீயம்எனும்இலக்கணநூலைவிடவும் பழைமையானது. இந்நூல் 2500 ஆண்டுகளுக்குமுன்எழுதப்பட்டது. தமிழ்மொழியின்திருந்தியபண்பினைத்தொல்காப்பியத்தால்அறியலாம்.

பலஐரோப்பியமொழிகளில்மொழிபெயர்க்கப்பட்டுள்ளதிருக்குறள்போன்றஇலக்கியவளம்மிக்கமொழிதமிழ். இதுதெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுமுதலியகிளைமொழிகளைஉடையது. இத்தகுசிறப்புமிகுமொழியைஇலக்கணவரம்பில்லாதசிறுமொழிகளுக்குஇணையாகக்கருதாமல், செம்மொழிகளின்பட்டியலில்இணைத்துப்போற்றவேண்டும். இதுஅத்தீர்மானத்தின்தொகுப்புரையாகும். இத்தீர்மானத்தைவழக்கறிஞர்கா. சுப்பிரமணியபிள்ளை (கா.சு. பிள்ளை) முன்மொழிந்தார். இரா.பி. சேதுப்பிள்ளைமுதலியோர்வழிமொழிந்துபேசினர்.

மேலைச்சிவபுரிச்சன்மார்க்கசபையும் 1918-ஆம்ஆண்டுஏப்ரல் 7-இல்தனதுஒன்பதாம்ஆண்டுநிறைவுவிழாவின்போதுதீர்மானத்தைஇயற்றியது. அதில்தமிழைஉயர்தனிச்செம்மொழியாகஏற்று, ஐ.சி.எஸ். முதலியஉயர்பதவித்தேர்வுகளில்பாடமாகச்சேர்க்கவேண்டும்என்றுகோரப்பட்டது. இத்தீர்மானம்அரசுப்பிரதிநிதி, சென்னைஆளுநர்ஆகியோருக்கும்சென்னை, கல்கத்தா, பம்பாய், அலகாபாத், காசி, பஞ்சாப்முதலியபல்கலைக்கழகங்களுக்கும்அனுப்பப்பட்டது.

தமிழைச்செம்மொழியாகஅரசும்,பல்கலைக்கழகங்களும்ஏற்றுச்சிறப்புச்செய்யவேண்டும்என்பதில்கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின்பங்குமிகப்பெரிது. அச்சங்கத்தின்மேம்பாடுகளுக்குஅருந்தொண்டாற்றியதமிழறிஞர்கள்தமிழவேள் உமாமகேசுவரம்பிள்ளை, நாவலர்வேங்கடசாமிநாட்டார்போன்றோர்இம்முயற்சியில்தீவிரமாகஈடுபட்டனர்.

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின்ஏழாம், எட்டாம்ஆண்டுகளின்விழாக்கள் 1919ஆம்ஆண்டுமேதிங்கள் 24, 25 ஆகியஇருநாட்களில்நடைபெற்றது. தொன்மை, சீர்மை, செம்மைநிறைந்ததமிழ்மொழியைஒருசெம்மொழியாகஏற்று, பல்கலைக்கழகத்தில்அதற்குமுறைப்படிமுதலிடமும்உரிமைகளும்கொடுக்கவேண்டும்என்றுஅவ்விழாக்களின்போதுதீர்மானம்நிறைவேற்றப்பட்டது. தீர்மானம்பல்கலைக்கழகத்தலைவர், துணைத்தலைவர், பதிவாளர், சென்னைஆட்சிஅமைச்சர்ஆகியோருக்குஅனுப்பப்பட்டது.இத்தமிழ்ச்சங்கம்மீண்டும்மீண்டும்ஒவ்வோர்ஆண்டுவிழாவின்போதும்இத்தகையதீர்மானங்களைநிறைவேற்றி, இந்தியப்பல்கலைக்கழகங்களுக்கும்மாநிலஆட்சியாளர்களுக்கும்தொடர்ந்துஅ

னுப்பிக்கொண்டேஇருந்தது. தமிழைச்செம்மொழியாகஏற்றுக்கொள்ளுதல், ஒருகட்டாயப்பாடமாகப்பாடத்திட்டத்தில்சேர்த்துக்கொள்ளுதல்,

கல்வியைப்பயிற்றுவிக்கும்மொழியாகச்செய்தல், ஐ.சி.எப். பட்டத்திற்குரியஒருபாடமாகச்சேர்த்துக்கொள்ளுதல்போன்றகோரிக்கைகள்அத் தீர்மானங்களில்எழுதப்பட்டிருந்தன.

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின்முயற்சிகளுக்குச்சோமசுந்தரபாரதியார், திருக்கோவிலூர்ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர்திருஞானியார்அடிகள்போன்றதமிழ்ப்பெரியோர்துணைநி ன்றனர்.

1938ஆம்ஆண்டுநடைபெற்றவெள்ளிவிழாவின்போதுதலைமைஏற்றஞானியார் அடிகள்,

'இத்தகையபெருமையும்இனிமையும்உடையதமிழைஉயர்தனிச்செம்மொழிஎன் றநிலையில்அரசியலார்போற்றாதிருப்பதுகவலைத்தரதக்கதாகும்" என்றுதம்கவலையைவெளிப்படுத்தினார்.

பிராமணர்அல்லாதஇனத்தைச்சார்ந்தபெரியோர்பலர் 1919ஆம்ஆண்டுஜூன்திங்கள் 23இல்திருச்சிநகரில்மாநாடுஒன்றைநிகழ்த்தினர். அம்மாநாட்டிலும்பழைமைச்சிறப்புமிகுந்தஇலக்கியவளமிக்கதமிழ்மொழியைப் பாரசீகம்அராபி, சமஸ்கிருதம்எனும்செம்மொழிகளோடுஒப்பமதிக்கவேண்டும்என்றும்ஆட்சிப்பணித்தேர்வுகளில்அதற்குரியஇடத்தைவழங்கவேண்டும்என்றும்கோரிக்கைவிடுத்துத்தீர்மானம்இயற்றப்பட்டது.

மத்தியஅரசின்மனிதவளமேம்பாட்டுத்துறையும்பல்கலைக்கழகமானியக்குழுவும்தமிழைச்செம்மொழியாகஏற்றுக்கொண்டு, அதன்வளர்ச்சிப்பணிகளுக்காகநிதியைஒதுக்குதற்கானநடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறுதமிழகமுதலமைச்சர்மாண்புமிகுமு. கருணாநிதிஅவர்கள்இந்தியப்பிரதமஅமைச்சர்கள்மாண்புமிகுதேவகவுடா, ஐ.கே.குஜ்ரால், அடல்பிஹாரிவாஜ்பயீ ஆகியோருக்கும்இந்தியமனிதவளமேம்பாட்டுத்துறைஅமைச்சர்களுக்கும்கடிதங்கள்நினைவூட்டல்களும்அவ்வப்போதுஎழுதினார்.

**தமிழ்ச்சங்கத்தின்தணியாதவேட்கை**

தமிழைமத்தியஅரசின்ஆட்சிமொழியாகவும்செவ்வியல்மொழியாகவும்ஆக்கவேண்டும்எனும்கோரிக்கையைமுன்வைத்து, இந்தியநாட்டின்தலைநகர்தில்லியில்ஒருமாநாடு 2000ஆம்ஆண்டுஏப்பிரல் 29, 30 ஆகியநாட்களில்நடைபெற்றது. தலைநகர்த்தமிழ்ச்சங்கம், தில்லிதமிழ்ச்சங்கம்முதலியஅமைப்புக்கள்ஒருங்கிணைந்துஇம்மாநாட்டினைநடத்தின. மாநாட்டில்தமிழறிஞர்கள், அரசியல்தலைவர்கள், கல்வியாளர்கள், தமிழகஅரசின்சார்பாளர்கள்எனப்பலதிறப்பட்டோர்பங்கேற்றனர்.

செவ்வியல்மொழிச்செயலாக்கக்குழுத்தலைவர்பேராசிரியர்திருமதி.சாலினிஇளந்திரையன்அம்மாநாட்டைமுன்னின்றுநடத்தினார். மாநாட்டிற்குவருகைபுரிந்தசார்பாளர்களைவரவேற்கும்பணியில்ஈடுபட்டிருந்தபோது, பேராசிரியர்சாலினிஇளந்திரையன்சாலைவிபத்தில்இயற்கைஎய்தினார். எனவேஅம்மாநாடுஅவரதுநினைவாகநடத்தப்பெற்றது.

செம்மொழிப்போராட்டத்தில்தலைநகர்த்தமிழ்ச்சங்கம்ஆற்றியபணிஈடில்லாதது. அச்சங்கம்பெங்களூர்தமிழ்ச்சங்கத்துடன்இணைந்து, தமிழைஆட்சிமொழியாக்கவேண்டும். தமிழ்மொழியைச்செவ்வியல்மொழியாகஏற்கவேண்டும்.

திருக்குறளைஇந்தியநாட்டின்தேசியமொழியாகமுன்வைத்து, 2002-ஆம்ஆண்டுமே 4, 5ஆம்நாள்களில்நடத்தியமாநாடு, தமிழ்ப்பற்றுமிக்கசான்றோர்களைஒருங்கிணைப்பதாகக்காட்சிஅளித்தது.

**இந்தியஅமைச்சரின்அங்கீகாரம்**

இந்தியமொழிகளின்வளர்ச்சியைஊக்குவிக்கும்பொருட்டுஇந்தியஅரசுசாகித்தியஅகாடமிஎனும்இலக்கியஅமைப்பினைஉருவாக்கியது. 1951-ஆம்ஆண்டுமார்ச்சுத்திங்கள் 15-இல்நடைபெற்றஅதன்அமைப்புமாநாட்டின்போது, இந்தியாவின்முதல்கல்விஅமைச்சரானமாண்புமிகுமவுலானாஅபுல்கலாம்ஆசாத்தொடக்கவுரைஆற்றினார்.

அவ்வுரையில்தமிழ்ஒருசெம்மொழியாகஏற்கப்பெறுதற்கானதகுதிகளைக்கொண்டமொழிஎன்பதனைச்சுட்டிக்காட்டினார். "சமஸ்கிருதத்தையும்தமிழையும்உள்ளடக்கியபதினான்குமொழிகள்அரசியல்சட்டத்தினால்ஏற்கப்பெற்றுள்ளன. சமஸ்கிருதம்தனிமொழிஇனத்தைச்சார்ந்தது. அதுமிகவும்வளம்செறிந்தசெம்மொழிகளுள்ஒன்றாகமுறைப்படிஏற்கப்பெற்றுள்ளது.

தமிழ்மொழியும்செழுமையும்தொன்மையும்மிக்கஇலக்கியங்களைக்கொண்டது.

தமிழ்க்கவிதைகள்அயல்நாட்டுமொழிகளில்மொழிபெயர்ப்புச்செய்தற்குத்தகுந்தவை.

தமிழ்உண்மையிலேயேஒருசெம்மொழிஎன்பதைநாம்நினைவில்கொள்ளவேண்டும்.

ஒருசெம்மொழியாகஏற்பதற்குத்தேவையானதகுதிகள்யாவற்றையும்தமிழ்பண்டைக்காலத்திலேயேபெற்றிருக்கிறது.

இவ்வாறுகல்வியமைச்சர்தம்கருத்தினைவெளிப்படுத்தினார்.

இந்தியக்கல்வியமைச்சர்உரையளவில்தமிழ்ஒருசெம்மொழிஎன்பதனைஏற்றுக்கொண்டார்.

**பேராசிரியர்தெ.பொ. மீ. வேண்டுகோள்**

அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் 1955ஆம்ஆண்டுடிசம்பர்த்திங்கள் 26, 27, 28 ஆகியமூன்றுநாட்களும்அனைத்திந்தியக்கீழ்த்திசைமாநாடுநடைபெற்றது.

அம்மாநாட்டிற்குமுதுபெரும்மொழியறிஞரும்தத்துவஞானியுமாகியபேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்தலைமைஏற்றார்.

அச்சமயம்தலைமையுரையில்இந்தியக்கல்விஅமைச்சர்மாண்புமிகுஅபுல்கலாம் ஆசாத்சாகித்தியஅகாடமிஉருவாக்கும்பொருட்டுநடத்தப்பெற்றமாநாட்டில்பேசியசெய்திகளைநினைவுகூர்ந்தார்.

தொடர்ந்துபேசும்போது,

"தமிழ்மொழிஒருசெம்மொழியேஎன்னும்அங்கீகாரத்திற்குரியநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்என்பதுமட்டுமேஇந்தமாநாட்டிலுள்ளவர்களிடம்நான்விடுக்கிறகோரிக்கையாகும்.

அத்தகையஅங்கீகாரத்தைஇந்தக்கீழ்த்திசைமாநாட்டுஅறிஞர்கள்வழங்கவில்லை எனின், வேறுயார்தாம்வழங்குவார்?" என்றுவினாத்தொடுத்தார்.

**பாவாணரின்தமிழ்ச்செம்மொழித்தகுதிகள்**

மொழிஞாயிறுதேவநேயப்பாவாணர்பலமொழிகளைப்பழுதறக்கற்றுஆராய்ந்தபேரறிஞர்.

தமிழ்மொழியையும்பண்பாட்டையும்காத்தற்காகஉலகத்தமிழ்க்கழகம்எனும்அமைப்பினைநிறுவியவர்.

அவர்தமிழின்செவ்வியல்தரத்தைஉலகினருக்குப்பறைசாற்றும்நோக்கில் The Primary Classical Language of the world (உலகின்முதன்மைஉயர்தனிச்செம்மொழி) எனும்நூலினைஆங்கிலத்தில் 1966-

ஆம்ஆண்டுஎழுதிவெளியிட்டார். அந்நூலில், 'தமிழ்மிகவும்மேம்பட்டுச்செழிப்புற்றுவளர்ச்சிபெற்றுள்ளலெமூரியாகண்டத்து செம்மொழி' என்றுபுகழ்மாலைசூட்டினார். மேலும், தமிழ்மொழியின்முதன்மையானசெவ்வியல்தன்மைகளுக்குரியசான்றுகள்பலவற்றையும்பட்டியலிட்டுள்ளார். அவைகீழேகுறிக்கப்படுகின்றன.

1. தமிழ்லெமூரியாமக்கள்வாழ்வுடன்தொடர்புடையது.

2. தமிழ்மொழியின்ஒலிப்புஎளிமையானது.

3. உலகளாவியஉணர்வுப்பெருமிதம்கொண்டது.

4.ஆரியமொழிகளுக்குநடுவில்தமிழ்தனித்துவழங்கும்பெருமைஉடையது.

5. தமிழ்ச்சொற்கள்அமைப்பில்ஒலிச்சுருக்கமும்தொன்மையும்உடையன.

6. அம்மா, அப்பாஎனும்தமிழ்ச்சொற்கள்அதேவடிவங்களிலோஅல்லதுதிரிந்தவடிவங்களிலோஏறக்குறையபெருமைக்குரியஎல்லாமொழிகளிலும்இடம்பெற்றிருக்கின்றன.

7. தமிழில்எழுவாய்வேற்றுமைக்குஉருபுஇல்லை.

8.தமிழிலுள்ளஎல்லாஒட்டுச்சொற்களும்பிரிக்கத்தகுந்தவையாகவும்பொருட்குறிப்புள்ளவையாகவும்உள்ளன.

9. தமிழில்சொற்களுக்குப்பாலினம்இல்லை.

10. தமிழில்ஒழுங்குமுறையற்றசொற்கள்இல்லை.

11.தமிழ்ச்சொற்கள்பொருளுடன்காரணகாரியத்தொடர்புடையனவாகவும்இயற்கையானவையாகவும்உள்ளன.

12. தமிழில்இருமைஎனும்எண்இல்லை. ஒருமை, பன்மைஎண்கள்மட்டுமேஉள்ளன.

13.தமிழ்மொழிபிறமொழிகளின்உதவியின்றி. இயற்கையாகவேவளர்ச்சிபெற்றுவருகிறது.

14. தமிழில்மிகவும்உயர்ந்தசெவ்வியல்பண்புகள்காலந்தோறும்ஆற்றொழுக்காகத் தொடர்ந்துஇடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

பாவாணர்தமிழ்மொழியின்கண்அமைந்துகிடக்கின்றசெம்மொழிக்கானதகுதிகளாகஇவற்றைநுணுகிஆராய்ந்துதேடிக்கண்டறிந்துபட்டியலிட்டுள்ளார். இத்தகுதிகள்உயர்தனிச்செம்மொழியைக்கண்டுஇனம்காட்டுதற்குஅவர்கூறுகிற வரைவிலக்கணங்களாகும்.

மதுரைமாநகரில் 1981-ஆம்ஆண்டுஐந்தாம்உலகத்தமிழ்மாநாடுநடைபெற்றது. அச்சமயம்வளர்தமிழ்ச்செல்வர்மணவைமுஸ்தபாமுதலியஅறிஞர்கள்தமிழைச்செம்மொழியாக்குதற்காகஎடுக்கப்பெற்றமுயற்சிகள்வெற்றிபெறவில்லை. அவ்வாறே 1995-ஆம்ஆண்டுதஞ்சாவூரில்நடத்தப்பெற்றஎட்டாம்உலகத்தமிழ்மாநாட்டில்மேற்கொள்ளப்பெற்றமுயற்சியும்ஆனது.

**தமிழகஅரசின்செம்மொழிஅறிக்கை**

தமிழ்ஆட்சிமொழிக்காகவும்தமிழ்ப்பண்பாட்டிற்காகவும்தனிஅமைச்சகம்ஒன்றுதமிழகஅரசில் 1996-இல்உருவாக்கப்பெற்றது. அதற்குமாண்புமிகுதமிழ்க்குடிமகன்அமைச்சராகப்பொறுப்பேற்றார்.

மாண்புமிகுஅமைச்சர்தமிழ்க்குடிமகன்தலைமையில்அண்ணாபல்கலைக்கழகத்தில்அறிஞர்களின்குழு 1996-ஆம்ஆண்டுஜுன்திங்கள் 20-இல்கூடியது. செம்மொழிகோரிக்கைபற்றிஆராய்ந்தது. தமிழ்அறிஞர்கள்வா.செ. குழந்தைசாமி,சி.பாலசுப்பிரமணியம், ஔவைநடராசன், மணவைமுஸ்தபா, பண்பாட்டுத்துறைச்செயலாளர்உள்ளிட்டபலரும்அதில்கலந்துகொண்டனர்.

ஆசியவியல்நிறுவனத்தின்இயக்குநர்ஜி.

ஜான்சாமுவேல்தமிழைச்செம்மொழியாகஅறிவிக்கவேண்டும்என்றுமத்தியஅரசுக்குப்பரிந்துரைக்கும்பொருட்டுவரைவுஅறிக்கைஒன்றைத்தயாரித்திருந்தார். அதுசிலமாற்றங்களுடன்அறிஞர்களால்ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதுதமிழ்மொழிசெம்மொழிஎனஅறிவிக்கப்படுதற்குரியஅனைத்துத்தகுதிகளையும்விரிவாகவும்தெளிவாகவும்ஆணித்தரமாகவும்எடுத்துரைத்தஅறிக்கையாகும்.

முனைவர்ஜான்சாமுவேல்தயாரித்தஅறிக்கையில்இடம்பெற்றிருந்ததமிழுக்கானசெம்மொழித்தகுதிகளுள்சிலவற்றைஇங்குக்குறிப்பிடலாம்.

1.தமிழ்ஈராயிரம்ஆண்டுப்பழைமைவாய்ந்தசெவ்விலக்கியங்களின்களஞ்சியமாகும்.

2.நூற்றாண்டுகள்பலகடந்தாலும்இன்றும்அதன்சீரிளமைகுன்றாமல்நிலைத்துக்காணப்படுகிறது.

3.திராவிடமொழிகளுள்உயர்வானது.தமிழ்இலக்கியங்கள்பழந்திராவிடஇலக்கியமரபுக்குக்கவசமாகஉள்ளன.

4.இந்தியப்பண்பாட்டுமாறுதல்களுக்குஇசைவாகப்பிறமொழிகளுடன்உறவி

னைவளர்த்துக்கொண்டிருக்கிறது.

எனினும்தனதுதனித்தன்மைகளைஅழியாதுபேணிவருகிறது.

5. தமிழின்மொழிக்கூறுகள்பலஜெர்மன், இலத்தீன், கிரேக்கம், ஈரானியமொழிக்குடும்பத்துடனும்பின்லாந்தியமொழிகள், அங்கேரிமொழிகள், ஜப்பான்,கொரியமொழிகள்பலவற்றுடனும்ஒத்துக்காணப்படுகின்றன.

இதனைஅறிஞர்பலர்ஆய்ந்துகூறியுள்ளனர்.

6.தமிழ்தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, மியான்மர், மொரீசியஸ், டிரினிடாட், பிஜித்தீவுகளில்பேச்சுமொழியாகவும்எழுத்துமொழியாகவும்உள்ளது.

இலங்கையிலும்சிங்கப்பூரிலும்ஆட்சிமொழியாகஉள்ளது.

7.எகிப்திய, சுமேரிய, சிந்துவெளிப்பண்பாட்டுடன்தொடர்புடையதொன்மைக்குத்தொன்மையாகஇன்

றும்வாழ்கிறஒரேமொழிதடழ்மொழியே.

8.தமிழ்இலக்கியங்கள்ஈராயிரம்ஆண்டுகட்குமுன்னரேசெவ்வியல்தரம்பெற்ற

வை.

தொல்காப்பியம்கூறும்இலக்கியக்கோட்பாட்டுவிதிகள்இதற்குச்சான்றாகும்.

9.

வங்கநாட்டுமொழியியல்அறிஞர்பேராசிரியர்சுனிதிகுமார்சட்டர்ஜிதமிழார்வத்தி

னால்தம்பெயரை 'நன்னெறிமுருகன்' என்றுமாற்றிக்கொண்டவர்.

அவர்இந்தியப்பண்பாட்டுச்செல்வத்திற்குத்திராவிடர்கள்ஆற்றியபங்குஐம்பதுவி

ழுக்காட்டிற்குக்குறையாதுஎன்கிறார்.

மொகஞ்சதாரோஎனும்தொல்நாகரிகத்தைக்கண்டுபிடித்தஅறிஞர்ஆர்.டி.

பானர்ஜிசிந்துவெளிநாகரிகம்ஆரியநாகரிகத்திற்குமுந்தையது.அதுதிராவிடர்க

ளுடையதுஎன்றுவிவரிக்கிறார்.

10.கில்பர்ட்சிலேட்டர், வின்ஸ்லோ, எல்லீஸ், கால்டுவெல், ஜி.யு. போப்,

கமில்சுவலபில்முதலியமேலைநாட்டுஅறிஞர்பலர்தமிழ்மிகப்பழைமையான,

வளமான,

செழிப்புடையஇலக்கணஇலக்கியத்திற்குச்சொந்தமானஉயர்ந்தசெவ்வியல்மொ

ழிஎன்றுகுறிப்பிட்டுள்ளனர்.

11. செனகல்நாட்டுடாக்டர்பல்கலைக்கழகத்தின்செம்மொழித்துறையில்தமிழ், சமஸ்கிருதம், அராபி, பாரசீகம்என்பனசெம்மொழிகளாகப்பயிற்றுவிக்கப்பட்டுவருகின்றன. ஆனால்இந்தியப்பல்கலைக்கழகங்களில்தமிழ்நீக்கப்பட்டு, அராபி, பாரசீகம், சமஸ்கிருதம்எனும்கற்பிக்கப்படுகின்றன. மூன்றுமட்டுமே

12. சமூகம்மற்றும்இலக்கியம்சார்ந்தசூழலுக்குரியகுறிப்பிட்டகாலத்தைசெம்மொழிக் காலமாகக்குறிப்பிடுகின்றனர். அறிஞர்சிலரின்கருத்துப்படி, கி.மு. 500இலிருந்து 300 வரையுள்ளகாலம்கிரேக்கர்களின்செம்மொழிக்காலம்ஆகும். கி.மு. 500 முதல்கி.பி. 1110 வரையிலானகாலம்சமஸ்கிருதத்தின்செம்மொழிக்காலம்எனப்படுகிறது. சங்ககாலம்முதல்கி.பி. ஆறாம்நூற்றாண்டுவரையுள்ளகாலத்தைத்தமிழ்ச்செம்மொழிக்குஉரியதாகக்குறி ப்பிடலாம்.

13.

திராவிடர்களின்சிறந்தபண்பாட்டுச்சாதனைகள்இந்தியப்பண்பாட்டில்பெருமைக்குரியவை. அவற்றைக்கருத்தில்கொள்ளத்தவறினால்இந்தியப்பண்பாட்டுமரபுகுறித்தளந்தவொருஆராய்ச்சியும்முழுமையற்றதாகக்குறைவுஉடையதாகவேஅமையும்.

14. உலகளாவியமரபிலக்கியநற்கூறுகள், தொன்மை, வளமை, எளிமைமுதலியசிறப்பியல்புகளைப்பெற்றிருந்தும், இந்நாள்வரையில்தமிழ்வட்டாரமொழியாகவேகருதப்பட்டுப்புதியஇந்தியமொழிகளின்வரிசையில்தான்வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியமொழிகளில்சமஸ்கிருதம்தவிரத்தமிழ்மொழிபோன்றதொல்மரபுகொண்டமொழிவேறெதுவும்இல்லை. ஒருமைவாய்ந்தநம்பண்பாட்டின்உயர்ந்தமரபுமாட்சியைப்பேணுவதும், காப்பதும்இந்தியக்குடிமகனின்அடிப்படைக்கடமைஎன்பதைஇந்தியஅரசியல்அமைப்புச்சட்டம்வரையறைசெய்துள்ளது. இந்நிலையில்தமிழ்மொழியைச்செம்மொழியாகஏற்பதுநமதுகடமையாகும்.

இத்தகையசிறப்புவாய்ந்தஅறிக்கையைத்தமிழகஅரசுமத்தியஅரசின்கல்வித்துறைக்குஅனுப்பியது. அதுஅங்கிருந்துமைசூர்நகரில்அமைக்கப்பெற்றிருக்கிறஇந்தியமொழிகளின்நடுவண்நிறுவனத்திற்குப்பரிசீலனைச்செய்து, கருத்துரைவழங்குமாறுஅனுப்பிவைக்கப்பெற்றது.

**பல்கலைக்கழகங்களின்பெரும்பங்கு**

தமிழைச்செம்மொழியாக்கஇந்தியஅரசின்அங்கீகாரத்தைப்பெறுவதற்குத் தமிழகப்பல்கலைக்கழகங்களின்முயற்சிகளும்மிகப்பெரிது. தமிழறிஞர்முனைவர்வா.செ.குழந்தைசாமிதுணைவேந்தராகப்பணியாற்றியகாலத்தில்அண்ணாபல்கலைக்கழகத்தின்வளர்தமிழ்மன்றம்எனும்அமைப்புதமிழ்மொழியின்வளர்ச்சியில்பெரும்பங்குஆற்றியது. வளர்தமிழ்இதழ்கள்வழியாகவும்கருத்தரங்குகள்வாயிலாகவும்அரியபடைப்புக்கள்பலவெளிவந்தன. வளர்ந்துவருகிறபுதியஅறிவியல்கண்டுபிடிப்புக்களுக்குஈடுகொடுக்கும்வகையில் தமிழைஓர்அறிவியல்மொழியாகவளர்க்கும்முயற்சிகள்பலமேற்கொள்ளப்பட்டன.

வளர்தமிழ்மன்றத்தின்சார்பில்அறக்கட்டளையில் 'அறிவியல்யுகத்திற்குத்தமிழ்' எனும்பொருளில் 1988-ஆம்ஆண்டுஆகஸ்டுத்திங்கள் 6,7-ஆம்நாட்களில்கருத்தரங்கம்நடத்தப்பட்டது. தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், தமிழ்வளர்ச்சித்துறைஅலுவலர்கள், இதழியலாளர்கள்எனப்பலதிறத்துச்சான்றோர்கள்இக்கருத்தரங்கில்கலந்துகொண்டனர். முன்னாள்அமைச்சர்சி. சுப்பிரமணியம்கருத்தரங்கைத்தொடக்கிவைத்துப்பேசினார். குன்றக்குடிஅடிகளார்பேசிக்கருத்தரங்கைநிறைவுசெய்தார். பாரதிகருத்தரங்கில்தீர்மானங்கள்பலநிறைவேற்றப்பட்டன.

தமிழின்வளர்ச்சிக்குமேற்கொள்ளத்தகுந்தபணிகள்குறித்தபரிந்துரைகள்பலவும்செய்யப்பெற்றன. முனைவர்குழந்தைசாமிஅவற்றைத்தொகுத்துப்பேசினார். "உலகஅளவில்செம்மொழிஎனஏற்கப்பட்டிருக்கும்தமிழுக்குச்சமஸ்கிருதத்திற்குவழங்கப்பட்டிருப்பதுபோன்றசெம்மொழித்தகுதியைமத்தியஅரசுஅதிகாரப்பூர்வமாகவழங்கவேண்டும்" என்றுஅத்தீர்மானம்மத்தியஅரசைக்கேட்டுக்கொண்டது.

தொடர்ந்துதமிழகத்தின்பல்கலைக்கழகங்கள்பலவும்இம்மாதிரியானதீர்மானங்களைஅவ்வப்போதுநிறைவேற்றிஅரசுக்குஅனுப்பிவைத்தன.

திருநெல்வேலிமனோன்மணீயம்சுந்தரனார்பல்கலைக்கழகம் 1996-ஆம்ஆண்டுமேதிங்கள் 30-இல்தீர்மானம்ஒன்றைநிறைவேற்றிஅதனைமத்தியஅரசுக்குஅனுப்பிவைத்தது. அத்தீர்மானத்தில், "இரண்டாயிரம்ஆண்டுப்பாரம்பரியம்மிக்கநம்தமிழ்மொழியைச்செவ்வியல்மொழிவரிசையில்சேர்த்து, அதன்வளர்ச்சிக்குநிதியுதவிஅளிக்கவேண்டுமெனமத்தியஅரசைஇந்தப்பேரவைகேட்டுக்கொள்கிறது" என்பதுகுறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறுதமிழ்ப்பல்கலைக்கழகம், சென்னைப்பல்கலைக்கழகம், பாரதிதாசன்பல்கலைக்கழகம்உள்ளிட்டதமிழ்நாட்டுப்பல்கலைக்கழகங்கள்பலவும்தீர்மானங்களைஇயற்றிமத்தியஅரசுக்குவேண்டுகோள்விடுத்தன.

அத்தீர்மானங்கள்தமிழின்தொன்மை, பலமொழிகளுக்குத்தாயாகவிளங்கும்தன்மை, இலக்கியஇலக்கணச்செழுமை, அழியாஇளமைபோன்றசிறப்புக்களைச்சுட்டிக்காட்டி, மத்தியஅரசினர்க்குத்தமிழின்உயர்தனிச்செவ்வியல்தகுதிகளைஎடுத்துரைத்தன. சென்னைப்பல்கலைக்கழகம்தமிழைச்செம்மொழிஎனஏற்றதோடுஅமையாது,

2001-

2002ஆம்கல்வியாண்டுமுதல்செம்மொழித்தமிழைக்கல்வியில்நடைமுறைக்குக்

கொண்டுவந்துபெருமைசேர்த்தது.

**உண்ணாநோன்புப்போராட்டம்**

2003-ஆம்ஆண்டுமே 3, 4-

ஆம்நாள்களில்மீண்டும்தலைநகர்த்தமிழ்ச்சங்கம்திருவனந்தபுரம்தமிழ்ச்சங்கத்

தைத்தன்னுடன்இணைத்துக்கொண்டுமாநாடுகூட்டியது.

அம்மாநாட்டில்தமிழுக்குச்செம்மொழித்தகுதியும்திருக்குறளுக்குத்தேசியநூல்தகு

தியும்வலியுறுத்தப்பட்டன.

திருவனந்தபுரத்தில்நடத்தப்பெற்றஇம்மாநாட்டில்கலந்துகொண்டவர்களு

க்குப்புலவர்.கு.பச்சைமால்மே 6-

ஆம்நாளில்தமதுதமிழாலயம்சார்பில்பாராட்டுக்கூட்டம்நடத்தினார்.

நாடாளுமன்றத்தின்அருகில்உண்ணாநோன்புப்போராட்டத்தைநடத்துவதுஎனு

ம்தீர்மானத்தையும்அச்சமயம்புலவரேகொண்டுவந்தார்.

மாநாடுகள்,

தெருக்கள்தோறும்கூட்டங்கள்என்றுஅறிஞர்களையும்மக்களையும்ஒருங்கிணை

த்துச்செம்மொழிக்கோரிக்கையைவிளக்கியதலைநகர்த்தமிழ்ச்சங்கம்,

ஏனையதமிழ்அமைப்புக்கள்பலவற்றையும்தன்னுடன்இணைத்துக்கொண்டு, வேறுவிதமானபோராட்டங்களில்ஈடுபட்டுஅரசினரின்கவனத்தையும்மக்களின்கவனத்தையும்ஈர்த்திடத்திட்டமிட்டது. தில்லியில்நாடாளுமன்றத்தின்அருகில்ஒருமாபெரும்உண்ணாநோன்புப்போராட்டத்திற்குஏற்பாடுசெய்தது.

இப்போராட்டம் 2003-ஆம்ஆண்டுஆகஸ்டு 18-ஆம்நாளில்நடைபெற்றது. தில்லித்தமிழ்ச்சங்கமும்இணைந்துபோராட்டஏற்பாடுகளில்தன்னைஈடுபடுத்திக்கொண்டது. இப்போராட்டத்தில்பெங்களூர்த்தமிழ்ச்சங்கம், மொழிப்போர்த்தியாகிகள்சங்கம், உலகத்திருக்குறள்பேரவை, பன்னாட்டுத்தமிழுணர்வுமையம்முதலியமன்றங்கள்பலவும்கலந்துகொண்டன. தி.மு.க., காங்கிரஸ், பாரதீயஜனதாஎனத்தமிழகத்தினபல்வேறுகட்சிகளைச்சார்ந்தவர்களும்இலக்கியச்செல்வர்குமரிஅனந்தன், பெருங்கவிக்கோவா.மு. சேதுராமன், பேராசிரியர்ஆறு. அழகப்பன்போன்றதமிழ்ப்பெருமக்களும்திரளாகஉண்ணாநோன்புமேற்கொண்டனர்.

தமிழகமுதலமைச்சர்கலைஞர்மு.கருணாநிதி, பழ.நெடுமாறன்முதலியோர்வாழ்த்துச்செய்திகள்வழியாகத்தம்ஆதரவினைநல்கினர். இப்போராட்டம்தமிழகமக்கள்அனைவரின்ஒற்றுமைக்குஅடையாளமாகத்தோற்றமளித்தது.

உண்ணாநோன்புப்போராட்டத்திற்குமறுநாள்போராட்டக்குழுவினர்இந்தியப்பிரதமஅமைச்சர்மாண்புமிகுவாஜ்பயிஅவர்களிடமும்குடியரசுத்தலைவர்மேதகுஅப்துல்கலாம்அவர்களிடமும்கோரிக்கைமனுவைஅளித்துவிளக்கிவலியுறுத்திப்பேசினர். பிரதமஅமைச்சர்இக்கோரிக்கைஏற்கனவேமத்தியஅரசின்பரிசீலனையில்இருப்பதாகக்கூறினார்.

**கையெழுத்துஇயக்கம்**

செம்மொழிவரலாற்றில்இடம்பெற்றுள்ளஅமைப்புக்களுள்தஞ்சாவூரிலுள்ளகரந்தைத்தமிழ்ச்சங்கத்தின்உழைப்புமிகப்பெரிது. அச்சங்கம்பலஆண்டுகளாகத்தமிழைச்செம்மொழியாகஅறிவிக்கவேண்டும்எனும்கோரிக்கையினைத்தொடர்ந்துவலியுறுத்திவந்தது. 2004-ஆம்ஆண்டு, சனவரித்திங்கள் 10-

ஆம்நாளில்தமிழறிஞர்களின்கூட்டம்ஒன்றற்குஏற்பாடுசெய்தது. அக்கூட்டத்தில்செம்மொழிக்கோரிக்கையினைஅறிஞர்களுக்குமட்டுமன்றி, சாதாரணமக்களுக்கும்தெரியப்படுத்திஅவர்களின்ஆதரவினையும்பெறவேண்டும்.அதற்காகஒருகோடிமக்களிடம்கையெழுத்துக்களைப்பெறுகிறகையெழுத்துஇயக்கம்ஒன்றினைநடத்திடவேண்டும்என்றுதீர்மானம்செய்யப்பெற்றது. அவ்வாறேகோடிக்கையெழுத்துக்கள்பெறப்பட்டுமத்தியஅரசுக்குஅனுப்பிவைக்கப்பெற்றது.

**செம்மொழிப்போராட்டம்வெற்றி**

இந்தியநாடாளுமன்றத்தேர்தலுக்கானஅறிவிப்புவெளிவந்தது. திராவிடமுன்னேற்றக்கழகமும்காங்கிரசும்பங்குபெற்றிருந்தஜனநாயகமுற்போக்குக்கூட்டணிவெற்றிபெற்றது. அரசின்செயல்திட்டத்தின்பட்டியலில்தமிழ்ச்செம்மொழிக்கோரிக்கையும்சேர்க்கப்பெற்றது.

நூறாண்டுகளுக்கும்மேலாகநடைபெற்றதமிழ்ச்செம்மொழிப்போராட்டம் வெற்றியைஎய்தியது. இந்தியஅரசு 2004-ஆம்ஆண்டுசெப்டம்பர்த்திங்கள் 17-ஆம்நாளில்தமிழுக்குச்செம்மொழிஎனும்தகுதியைவழங்குவதாகஅறிவித்தது. தொடர்ந்துஇந்தியஅரசின்மனிதவளமேம்பாட்டுத்துறை 2004-

ஆம்ஆண்டுஅக்டோபர்த்திங்கள் 12-

ஆம்நாளன்றுவெளியிட்டஅரசின்குறிப்பின்வழித்தமிழுக்குச்செம்மொழிஏற்பளிப்பு (அங்கீகாரம்) அதிகாரப்பூர்வமாகஅறிவிக்கப்பெற்றது.

இயற்கையாகவேசெம்மொழியாகஇருந்தஓர்உயர்தனிச்செம்மொழிஅரசிடம்ஆணையாகச்செம்மொழிஎனஏற்கப்பெறுதற்குஇத்துணைப்போராட்டங்கள்நடத்தவேண்டியதாயிற்று.

இப்போராட்டநிகழ்வுகள்யாவும்தமிழ்ச்செம்மொழிவரலாற்றுக்குஅழியாதநிலைத்தஆவணங்களாகும்.

**செம்மொழிப்பயன்கள்**

ஒருமொழிசெம்மொழியாகஏற்கப்பெற்றால்பயன்கள்பலஅம்மொழிக்கும் அதைவழங்குவோருக்கும்உண்டாகும்.

அம்மொழியைத்தாய்மொழியாகஉடையோர்மட்டுமன்றி,

ஏனையமொழிகளைப்பேசுவோரும்அதனால்பெரும்பயன்எய்துவர்.

செம்மொழித்தகுதிபெற்றமொழிஉலகஅளவில்அறிமுகமாகிப்புகழ்பெறும். அதன்மக்கள்பண்பாடு, நாகரிகம், இலக்கியம்எனயாவும்பரவுதற்குவாய்ப்புஅமையும்.

தமிழ்ச்செம்மொழியாகஏற்கப்பெற்றுள்ளது. அதனால்பல்கலைக்கழகமானியக்குழுமிகுதியானநிதியைஒதுக்கீடுசெய்து, தமிழ்வளர்ச்சிக்குஊக்கம்அளிக்கும். இந்தியப்பல்கலைக்கழகம்தோறும்சிறப்புஇருக்கைகளும்தமிழியற்புலங்களும்உருவாக்கப்பெற்று, தமிழ்மொழிஇலக்கிய, பண்பாட்டுப்படிப்பிற்கும்ஆய்வுக்கும்ஆவனசெய்யப்பெறும். அயல்நாடுகளில்உள்ளபல்கலைக்கழகங்களிலும்இத்தகையவளர்ச்சிப்பணிகள்உருவாக்கப்படும்.

வெவ்வேறுஇடங்களில்தமிழ்த்தொடர்பானவளர்ச்சிமன்றங்களும்ஆய்வுக்கூடங்களும்உருவாக்குதற்கானசூழல்அமையும்.

இந்தியப்பண்பாடு, நாகரிகம்வரலாற்றிற்குஅடித்தளமாகத்தமிழ், சமஸ்கிருதம்எனும்இருமொழிகளும்விளங்குகின்றனஎன்பதுவரலாற்றறிஞர்கள்கண்டஉண்மை. எனினும்சமஸ்கிருதம்உலகஅளவிலும்இந்தியஅரசுஅளவிலும்செம்மொழியாகஅதிகாரஅளவில்ஏற்கப்பெற்றுள்ளமையால், அம்மொழியேஉலகஅளவில்ஆய்விற்கானமுதன்மைத்தளமாகக்கருதப்பட்டுவந்தது. இந்நிலைஇனிமாறும்.

தமிழ்மொழிவடஇந்தியஆரியமொழிகளிலும்தொன்மையானது, முதன்மையானதுஎன்பதுவெளிப்படையாகும்.

இந்தியஅரசினால்செம்மொழியாகஏற்கபெற்றிருக்கிறமொழியில்புலமைப் பெற்றுள்ளஅறிஞர்கள்ஒவ்வோர்ஆண்டும்குடியரசுத்தலைவரால்சான்றிதழ்களும் ரூபாய்மூன்றுஇலட்சம்ஊக்கப்பரிசுத்தொகையும்வழங்கப்பெற்றுமரியாதைசெய் யப்படுகிறார்கள், சமஸ்கிருதம், பாரசீகம்,பிராகிருதம், பாலி, அராபிஆகியமொழிகளில்புலமைபெற்றஅறிஞர்கள்இந்தச்சிறப்புமரியாதையை ப்பெற்றுவந்தனர்.

தமிழ்செம்மொழியாகஏற்கப்பெற்றமையால், தமிழறிஞர்கள்சிலரும்இப்போதுபயனடைந்திருக்கின்றனர். இச்சிறப்பினைப்பெற்றுப்தமிழ்ஒருசெம்மொழியாகஅறிவிக்கப்பெற்றிருப்பதுஉ லகம்முழுவதும்வாழ்கிறதமிழர்கள்யாவருக்கும்பெருமைதரும்செயலாகும். இதுதமிழையும்தமிழ்ப்பண்பாட்டையும்ஆராய்கிறஅனைத்துநாட்டுஅறிஞர்களு க்கும்பெருமை.திராவிடமொழிக்குடும்பத்தின்தாய்மொழிக்குக்கிடைத்திருக்கிறஇ ச்சிறப்புஅனைத்துத்திராவிடஇனத்தவருக்கும்மகிழ்ச்சியானஒன்றாகும். இந்தியப்பண்பாட்டின்கண்களுள்ஒன்றானதமிழ்சிறப்புச்செய்யப்பெற்றதால்இந் தியர்யாவரும்பெருமைகொள்ளவேண்டும்.

செம்மொழியின்பல்வேறுவளர்ச்சிப்பணிகளுக்கெனச்சிறப்புநிறுவனங்கள் அமைக்கப்பெறும்.

தமிழுக்காகச்செம்மொழித்தமிழாய்வுமத்தியநிறுவனம்எனும்அமைப்புநிறுவப்பட்டுப்பணியாற்றிவருகிறது.

## செம்மொழித்தமிழாய்வுமத்தியநிறுவனம்

இந்தியஅரசின்மனிதவளமேம்பாட்டுஅமைச்சகம்செம்மொழித்தமிழாய்வைவளர்க்கும்நோக்குடன் 2007-ஆம்ஆண்டுசெம்மொழித்தமிழாய்வுமத்தியநிறுவனத்தைநிறுவியது. கி.பி. 600-க்குமுந்தையகாலத்தைச்செவ்வியல்காலமாகக்கொண்டுபண்டைத்தமிழ்ச்சமூகம் பற்றியஆய்வைநிகழ்த்தும்வகையில்இதுநிறுவப்பட்டது. பண்டைத்தமிழ்ச்சமூகத்தின்அனைத்துக்கூறுகளையும்வெளிப்படுத்தும்வகையில்ஆவணப்படுத்துவதையும்பாதுகாப்பதையும்இந்நிறுவனம்தன்நோக்கமாகக் கொண்டுள்ளது.

செம்மொழித்தமிழாய்வுமத்தியநிறுவனம் 21.1.2009-ஆம்நாள்தமிழ்நாடுசங்கப்பதிவுச்சட்டம்உட்பிரிவு 10-இன்கீழ் (1975-ஆம்ஆண்டுதமிழ்நாடுசட்டம் 27) பதிவுசெய்யப்பட்டது. ஆட்சிக்குழு,

கல்விக்குழு, நிதிக்குழு, உயர்நிலைக்குழுஆகியவற்றைஅமைக்கத்திட்டமிடப்பட்டது.

மனிதவளமேம்பாட்டுஅமைச்சகம்நிறுவனத்தின்திட்டங்களையும்செயல் பாடுகளையும்நடைமுறைப்படுத்தஐம்பெருங்குழு, எண்பேராயம்அடங்கியஉயர்நிலைக்குழுவைஅமைத்துள்ளது. இவற்றின்தலைவராகமுதலமைச்சர்இருப்பார்.

**திட்டங்களும்செயற்பாடுகளும்**

தமிழின்தொன்மை, தனித்தன்மை, தமிழர்களின்நாகரிகம், பண்பாடுஆகியவற்றின்சிறப்புக்களைக்கவனத்தில்கொண்டு, பலதிட்டங்களைத்தீட்டிஇந்நிறுவனம்செயற்பட்டுவருகிறது.

❖ பல்துறைசார்ந்தஅறிஞர்களைஒருங்கிணைத்துத்தமிழின்தொன்மைகுறித்துஆய்வுசெய்தல்.

❖ தமிழ்பிறதிராவிடமொழிகள்மீதுஏற்படுத்தியுள்ளதாக்கம்குறித்துவிரிவாக ஆராய்தல்.

- பண்டைத்தமிழ்இலக்கணம், இலக்கியம், தொல்லியல்சார்ந்தசெய்திகளைக்குறும்படங்களாகஉருவாக்குதல்.
- இணையவழிச்செம்மொழித்தமிழ்கற்பித்தல்.
- திராவிடமொழிகளின்வரலாற்றுஒப்பாய்வும்தமிழ்வழக்காறுகள்குறித்தஆய்வும்மேற்கொள்ளல்.
- உலகஆளவில்ஆய்வுக்களங்களைஉருவாக்கிப்பன்னாட்டுஅறிஞர்களை ஆய்வில்ஈடுபடுத்தல்.
- பழந்தமிழ்நூற்களைவெளியிடவும்அவற்றைமுறையேஆங்கிலத்திலும்பிற இந்தியமொழிகளிலும்மொழிபெயர்த்துவெளியிடவும்நிதிவழங்குதல்.
- தமிழாய்வில்நிலைத்தபணிபுரியும்நிறுவனங்களுக்குஆய்வுத்திட்டங்களை வழங்குதல்.
- செம்மொழித்தொடர்பானமுனைவர்பட்டஆய்வாளர்களுக்கும்முனைவர்பட்டமேலாய்வாளர்களுக்கும்உதவித்தொகைவழங்குதல்.
- செம்மொழித்தமிழாய்வில்குறிப்பிடத்தக்கபங்களிப்புநல்கியோர்க்குவிருதுகள்வழங்கிச்சிறப்புச்செய்தல்.

இவைபோன்றுஇன்னும்பலசெம்மொழித்தமிழ்வளர்ச்சித்திட்டங்களைநடைமுறைப்படுத்தமுயற்சிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பத்துமுதன்மைத்திட்டப்பணிகள்**

செம்மொழித்தமிழின்தொன்மையையும்தனித்தன்மையையும்புலப்படுத்தும்பத்துமுதன்மைத்திட்டப்பணிகள்வகுக்கப்பட்டுள்ளன.

**1. பழந்தமிழ்நூல்களின்செம்பதிப்பு**

தொன்மைக்காலம்முதல்கி.பி.6-ஆம்நூற்றாண்டுவரையிலானநூல்களைமரபுவழிசெம்பதிப்புகளாகச்மூலப்பாடச்சுவடிகள், பழம்பதிப்புக்கள், உரைமேற்கோள்கள்கொண்டுஒப்பிட்டுஉருவாக்குதல்.

**2. பழந்தமிழ்நூல்களைமொழிபெயர்த்தல்**41நூல்களுக்கும்மொழிபெயர்ப்புக்கள் தொகுக்கப்பட்டுவெளியிடப்படும். புதிதாகஇவற்றைஆங்கிலத்தில்மொழிபெயர்க்கும்பணிகளும்மேற்கொள்ளப்பெறும்.

**3. வரலாற்றுஅடிப்படையில்தமிழ்இலக்கணம்**

தொன்மைக்காலம்தொடங்கிஇக்காலம்வரையிலானதமிழ்இலக்கணஆய்வுமேற்கொள்ளப்படும். இதற்கெனஇலக்கியங்கள், உரைநடைகள், கல்வெட்டுக்கள்ஆகியவற்றின்மொழிநடைகருத்தில்கொள்ளப்படும்.

**4. தமிழின்தொன்மை - ஒருபன்முகஆய்வு**

பண்டைத்தமிழரின்சமூகம், பண்பாடு, மொழிஆகியவற்றின்இயல்புகளைவெளிக்கொணரும்வகையில்தமிழின்தொன்மைபற்றியபன்முகஆய்வுநிகழ்த்தப்பெறும்.

**5.தமிழ்வழக்காறுகள்ஆய்வுத்திட்டம்**

வட்டாரம், தொழில்சார்ந்ததமிழ்வழக்காறுகள்தொகுக்கப்படும். அகராதிகளில்பதிவுசெய்யப்படாதஇலட்சத்திற்கும்மேற்பட்டவழக்குச்சொற்கள் திரட்டப்படும்.

**6. தமிழும்பிறமொழிகளும்**

தமிழைஇந்தியமொழிகளோடும்ஒப்பிட்டுஆராய்தல்

**7. பழந்தமிழ்ஆய்விற்கானமின்நூலகம்**

அரியசுவடிகள், கையெழுத்துச்சுவடிகள், நூல்கள்ஆகியவற்றைத்தேடித்தொகுத்துமின்பதிப்புஆக்குவதோடு,

தமிழ்ஆய்வாளர்ஆய்வுத்தரவுகளைஎளிதில்பெற்றுக்கொள்ளமின்நூலகம்வடிவ

மைக்கப்படுகிறது.

## 8. இணையவழிச்செம்மொழியைக்கற்பித்தல்

உலகெங்கும்உள்ளோர்பழந்தமிழ்நூல்களைஎளியமுறையில்இணையம்வ

ழியேகற்றுப்பயன்பெறப்பாடத்திட்டம்வகுக்கப்பெற்றுள்ளது.

## 9. பழந்தமிழ்நூல்களுக்கானதரவகம்

41 பழந்தமிழ்ச்செவ்வியல்நூல்களும்அவற்றிற்கானஎழுத்துப்பெயர்ப்பு,

மொழிபெயர்ப்பு, உரைகள், அருஞ்சொற்பொருள்கள்,

இலக்கணக்குறிப்புக்கள்முதலியனவும்கணினியில்உள்ளீடுசெய்யப்படும்.

இந்நூல்களைப்பற்றியஅனைத்துக்குறிப்புக்களையும்அறியதொழில்நுட்பஏந்துக

ள்உருவாக்கப்படும்.

## 10. பழந்தமிழ்க்காட்சிக்குறும்படங்கள்

தமிழின்அரியவரலாற்றுக்கருவூலங்களானஇலக்கணம்இலக்கியம்,

கல்வெட்டு, நாணயம், கலை, பண்பாடு,

அயலகத்தமிழ்உறவுகுறித்தகாட்சிக்குறும்படங்கள்உருவாக்கப்படுகின்றன.

**நூலகம்**

செம்மொழிநூலகத்தில் 20,000

அரியநூல்களும்பழந்தமிழ்ஆய்விற்குஉதவும்மின்படியாக்கப்பட்டநூல்களும்ஓலைச்சுவடிகளும்இதழ்களும்தொகுத்துவைக்கப்பட்டுள்ளன.

**இணையத்தளம்**

இணையத்தளத்தில்இந்நிறுவனத்தின்விரிவானநோக்கங்களும்செயற்பாடுகளும்தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

**முனைவர்பட்டஆய்வுஉதவித்தொகை**

செம்மொழித்தமிழாய்வில்ஈடுபட்டுள்ளஇளம்ஆய்வாளர்களைஊக்குவிக்கும்நோக்கில்இந்நிறுவனம்முனைவர்பட்டஆய்வாளர்களுக்குத்திங்கள்ஒன்றுக்குஉதவித்தொகைரூ.12,000 இரண்டாண்டுகளுக்குவழங்குகிறது.

ஆய்வுத்தொடர்பானபிறசெலவுகளுக்குஆண்டுக்குரூ.12,000/- வழங்குகிறது.

**முனைவர்பட்டமேலாய்வுஉதவித்தொகை**

முனைவர்பட்டம்பெற்றபின்பழந்தமிழாய்வில்ஈடுபடவிரும்பும்முனைவர்பட்டமேலாய்வாளர்களுக்குநிறுவனம்திங்கள்ஒன்றுக்குஉதவித்தொகையாகரூ.18,000/- வழங்குகிறது.

ஒவ்வோராண்டும்பிறசெலவினங்களுக்காகரூ.30,000/- வழங்குகிறது.

## குறுகியகாலத்திட்டப்பணிகள்

பழந்தமிழ்ச்சமுதாயத்தின்தொன்மையையும்,தனித்தன்மையையும்,தமிழ்மொழியின்செவ்வியல்தன்மையையும்வெளிப்படுத்தும்வகையில்ஆய்வுமேற்கொள்ளும்ஆய்வறிஞர்களுக்கும்ஆய்வுநிறுவனங்களுக்கும்இந்நிறுவனம்நிதியுதவிஅளிக்கிறது

.

## செம்மொழித்தமிழ்விருதுகள்

தமிழியல்ஆய்வில்ஈடுபட்டுஒப்பிலாப்பங்களிப்பைவழங்கியுள்ளஇந்தியத் தமிழறிஞருக்குஒவ்வோராண்டும்சான்றிதழும்நினைவுப்பரிசும்ரூ . 5 இலட்சம்பரிசுத்தொகையும்அடங்கியதொல்காப்பியர்விருதுகள்வழங்கப்படுகின்றன.

தமிழியல்ஆய்வில்ஈடுபட்டுஒப்பிலாப்பங்களிப்பைவழங்கியுள்ளஇந்தியத் தமிழறிஞர்ஒருவருக்கும்பிறநாட்டுத்தமிழறிஞர்ஒருவருக்கும்ஒவ்வோராண்டும்சான்றிதழும்நினைவுப்பரிசும்ரூ. 5 இலட்சம்பரிசுத்தொகையும்அடங்கியகுறள்பீடம்விருதுகள்வழங்கப்படுகின்றன.

தமிழியல்ஆய்வில்ஈடுபட்டுள்ள 30-40 வயதுக்குட்பட்டஇளம்அறிஞர்களைஊக்குவிக்கும்வகையில்மதிப்புச்சான்றிதழு

ம்நினைவுப்பரிசும்ரூ.1

இலட்சம்பரிசுத்தொகையும்அடங்கியஇளம்அறிஞருக்கானவிருதுகள்ஒவ்வோரா

ண்டும்ஐவர்க்குவழங்கப்படுகின்றன.

## கலைஞர்மு. கருணாநிதிசெம்மொழித்தமிழ்விருது

கலைஞர்மு. கருணாநிதிதம்சொந்தநிதியிலிருந்துஒருகோடிரூபாய்வழங்கி,

கலைஞர்மு.

கருணாநிதிசெம்மொழித்தமிழ்அறக்கட்டளையைநிறுவனத்தில்நிறுவியுள்ளார்.

அறக்கட்டளைஆண்டுதோறும்தகுதிவாய்ந்ததமிழறிஞருக்குஇந்தியாவிலேயேமி

கமதிப்புயர்ந்தரூ.10

இலட்சம்பரிசுத்தொகையும்பாராட்டிதழும்ஐம்பொன்னாலானநினைவுப்பரிசும்

அடங்கியகலைஞர்மு.கருணாநிதிசெம்மொழிவிருதைவழங்கிச்சிறப்பிக்கிறது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | இணையப்பல்கலைக்கழகம்குறித்துஎழுதுக? | K2 | CO2 | PO4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தமிழகஅரசின்செம்மொழிஅறிக்கையைவிளக்குக. | K4 | CO3 | PO5 |
| 3 | பாவாணரின்தமிழ்ச்செம்மொழிதகுதிகள்யாவை? | K1 | CO4 | PO1 |
| 4 | செம்மொழிதமிழ்விருதுகளைக்குறிப்பிட்டுவிளக்குக. | K5 | CO5 | PO2 |
| 5 | செம்மொழித்தமிழாய்வுமத்தியநிறுவனத்தின்திட்டங்களும், செயற்பாடுகளும்குறித்துவிளக்குக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்செம்மொழியாக்கத்திற்குபல்கலைக்கழகங்களின்பங்கைவிவரி. | K3 | CO4 | PO4 |
| 2 | செம்மொழித்தமிழாய்வுமத்தியநிறுவனத்தின்பணிகளைவிவரி. | K4 | CO2 | PO6 |
| 3 | தமிழ்செம்மொழியாகஏற்கப்படுவதற்குஅறிஞர்களின்பங்களிப்புகுறித்துவிவரிக்க. | K1 | CO1 | PO5 |
| 4 | செம்மொழிதமிழின்தொன்மையையும், தனித்தன்மையையும்புலப்படுத்தும்முதன்மைதிட்டபணிகளைத்தொகுத்துரைக்க. | K5 | CO5 | PO6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | செம்மொழிபயன்களைதொகுத்துரைக்க. | K6 | CO3 | PO3 |

1. .

# அலகு – 3

## இந்தியச்செம்மொழிகள்-அறிமுகம்

இந்தியஅரசின்மனிதவளமேம்பாட்டுத்துறையில்செவ்வியல்மொழிகள்எனும்பட்டியல்உள்ளது. அப்பட்டியலில்சமஸ்கிருதம், பாரசீகம், பிராகிருதம், பாலி, அராபி, தமிழ்எனும்ஆறுமொழிகளும்சேர்க்கப்பெற்றுள்ளன.

## சமஸ்கிருதமொழி

உலகின்மிகப்பழமையானஇலக்கியங்களாகியவேதங்களுக்கும்உலகின்மிகப்பெரியஇலக்கியமானமகாபாரதத்திற்கும்சொந்தமானமொழிஇது.இந்தோ - ஐரோப்பியமொழிக்குடும்பத்தின்முதியமொழி.

**ஆரியத்தாய்மொழி**

பாலி, அர்த்தமாகதி, பிராகிருதம்முதலியபண்டையமொழிகளுக்கும்இந்தி, பஞ்சாபி, வங்காளி, குஜராத்திபோன்றஇந்நாளையவடஇந்தியமொழிகளுக்கும்பிறப்பிடமாகச்சமஸ்கிருதம்திகழ்கிறது.

உலகிலுள்ளசெம்மொழிகளுள்ஒன்றுஎனும்பெருமைபெற்றஇம்மொழிஇந்நாளில்பேச்சுவழக்குஅற்று, எழுத்துமொழிஎனும்அளவிலேயேவாழ்கிறது. இதனைப்பேச்சுமொழியாகவளர்க்கும்முயற்சியும்நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**இந்துக்களின்புனிதமொழி**

இந்துசமயத்தின்வேதங்கள், இதிகாசங்கள், இம்மொழியில்உள்ளன. இந்துக்களின்திருக்கோவில்களில்புராணங்கள், உபநிடதங்கள், சாஸ்திரங்கள்யாவும்வழிபாட்டிற்குரியமந்திரங்கள்இம்மொழியைச்சேர்ந்தவை. இதனால்இம்மொழிஇந்துக்களின்புனிதமொழியாகக்கருதப்படுகிறது.

**ஆசியவியல்நிறுவனம்**

மேலைநாட்டுஅறிஞர்களின்மொழிஆய்வின்போதுசமஸ்கிருதத்தின்பெருமைவெளிப்படுத்தப்பட்டது. அறிஞர்கள்தங்கள்ஐரோப்பியமொழிகளுக்கும்சமஸ்கிருதத்திற்கும்இடையேஆனஉறவுகளைக்கண்டறிந்தனர். இம்மொழியிலுள்ளஇலக்கியச்செழுமையும்விழுமியமும்அவர்களைக்கவர்ந்தன. கிரேக்கமும்இலத்தீனும்மட்டுமேசெம்மொழிகள்எனக்கருதிக்கொண்டிருந்தஅவர்கள்சமஸ்கிருதத்திலும்செவ்வியல்பண்புகள்தேங்கிஇருத்தலைஉணர்ந்தனர். கி.பி.18-ஆம்நூற்றாண்டில்டேனியல்ஜோன்ஸ், மாக்ஸ்முல்லர்ஆகியஇருவரும்சமஸ்கிருதத்தின்புகழைப்பரப்பியவர்களுள்முதன்மையானவர்கள். மாக்ஸ்முல்லர்பழையசமஸ்கிருதநூல்களைநன்குகற்றவர்.

உபநிடதங்கள்பலவற்றைத்தொகுத்துஉலகுக்குஅளித்தபெருமைஅவருக்குஉண்டு.

கல்கத்தாவில்டேனியல்ஜோன்ஸால்நிறுவப்பட்டஆசியவியல்நிறுவனம் (Asiatic Society) சமஸ்கிருதஇலக்கியஆராய்ச்சியில்ஈடுபட்டது. சமஸ்கிருதம்செம்மொழியாகஏற்கப்பெற்றதில்இந்நிறுவனத்தின்பங்குபெரியதாகும்.

**இலக்கியவளம்**

சமஸ்கிருதஇலக்கியங்களில்வேதங்களேமிகத்தொன்மையானவை. ரிக், யசூர், சாமம், அதர்வனம்எனும்நான்கனுள்ளும்ரிக்வேதமேமிகப்பழமையானது.இதன்காலம்கி. மு. பத்தாம்நூற்றாண்டிற்கும்முற்பட்டதுஎன்பர். வாய்மொழியாகவழங்கப்பெற்றமந்திரங்களால்ஆனவேதங்களைவியாசமுனிவரேமுதன்முதலில்தொகுத்தார்என்பர். வியாசம்என்பதற்குத்தொகுப்புஎன்பதுபொருள். வேதங்களைத்தொகுத்ததால்அவருக்குவியாசர்எனும்பெயர்காரணப்பெயராயிற்று.

சமஸ்கிருதஇலக்கியங்களில்உபநிடதங்கள்மிகவும்போற்றுதற்குஉரியன. இவைஞானகாண்டம்எனும்ஆன்மீகஆராய்ச்சிபற்றியவை. பகவத்கீதை, பிரம்மசூத்திரம்போன்றவையும்ஆன்மீகஆராய்ச்சிநூல்களுள்முதன்மைஆனவை.

சமஸ்கிருதமொழியில்எழுதப்பெற்றஇராமாயணமேஉலகின்ஆதிகாவியம்' எனக்கருதப்படுகிறது. இதனைவால்மீகிஎழுதினார். இதற்குப்பின்னர்எழுதப்பட்டதுமகாபாரதம். இதனைஎழுதியவர்வியாசமுனிவர்ஆவார். இராமாயணமும்மகாபாரதமும்இதிகாசங்கள்எனப்படுகின்றன. இவைஇரண்டும்கி.மு. பத்தாம்நூற்றாண்டுக்குமுந்தியவைஎன்பர்.

சமஸ்கிருதம்ஆன்மீகம், வானியல், கணிதம்எனப்பலதுறைகளிலும்ஏராளமானஎழுத்துச்செல்வங்களைப்பெற்றுள்ளது. இக்காலத்தில்எல்லாநாட்டுஅறிஞர்களும்ஆங்கிலத்தில்தங்கள்படைப்புக்களைஎழுதிவருதல்போன்று, பண்டைக்காலத்தில்இந்தியஅறிஞர்கள்பலரும்சமஸ்கிருதமொழியில்தங்கள்படைப்புக்களைஎழுதிக்குவித்தனர்.

சமஸ்கிருதமகாகவிகளுள்காளிதாசனும்பாரவியும்குறிக்கத்தக்கவர்கள். காளிதாசன்இரகுவம்சம், குமாரசம்பவம்எனும்பெருங்காப்பியங்களையும்மேகசந்தேசம், ருதுசம்மாரம்எனும்சிறுகாப்பியங்களையும்படைத்துள்ளார். சாகுந்தலம்இவர்எழுதியசிறந்தநாடகமாகும். மகாகவிபாரவியின்கிராதார்ஜுனகாவியமும்பெருங்காப்பியங்களுள்சிறப்புடையது.

சமஸ்கிருதஅறநூல்களுள்மனுசாஸ்திரம், சுக்கிரநீதி, வியாக்ஞவல்கியம், விதுரநீதிஎன்பனபழைமையானவை. சாணாக்கியன்எனப்படும்கௌடில்யரின்அர்த்தசாஸ்திரம்அரசியல், பொருளியல்நூல்களுள்முதன்மையானது. உரைநடைநூல்கள், கவிதையும்உரையும்கலந்தநூல்களும்ஏராளமாகஇம்மொழியில்எழுதப்பெற்றன. காதம்பரி, தசகுமாரசரிதம்,ஹர்ஷசரித்திரம், இராமாயணசம்பு, பஞ்சதந்திரம்போல்வனஇத்தகையவற்றுள்சிறப்பானவை.

சமஸ்கிருதஇலக்கணநூல்களுள்அஷ்டாத்யாயீபாணினிஎனும்புலவரால்எழுதப்பெற்றது. இதற்குப்பாணினியம்எனும்பெயரும்உண்டு.

இக்காலத்தில்கிடைக்கப்பெற்றுள்ளமிகத்தொன்மையானமொழிஇலக்கணநூல்கள்இரண்டனுள்இதுவும்ஒன்று. மற்றொன்றுதமிழிலுள்ளதொல்காப்பியமாகும்.

அஷ்டாத்யாயீகி.மு. ஐந்தாம்நூற்றாண்டுக்குமுந்தையதுஎன்பர். இதற்குமுன்னரும்இலக்கணநூல்கள்பலஇருந்தன. என்பதற்குஇந்நூலில்பலஇடங்களில்ஆசிரியர்காட்டியுள்ளமேற்கோள்கள்சான்றுகளாகும்.

### செம்மைப்படுத்தப்பட்டமொழி

பாலி, அர்த்தமாகதி, சௌரசேனி, மஹாராஷ்டிரி, பைசாசிஎனப்பேச்சுமொழிகள்பலவாக, இந்தியாவின்வடக்குப்பகுதியில்தொன்மைக்காலத்தில்சமஸ்கிருதம்பரவியிருந்தது. பின்னாளில்செம்மைப்படுத்தப்பட்டமொழியாகச்சமஸ்கிருதமொழிஉருவாக்கப்பட்டது.

சமஸ்கிருதம்இந்தியஅரசினால்செம்மொழியாகஏற்கப்பெற்றமொழிகளுள்ஒன்று.

### பாரசீகமொழி

பாரசீகமொழிபார்சி, பெர்சியன்என்றும்கூறப்படுகிறது. இதுபழையபண்பாட்டுச்செழுமைநிறைந்தமக்களால்பேசப்பட்டமொழி. செம்மொழிகளுள்இதுவும்ஒன்று.

**பார்சிசமயப்புனிதமொழி**

பாரசீகமொழிஈரான், ஆப்கானிஸ்தான், தாஜிகிஸ்தான், சைரஸ்முதலியநாடுகளில்பண்டைக்காலத்தில்வழக்கில்இருந்தது. இதன்பழையஎழுத்துச்சான்றுகளாகக்கி.மு. 546-இல்வெட்டப்பெற்றகல்வெட்டுக்கள்கிடைத்துள்ளன. இவைஆப்புவடிவஎழுத்துக்களால்ஆனவை. கி.மு. ஆறாம்நூற்றாண்டுமுதல்கி.பி. பத்தாம்நூற்றாண்டுவரையிலானநூல்கள்பலகிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள்பெரும்பாலனபார்சிசமயம்எனப்படுகிறசாரதுஷ்டிரமகாமுனிவரின்சமயக்கருத்துக்களைக்கொண்டவைஆகும்.

பழையபாரசீகமொழியும்சமஸ்கிருதமும்பலகூறுகளில்ஒப்புமையுடன்காணப்படுகின்றன. சாரதுஷ்டிரரின்புனிதமறையாகியசென்ட்அவெஸ்தாவில்இதனைக்காணலாம்.

**அராபிமொழிக்கலப்பு**

பாரசீகமொழியில்சிலபடிமலர்ச்சிகள்இடம்பெற்றுள்ளன. பழையபாரசீகத்திலிருந்துஇடைக்காலப்பாரசீகமொழிதோன்றியது. இடைக்காலப்பாரசீகத்திற்குப்பார்த்தியபஹ்லவிஎனும்பெயரும்உண்டு. இதிலிருந்துசசானியபஹ்லவிமொழிஉருவானது.

கி.பி. ஏழாம்நூற்றாண்டில்அரேபியர்கள்பாரசீகநாடுகளைக்கைப்பற்றினர். அதனால்அம்மொழியின்தனித்தன்மைசிதைந்தது. அராபிமொழிச்சொற்கள்மிகப்பேரளவில்கலக்கப்பெற்றன.

**பாரசீகஇலக்கியவரலாறு**

பாரசீகக்கவிதைகளைஐந்துவகையாகத்தொகுப்பர். முதலாவதுகஜல். இவ்வகைப்பாடல்கள்உணர்ச்சிகளைவெளிப்படுத்தவல்லவை. இரண்டாவதுகசீதாஎன்பன.சிறியகதைகளைஉள்ளடக்கியவை. மூன்றாம்வகைரூபாயத்இவற்றில்நாலடிச்செய்யுட்கள்உள்ளன. நான்காம்வகையானமர்சியாஎன்பனஇரங்கற்பாக்களாகும். ஐந்தாம்வகையில்நீண்டகவிதைகள்அடங்கியுள்ளன.

இவைமஸ்னவிஎனப்படுகின்றன.

உமர்கய்யாம்எழுதியரூபாயத்கவிதைகள்பலமொழிகளில்பெயர்க்கப்பெற்றுள்ள ன.

பாரசீகக்கவிஞர்களுள்பிர்தௌசீ, ஹாபிஜ், ஔஹத்உத்தீன்அன்வரிமுதலியோர்குறிப்பிடத்தக்கோர்.

இந்தியாவில்முகலாயமன்னர்கள்பலர்பாரசீகமொழியில்புலமைபெற்றவர் களாவர். அவர்களதுஆட்சியின்போதுஇம்மொழிஆதரிக்கப்பெற்றது. பேரரசர்அக்பர்பாரசீகப்புலவர்களைக்கொண்டுஇராமாயணம்மகாபாரதம், பகவத்கீதை, உபநிடதங்கள், புராணங்கள்போன்றவற்றைமொழிபெயர்த்தார். இளவரசர்தாராஷ-கோஐம்பதுஉபநிடதங்களைமொழிபெயர்த்தார்.

## பிராகிருதமொழி

சமஸ்கிருதம்எனும்செம்மையாக்கப்பெற்றமொழிதோன்றுதற்குமுன்னர்ப் பேச்சுவழக்காகஇருந்தமொழிபிராகிருதம்ஆகும். தெக்காணப்பீடபூமிக்குவடக்கில்இந்தியாவின்பலபகுதிகளில்பேசப்பட்டமொழி இது. இதன்கிளைகளாகச்சௌரசேனி, சௌராஷ்டிரி, அர்த்தமாகதி, பாலி,

பைசாசிமுதலியமொழிகள்வழங்கின.

இம்மொழியைஇந்தியஅரசுஒருசெம்மொழியாகஏற்றுள்ளது.

இந்தியாவில்இந்நாளில்பேசப்படுகிறகாஷ்மீரி,சிந்தி, பஞ்சாபி, நேப்பாளி, இராஜஸ்தானி, மராத்தி,குஜராத்தி, வங்காளிபோன்றஆரியமொழிகள்யாவற்றுக்கும்பிராகிருதமொழியேபிறப்பிடமாகும்.

சமஸ்கிருதமொழிக்குஇலக்கணம்எழுதியபாணினிபிராகிருதத்திற்கும்இலக்கணம்ஒன்றுஎழுதினார்என்பர். இம்மொழியில்எழுதப்பெற்றபழங்காலக்கல்வெட்டுக்களும்இலக்கியங்களும்கிடைக்கப்பெற்றுள்ளன.

## பாலிமொழி

பாலிமொழிபௌத்தசமயத்தவருக்குப்புனிதமொழியாகும். கவுதமபுத்தர்பாலிஎனும்பேச்சுமொழியிலேயேமக்களுக்குத்தம்கருத்துக்களைஎடுத்துரைத்தார். எனவேஅவரதுகருத்துக்களும்அவற்றிற்கானவிரிவுரைகள்பலவும்பாலிமொழியிலேயேஉள்ளன.

புத்தரின்கருத்துக்களைப்பாதுகாக்கிறமொழிஎனும்பொருளில்பாலிஎனும்சொல் இம்மொழிக்குஅமைந்திற்று.

பாலிமொழியின்தொன்மையானஎழுத்துச்சான்றுகள்கிடைக்கப்பெற்றுள் ளன. அவைஇலக்கியம், இலக்கணம், கல்வெட்டுவடிவங்களால்ஆனவை.

புத்தபிரானின்கருத்துக்கள்அடங்கியதிரிபிடகம்எனும்புனிதநூல்பாலிமொ ழியிலேயேஉளது. இம்மொழிஇந்நாளில்பேச்சுவழக்கில்இல்லை. எனினும்இதன்பழமை, இலக்கியச்செழுமைகருதிஇந்தியஅரசுஇதனைஒருசெம்மொழியாகஏற்று, இதன்வளர்ச்சிக்குஉதவுகிறது.

## அராபிமொழி

### இசுலாமியப்புனிதமொழி

அராபிமொழிசெமிட்டிக்குடும்பத்தைச்சார்ந்தஒருசெம்மொழி. இதுஇசுலாமியர்களின்புனிதமொழி. அவர்களின்புனிதமறையானதிருக்குர் - ஆன்இதிலேயேஎழுதப்பெற்றுளது. திருக்குர்- ஆன்அராபிமொழியின்செவ்விலக்கியமாகக்கருதப்படுகிறது.

இசுலாமியர்கள்தாங்கள்பேசுகிறதாய்மொழியோடு, அராபிமொழியையும்கற்றுக்கொள்ளுதலைஇசுலாமியசமயத்தின்ஒருகடமையாகக்கருதுகின்றனர்.

**பழமைவிரும்பிமொழி**

அராபிமொழிசவுதிஅரேபியா, ஈராக், எகிப்து, லிபியா, அல்ஜீரியாஎனப்பலநாடுகளில்பேசப்படுகிறது. ஆட்சிமொழியாகவும்உள்ளது. இசுலாமியர்கள்உலகெங்கும்பரவியுள்ளனர். எனவேஇம்மொழிஇடத்திற்கேற்பச்சிறுசிறுவேறுபாட்டுடன்பலகிளைமொழிகளாகக்காணப்படுகிறது. அதுபேசப்படுகிறபகுதிகளிலுள்ளபிறமொழிகளின்கலப்பும்பேச்சும்அராபியில்பரவலாகஇடம்பெற்றுளது. ஆனால்எழுத்துஅராபிமொழியில்கலப்புமிகவும்குறைவு.

பண்டையஅராபியில்கிரேக்கம், பாரசீகம், ஈப்ருமொழிகளின்சொற்கள்ஓரளவுகலந்துள்ளன.

எழுத்துமொழியில்பிறமொழிச்சொற்களைக்கலந்துஎழுதுதலைஅராபியப்புலவர்கள்கடுமையாகஎதிர்க்கின்றனர். இதனால்இம்மொழியைஒரு 'பழமைவிரும்பிமொழி' என்றுகூறுவர்.

செமிட்டிக்குடும்பமொழிகளுள்மிகக்குறைவாகப்பிறமொழிக்கலப்புடையதுஅராபிமொழி.ஏனையமொழிகளில்தாராளமாகவேற்றுமொழிச்சொற்கள்கலந்துவழங்குகின்றன.

அராபிமொழியில்தொடக்கக்காலத்தில்வாய்மொழிக்கவிதைகள்மட்டுமே இருந்தன. கவிஞனுக்குமக்களிடம்பெருஞ்செல்வாக்குஇருந்தது. அவன்ஒருதீர்க்கதரிசியாகவும்வழிகாட்டியாகவும்மதிக்கப்பெற்றான். அரசர்களும்செல்வந்தர்களும்கவிஞர்களைப்போற்றினர்

அராபிமொழியின்பழையஎழுத்துச்சான்றுகளாகக்கி.மு 328-இல்வெட்டப்பெற்றஅரசகுடும்பத்தவர்களின்ஈமச்சடங்குபற்றியகல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

பழையஇலக்கியம்எதுவும்கிடைக்கப்பெறவில்லைஆனால்இம்மொழிமுகமதுநபிதோன்றுதற்குமுன்பேமெசபடோமியா,எகிப்து, சிரியாமுதலியநாடுகளில்ஆட்சிமொழியாகஇருந்ததுஎன்பதுகுறிக்கத்தது.

கி.பி. எட்டாம்நூற்றாண்டில்முகம்மதுநபிதோன்றி, இசுலாமியநெறிகள்பரவச்செய்தார். அவர்மொழிந்ததிருக்குர்-ஆன்எனும்இசுலாமியமறையேஇன்றுகிடைக்கப்பெறும் 'ஆதிஅராபிஇலக்கியம்' ஆகும்.

அவரால்கூறப்பெற்றஇசுலாமியர்களின்சட்டத்திற்குஆதாரமாகக்கருதப்படுகிற அல்ஹதீசும்பழையஇலக்கியவகையைச்சாரும்.

இசுலாமியசமயத்தின்வளர்ச்சிஅராபிமொழிதழைக்கத்துணைசெய்தது.சமயம்பரவியஇடங்களிலெல்லாம்அராபிமொழியும்வேரூன்றியது. இசுலாமியக்கலிபாக்கள்இலக்கியவளர்ச்சிக்குஆதரவுக்கரம்நீட்டினர். கிரேக்கம், பாரசீகம், இந்தியமொழிகளிலுள்ளநூல்கள்அராபியில்பெயர்க்கப்பட்டன. பாக்தாத்நகரில்அல்மாமூன்எனும்கலிபா 'தாருல்ஹிக்மத்அறிவியல்நிலையத்தை' நிறுவிமொழிவளர்ச்சிக்குஅடிகோலினார். யூத, கிறிஸ்தவ, இந்தியப்புலவர்களையும்அங்குவரவழைத்துஇலக்கியவளத்தைப்பெருக்கினார். இப்புலவர்கள்மருத்துவம், வானியல், கணிதம், வேதியியல்எனப்பல்வேறுதுறைகளிலும்நூல்களைஇயற்றினர்.

அராபிமொழியில்மொழிபெயர்ப்புஇலக்கியங்களுக்குப்பின்னர்ச்சொந்தமாகப்படைக்கப்பட்டநூல்கள்பேரளவில்பெருகின. கி.பி. பத்தாம்நூற்றாண்டுஅராபிஇலக்கியவரலாற்றில்மிகஉயர்ந்தநிலையைஎய்தியகாலமாகும்.

அராபிஎழுத்துக்கள்வலமிருந்துஇடமாகஎழுதப்படுகின்றன.

ஈராக்அராபி, சிரியாஅராபி, எகிப்தியஅராபி, வடஆப்பிரிக்கஅராபி, மால்டீஸ்அராபி, தென்அராபிஎனஅராபிமொழிவெவ்வேறாகவழங்கப்படுகிறது. இம்மொழிகள்வழங்கப்படுகிறஇடங்களில்பேசப்படுகிறபிறமொழிகளின்கலப்பிற்குஉட்பட்டமையேஇவ்வேறுபாட்டிற்குக்காரணமாகும். மால்டீஸ்அராபிஉரோமன்எழுத்துக்களால்எழுதப்படுகிறது. தென்அராபிமொழியிலேயேமிகப்பழங்காலத்தைச்சார்ந்தகல்வெட்டுக்கள்எழுதப்பட்டுள்ளன. இம்மொழியில்சோமாலிமொழியின்செல்வாக்கினைக்காணலாம்.

**பின்வரும்வினாக்களுக்குவிளக்கமாகவிடைதருக.**

1. இந்தியசெம்மொழிகளைஅறிமுகப்படுத்துக?
2. பிராகிருதமொழிகுறித்துஎழுதுக.

3. சமஸ்கிருதமொழி – விளக்குக.

4. பாலிமொழிஇலக்கியங்கள்குறித்துவிளக்குக.

5. பழமைவிரும்பிமொழியாது? விளக்குக.

**பின்வரும்வினாக்களுக்குகட்டுரைவடிவில்விடைதருக.**

1. “வாழும்செம்மொழிதமிழ்“ என்பதைநிறுவுக.
2. இந்தியசெம்மொழிகள்குறித்துகட்டுரைஎழுதுக.
3. பாரசீகமொழிஇலக்கியவரலாறுகுறித்துதொகுத்துரைக்க.
4. இசுலாமியபுனிதமொழிஅராபிஎன்பதைநிறுவுக.
5. செம்மொழிஇலக்கியமானபாரசீகம்குறித்துவிரிவாகவிளக்குக.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | இந்தியசெம்மொழிகளைஅறிமுகப்படுத்துக? | K2 | CO2 | PO4 |
| 2 | பிராகிருதமொழிகுறித்துஎழுதுக. | K4 | CO3 | PO5 |
| 3 | சமஸ்கிருதமொழி – விளக்குக. | K1 | CO4 | PO1 |
| 4 | பாலிமொழிஇலக்கியங்கள்குறித்துவிளக்குக. | K5 | CO5 | PO2 |
| 5 | பழமைவிரும்பிமொழியாது? விளக்குக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | “வாழும்செம்மொழிதமிழ்“ என்பதைநிறுவுக. | K1 | CO4 | PO4 |
| 2 | இந்தியசெம்மொழிகள்குறித்துகட்டுரைஎழுதுக. | K4 | CO2 | PO6 |
| 3 | பாரசீகமொழிஇலக்கியவரலாறுகுறித்துதொகுத்துரைக்க. | K3 | CO1 | PO5 |
| 4 | இசுலாமியபுனிதமொழிஅராபிஎன்பதைநிறுவுக. | K2 | CO5 | PO6 |
| 5 | செம்மொழிஇலக்கியமானபாரசீகம்குறித்துவிரிவாக | K4 | CO3 | PO3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளக்குக. | | | |

# அலகு – 4

## தமிழின்தொன்மை

உலகில்தொன்மையானமொழிகள்சில.அவற்றுக்கெல்லாம்தமிழ்முதிய மொழியாகும்.

தமிழின்தொன்மைத்தன்மையினைஇலக்கியப்புலவர்கள்,வரலாற்றாசிரியர்கள், மொழிவல்லுநர்கள்எனப்பலதிறத்தாரும்விவரித்து, தங்கள்கருத்துக்களைவலுப்படுத்துதற்கானஉறுதியானசான்றுகளைப்பதிவுசெய் துள்ளனர்.

**இலக்கியச்சான்றுகள்**

தமிழ்மொழிமக்கள்இனம்பேசத்தலைப்பட்டகாலத்தேமுதன்முதலில்தோன் றியது.

இதனைப்புலப்படுத்தஎண்ணியகவிஞர்கள்இம்மொழியைத்தெய்வத்தன்மைபொ ருந்தியதுஎனவும்இறைவனால்படைக்கப்பட்டதுஎனவும்பாடினர்.

**தழற்புரைநிறக்கடவுள்தந்ததமிழ்**

**ஆதியில்தமிழ்நூல்அகத்தியற்குணர்த்தியமாதொருபாகன்**

என்றுபக்திச்சுவைசொட்டச்சொட்டப்பாடினர்.

இறையனார்அகப்பொருளுக்குநக்கீரர்எழுதியகளவியலுரைசிவபெருமான், முருகக்கடவுள்போன்றகடவுளர்கள்முதற்சங்கத்தில்வீற்றிருந்து, தமிழைஆராய்ந்தனர்என்றுவிவரிக்கிறது.

மனோன்மணீயம்எழுதியபேராசிரியர்சுந்தரம்பிள்ளைதமிழேகல்விக்கடவுள்கலைமகளுக்குவலக்கண்ணாகத்திகழ்தலைக்குறிப்பிடுகிறார்.

இத்தகையகவிக்கூற்றுக்கள்புனைவுத்திறன்கொண்டவை.எனினும்உலகங்களின்தோற்றுவாய்க்குஎல்லாம்பழைமையானஇறைவனோடுசார்த்திக்கூறுதலின் நோக்கம் - தமிழ்மொழிமிகத்தொன்மையானபெருமைமிகுமொழிஎன்பதனைஉறுதிப்படுத்துதலேஆகும்.

**கல்தோன்றிமண்தோன்றாக்காலத்தே - வாளொடு**

**முன்தோன்றிமூத்தகுடி**

என்கிறார்புறப்பொருள்வெண்பாமாலைதந்தசேரர்ஐயனாரிதனார்.

தமிழினம்இம்மண்ணுலம்தோன்றுதற்குமுன்னரேதோன்றியதுஎன்பதுஅவர்கருத்து,

**திங்களோடும்செழும்பரிதிதன்னோடும்**

**விண்ணோடும்உடுக்களோடும்**

**மங்குகடல்இவற்றோடும்பிறந்ததமிழ்**

உலகங்கள், உடுக்கள், கோள்கள்யாவற்றிற்கும்முந்தித்தோன்றியதுதமிழ்என்றுபாரதிதாசன்பாடுகின்றார்.

வடமொழியில்எழுதப்பெற்றுள்ளரிக்வேதமும்இராமாயணம், மகாபாரதம்எனும்இதிகாசங்களும்உலகிலுள்ளபழமையானஇலக்கியங்களாகும். ரிக்வேதத்தில்தமிழ்ச்சொற்கள்சிலஇடம்பெற்றுள்ளன. வால்மீகிஇராமாயணத்திலும், வேதவியாசர்மகாபாரதத்திலும்தமிழ்மொழி,தமிழ்நாடு, தமிழ்மன்னர்கள்பற்றிவிவரித்துள்ளனர்.

**வரலாற்றுக்குறிப்புக்கள்**

வரலாற்றுஅறிஞர்ஸ்காட்எலியட்தமது 'இழந்தலெமூரியா' எனும்நூலில் 'மனிதநாகரிகத்தின்தொட்டில்லெமூரியா' என்றுகுறிப்பிடுகிறார். இந்தலெமூரியாக்கண்டம்ஆசியா, ஆப்பிரிக்கா,

ஆஸ்திரேலியாதென்னமெரிக்காபோன்றபெருநிலப்பரப்புக்களைஉள்ளடக்கிஇருந்ததுஎன்பர்.

இப்பகுதிதமிழ்இலக்கியச்சான்றோர்குறிப்பிடுகிறகுமரிக்கண்டத்தோடுதொடர்புடையது.இதுஆழிப்பேரலையால்கவரப்பெற்றது. என்பதுவரலாற்றுமுடிவு. சிலப்பதிகாரத்துள்ளும்மணிமேகலையுள்ளும்தமிழகத்தின்ஒருபகுதிகடலால்கொள்ளப்பட்டதற்கானசான்றுகள்உள்ளன.

**பஃறுளியாற்றுடன்பன்மலையடுக்கத்துக்**

**குமரிக்கோடும்கொடுங்கடல்கொள்ள -சிலப்பதிகாரம்**

அறவணஅடிகள், மாதவி, சுதமதிமூவரும்கடற்கோளிலிருந்துதப்பிப்பிழைத்துவஞ்சிமாநகர்சென்றடைந்தனர்.

**அறவணரடிகளும்தாயரும்ஆங்குவிட்**

**டிறவாதிப்பதிப்புகுந்ததுகேட்டதும்**

என்றுமணிமேகலைகூறுகிறது.

இலக்கியங்களும்வரலாற்றாளர்களும்குறிப்பிடுகிறலெமூரியா, குமரிக்கண்டம்என்பனபழந்தமிழகத்தின்நிலப்பரப்பேஎன்பர்.

களவியலுரைஆசிரியரும்முதற்சங்கம்இருந்ததென்மதுரைகடலுள்அமிழ்ந்ததைசு ட்டிக்காட்டுகிறார்.

குமரிக்கண்டத்தில்வாழ்ந்தஇனம்தமிழர்கள்என்பதும்அவர்களால்பேசப்ப ட்டமொழிதமிழேஎன்பதும்வரலாற்றறிஞர்களின்கொள்கை.

சிந்துவெளிநாகரிகம்உலகநாகரிகங்களுள்மிகப்பழையதுஎனப்படுகிறது. சிந்துவெளிப்பகுதிகளில்அகழ்வாய்வுசெய்ததொல்லியல்அறிஞர்கள்அப்பகுதியி ல்திராவிடர்கள்வாழ்ந்திருந்தனர்என்கின்றனர். அப்பகுதியில்நகரநாகரிகம்நிலவியதும்அங்குக்கிடைக்கப்பெற்றதொல்பொருள்க ளானமுத்திரைகள், உருவச்சிலைகள், எழுத்துருக்கள்போல்வனவும்இந்தஅறிஞர்களுக்குஉறுதியானசான்றுகளாகும். திராவிடர்களின்தெய்வங்களானசிவன், உமாஉருவங்கள்கிடைத்துள்ளன. மண்ஓடுகளிலும்முத்திரைகளிலும்கிடைக்கப்பெற்றுள்ளஎழுத்துருக்கள்தமிழ்எழு த்துக்களைஒத்துக்காணப்படுகின்றன.

தொல்தமிழர்களையேவடநாட்டுஇலக்கியச்சான்றோர்திராவிடர்என்றனர் என்பதுகுறிக்கத்தக்கது.

தமிழ்மிகத்தொல்காலத்திலேயேஇலக்கியஇலக்கணவளம்மிக்கமொழி. தொன்மையும்வளமையும்நாகரிகச்செழுமையும்மிக்கமாந்தர்களுக்கேஇத்தகைய

மொழிஅமையும்.

ஒருமொழியின்பெருமைஅந்தமொழியைப்பேசுகிறமக்களைச்சார்ந்துள்ளது.

தமிழர்களின்நாகரிகமும்பண்பாடும்மிகத்தொன்மையானது,வளமையானதுஎன்

பதைவரலாற்றுக்குறிப்புக்கள்தெரிவிக்கின்றன.

நாகரிகச்செழுமைஉடையபழந்தமிழர்கள்உலகின்பலஇடங்களிலும்வாணி

கம்செய்தனர்.

வடஇந்தியமக்களுக்குஇல்லாததனிப்பெருமைஇவ்வகையில்தமிழர்களுக்குஉண்

டு. வடஇந்தியப்பகுதிகளில்மட்டுமன்றிக்கிரேக்கம், ரோமாபுரி, எகிப்து,

பாபிலோனியா,

சீனாஎனப்பழையநாகரிகமுடையமக்களோடும்தமிழர்களின்கடல்வாணிகம்செழி

த்தது.

சாலமோன்எனும்புகழ்மிகுமன்னன்பற்றிப்புனிதவிவிலியப்பழையஏற்பாட்

டில்விவரிக்கப்பட்டுள்ளது. இம்மன்னன்கி.மு. 10-

ஆம்நூற்றாண்டைச்சார்ந்தவன். இவனுக்குமயில்தோகை, யானைத்தந்தம்,

சந்தனம்,

அகில்முதலானவாசனைப்பொருள்கள்தமிழகத்திலிருந்துஏற்றுமதிசெய்யப்பட்ட

னஎன்பதற்குக்குறிப்புக்கள்உள்ளன.

கிரேக்க,

ரோமநாடுகளுக்கும்தமிழகத்துக்கும்இடையேகடல்வாணிகம்மட்டுமன்றி,

கலாச்சாரம்மற்றும்அரசியல்உறவுப்பரிமாற்றங்களும்இருந்தன.

இஞ்சி,மிளகு,திப்பிலி, சந்தனம்போல்வன.

இந்நாடுகளுக்குஏற்றுமதிசெய்யப்பட்டன.

அங்கிருந்துபொன்னாலானபொருள்களும்புழங்குபொருள்கள்,

கலைப்பொருள்கள்போல்வனவும்இறக்குமதிசெய்யப்பட்டன.

பாண்டியர்களின்முத்துவாணிகம்புகழ்பெற்றது.

எகிப்துப்பேரரசிகிளியோபாட்ராகொற்கைமுத்துக்களைஅணிந்தும்,

உரசிஉண்டும்மகிழ்ந்தார்என்பர்.

ரோமாபுரிப்பேரரசுமுத்து, யானைத்தந்தம், மிளகு,சந்தனம்,

மென்மையானமஸ்லின்துணிகளைப்பேரளவில்இறக்குமதிசெய்தது.

லோலாஎனும்பேரரசிகாலத்தில்இந்தஇறக்குமதிமிகுதியாகஇருந்தது.

பாண்டிநாட்டுமுத்துக்களைப்பேரளவில்வாங்கிக்குவித்ததனால்அந்நாட்டுப்பொருளியல்மிகவும்பாதிப்புக்குள்ளானது. ஆண்டொன்றுக்கு 4,86,979

பவுன்கள்செலவானதுஎன்றுவரலாற்றுஆசிரியர்கள்குறிப்பிட்டுள்ளனர்.

அகஸ்டஸ்சீசரின்தூதர்மெகஸ்தனிஸ்பாண்டியநாடுவந்துசென்றதைஅறிஞர்கள்குறிப்பிடுகின்றனர்.

பாண்டியர்களின்அரண்மனையில்ரோமநாட்டுவீரர்கள்மெய்க்காப்பாளராகவும் அந்தப்புரக்காவலராகவும்பணிசெய்தனர்.

இதனைத்தமிழ்இலக்கியங்களும்பதிவுசெய்துள்ளன.

**மத்திகைவளைஇயமறிந்துவீங்குசெறிவுடை**

**மெய்ப்பைபுக்கவெருவரும்தோற்றத்து**

**வலிபுணர்யாக்கைவன்கண்யவனர்**

**(முல்லைப்பாட்டு)**

சங்கநூல்கள்கிரேக்கர்களையும்ரோமர்களையும்யவனர்என்றுகுறிப்பிடுகின்றன.

யவனர்களின்கலைநுட்பம்நிறைந்தபாவைவிளக்குகள்தமிழகத்திற்குக்கொண்டுவரப்பட்டன. அவைஅரண்மனைகளில்ஏற்றப்பட்டிருந்தன.

**யவனர்இயற்றியவினைமாண்பாவை**

**கையேந்துஐயகல்நிறையநெய்சொரிந்து**

**(நெடுநல்வாடை)**

நெடுநல்வாடைஇவ்வாறுபாவைவிளக்கின்அரியவேலைப்பாட்டினைவிவரிக்கிறது.

தமிழகஅரண்மனைக்கோட்டைகளில்யவனப்பொறிகள்பாதுகாப்பிற்காகப்பொருத்தப்பட்டிருந்தன. பண்டைக்காலரோமாபுரியின்நாணயங்கள், புழங்குபொருள்கள்முதலியனபுதைபொருள்களாகஅரிக்கமேடு, புதுச்சேரிபோன்றஇடங்களில்கிடைத்துள்ளன.

கி.மு. 5ஆம்நூற்றாண்டில்பாபிலோனியாவுக்குஅரிசி, மயில், சந்தனம்ஏற்றுமதிஆயின. கி.மு. 7ஆம்நூற்றாண்டில்அசரியநாட்டுமன்னனுக்குயானைஅன்பளிப்பாகஅனுப்பி வைக்கப்பட்டது. நீலிச்சாயம்தோய்க்கப்பெற்றதுணிகளைத்தமிழகவாணிகர்கள்பாரசீகம், எகிப்துநாடுகளுக்குஏற்றுமதிசெய்தனர்.கி.மு. 9ஆம்நூற்றாண்டில்பிலிப்பைன்ஸ்நாட்டுடன்தமிழர்களுக்குவாணிகத்தொடர்பு இருந்ததைஅங்குக்கிடைத்திருக்கிறபுதைபொருள்கள்புலப்படுத்துகின்றன.

சீனமக்களுடன்தமிழர்கள்கொண்டிருந்ததொடர்பும்பழைமையானது. அந்நாட்டுவாணிகர்கள்சர்க்கரை, மெல்லியபட்டுத்துணிகளைத்தமிழகத்திற்குக்கொண்டுவந்துஇறக்கினர்.

சர்க்கரையைச்சீனிஎன்றுதமிழில்குறிப்பிடுதல்இந்தத்தொடர்பினால்உருவான தே.

சாணக்கியரின்அர்த்தசாஸ்திரம், தாலமியின்நிலநூல்விவரம், பெரிப்ளூஸ்ஆகியபழங்காலநூல்கள்தமிழகத்தில்கொற்கை, புகார், முசிறித்துறைமுகங்களில்வாணிகம்சிறந்துவிளங்கியதையும்எகிப்து, சிரியா, பாபிலோனியாபோன்றநாடுகளுடன்தொடர்புஇருந்ததையும்விவரிக்கின்றன.

**மொழியியற்செய்திகள்**

சுமேரியநாகரிகம்மிகத்தொன்மையானது. ஆயிலும்அம்மக்களின்மொழியைவிடவும்தமிழ்மொழிமிகத்தொன்மையும்சீர்மையும்உடையதுஎன்றுஹீராஸ்பாதிரியார், கான்ஈவான்ஸ்முதலியஅறிஞர்கள்விவரிக்கின்றனர்.

ரைஸ்டேவிட்எனும்மொழியறிஞர்சமஸ்கிருதம், ஈப்ரு, கிரேக்கம்ஆகியசெம்மொழிகளில்தமிழ்ச்சொற்கள்கலந்துஇருத்தலைச்சுட்டிக்காட்டுகிறார்.

மலையாளம், கன்னடம், தெலுங்குபோன்றஇருபத்தைந்துக்குமேற்பட்டமொழிகள்பிறத்தற்குஆதாரமாக - தாயாகத்தமிழ்விளங்குகிறது.

தொல்பழங்காலத்தில்பிளக்கப்படாதஇந்தியத்துணைக்கண்டம்முழுவதும் வாழ்ந்தமக்களின்மொழியாகத்தமிழேஇருந்தது. ஆரியர்கள்வந்துவடக்குப்பகுதிகளில்குடியேறிநிலைத்ததும், தமிழ்தெற்குப்பகுதிமக்களின்மொழியாகிவிட்டது. சிந்துநாகரிகம்தமிழர்களுடையதுஎன்பதும், திராவிடமொழிகளுள்ஒன்றாகியபிராகுயிபாக்கிஸ்தான்நாட்டின்பலுச்சிஸ்தான் பகுதிகளில்பேசப்படுதலும், பெங்கோ, மண்டா, குரூக், மால்டோ, குயிஎனத்திராவிடப்பழங்குடிமக்களின்மொழிகள்பலஇந்தியாமுழுவதிலுமாகப்ப ரவிப்பேசப்படுதலும், தமிழ்இந்தியாமுழுவதிலும்முன்னாட்களில்பேசப்பட்டதுஎன்றகருத்துக்கானசான் றுகளாகும்.

பாலஸ்தீனநாட்டின்தாய்மொழியானபழையஈப்ருமொழியில்துகிம், அஹலத்முதலியசொற்கள்காணப்படுகின்றன. இச்சொற்கள்தமிழின்தோகை, அகில்என்பவற்றின்திரிபுகளாகும்.

கிரேக்கமொழியில்உள்ளசிக்கிபெரோஸ், ஒருசா, பெப்பரிஎன்பனதமிழ்ச்சொல்லிலிருந்துகடன்வாங்கப்பெற்றவைஆகும். இஞ்சிவேர்சிக்கிபெரோஸ்ஆகியுள்ளது. அரிசிஒருசாஎனத்திரிந்துள்ளது. திப்பிலிபெப்பரிஆகியுள்ளது.

## தமிழ்மொழியின்தனிச்சிறப்புகள்

பால்வாய்ப்பசுந்தமிழினைப்பரம்பொருளுக்குஇணையாகக்காட்டிஉவகை அடைவார்பேராசிரியர்சுந்தரம்பிள்ளைஅவர்கள்,

**பல்லுயிரும்பலஉலகும்படைத்தளித்துத்**

**துடைக்கினும்ஓர்**

**எல்லையறுபரம்பொருள்முன்இருந்தபடி**

**இருப்பதுபோல்**

இருக்கின்றஇன்பத்தமிழேஇவ்வுலகமொழிகளிலேயேஇனிமையுடைத்துஎன்பத னை,

**யாமறிந்தமொழிகளிலேதமிழ்மொழிபோல்**

**இனிதாவதுஎங்கும்காணோம்**

எனப்பாரதிஎடுத்துக்காட்டித்

**தெள்ளுற்றதமிழமுதின்சுவைகண்டார்**

**இங்கமரர்சிறப்புக்கண்டார்**

எனத்தெய்வத்தமிழின்சிறப்பினைச்செப்புவதன்வழிதமிழின்தனிச்சிறப்பைநன்கறியலாம்.

## வாழ்க்கைக்குஇலக்கணம்

வாழ்க்கைக்குஇலக்கணம்வகுத்தபெருமைநம்மொழிக்கேஉண்டு. உலகத்திலுள்ளஅனைத்துமொழிகளிலும்இல்லாததனிச்சிறப்புஇதுவாகும். எழுத்து, சொல், பொருள்,யாப்பு, அணிஎனஐந்துஇலக்கணஅழகுகளுடன்அணிபெறத்திகழ்வதுஅன்னைத்தமிழாகும்.

## உலகநீதிநூல்

எண்ணரியஇலக்கணஇலக்கியப்பனுவல்கள்நிறைந்துவிளங்கும்ஏற்றமுளஎன்றுமுளதென்றமிழில்இருப்பதுபோல்அறநூல்கள்அயல்மொழிகளில்இல்லாததும்தனிச்சிறப்பே.

எடுத்துக்காட்டாகப்பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள்மட்டும்பதினொன்றுநூல்

கள்அறக்கருத்துகளையேவலியுறுத்திநிற்கின்றன.

உலகநீதிஇலக்கியங்களுள்தலைசிறந்ததாகப்போற்றப்பெறுவதும்நந்தமிழ்மொழியிலுள்ளதிருக்குறளேஆகும்.

## வடமொழியினும்சிறந்தது

வடமொழியினும்சிறந்ததுநம்தமிழ்மொழி.

திருவாசகத்தேனில்ஊறித்திளைத்தஇராமலிங்கஅடிகளாரும்சுவைகண்டார்.

அதனை,

**வான்கலந்தமாணிக்கவாசகநின்வாசகத்தை**

**நான்கலந்துபாடுங்கால்நற்கருப்பஞ்சாற்றினிலே**

**தேன்கலந்துபால்கலந்துசெழுங்கனித்தீஞ்சுவைகலந்தென்**

**ஊன்கலந்துஉயிர்கலந்துஉவட்டாமல்இனிப்பதுவே(3263)**

என்பதன்வழிதமிழின்தனிச்சுவைகண்டதைக்கூறுவார்.

சிவப்பிரகாசஅடிகளாரும்வடமொழியைவிடவண்டமிழின்திருவாசகமேஉள்ளத்தைஉருக்கும்தன்மைபடைத்ததுஎன்கின்றார்.அதனை,

**விளங்கிழமைபகிர்ந்தமெய்யுடைமுக்கட்**

**காரணன்உரையெனும்ஆரணமொழியோ**

**ஆதிசீர்பரவும்வாதவூர்அண்ணல்**

**மலர்வாய்ப்பிறந்தவாசகத்தேனோ**

**யாதோசிறந்ததென்குவீராயின்**

**வேதம்ஓதின்விழிநீர்பெருக்கி**

**நெஞ்சம்நெக்குருகிநிற்பவர்க்காண்கிலேம்**

**திருவாசகம்இங்கொருகால்ஓதின்**

**கருங்கல்மனமும்கரைந்துகக்கண்கள்**

**தொடுமணற்கேணியின்சுரந்துநீர்பாய**

**மெய்ம்மயிர்பொடிப்பவிதிர்விதிர்ப்பெய்தி**

**அன்பராகுநரன்றி**

**மன்பதைஉலகில்மற்றையர்இலரே**

எனநால்வர்நான்மணிமாலையில்அழகுறஎடுத்துக்காட்டித்தமிழிலக்கியத்தின்தனித்தன்மையைத்தரணிக்குக்காட்டுகின்றார். உயர்ந்தநாகரிகமும், பழம்பெருமையும்உடையமொழியில்தான்இத்தகையஇலக்கியங்கள்தோன்றமுடியும்.

## பிறமொழிக்குத்தாய்மொழி

பல்லூழிக்காலம்பண்பாட்டுப்பெருமையில்இலக்கணஇலக்கியச்செழுமையால்வளர்ந்துவாழும்வண்டமிழின்சேய்மொழிகளாகச்சிலபிறந்துள்ளன. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, குடகுபோன்றதிருந்தியசெம்மைமொழிகளும்துதம். கோதம், கோர்ணட், கூ,

ஓரியன்போன்றதிருந்தாமொழிகளும்தமிழ்த்தாய்பெற்றெடுத்தகுழவிமொழிகளாகும். இதனையே,

**கன்னடமும்கனிதெலுங்கும்கவின்மலையாளமும்துளுவும்உன்உதரத்துதித்தெழுந்தேஒன்றுபலஆயிடினும்**

**(தமிழ்த்தெய்வவணக்கம்)**

எனமனோன்மணீயம்ஆசிரியர்பேராசிரியர்சுந்தரம்பிள்ளையும்எடுத்துக்காட்டுவதன்வழிஅறியலாம்.

"தமிழ், தெலுங்கு, கன்னடம்ஆகியமூன்றுமொழிகளுள்ளும்தமிழ்மொழிஒன்றேதூய்மைகெடாதுதனித்தியங்கவல்லது. மேலும்தமிழையேமற்றிரண்டின்தாய்மொழியாகப்பலகாலம்கருதுகின்றனர்ஆராய்ச்சிவல்லுநர்" என்கின்றார்சேவியர்ரேய்மாண்ட் (Xaviour Raymond) அவர்கள்.

## கிரேக்கஇலத்தீன்மொழியினும்உயர்வு

கவிதைவடிவமைப்பில்தமிழ்மிகவும்பண்பட்டதென்றும்கிரேக்கமொழியினும்உயரியதன்மைஉடையதென்றும்இலத்தீன்மொழியைவிடமிக்கசொல்வளம்படைத்ததென்றும், வாழும்பிறமொழிகளைக்காட்டிலும்நிறைவிலும்ஆற்றலிலும்ஜெர்மன்மற்றும்ஆ

ங்கிலமொழியைப்பெரிதும்ஒத்துச்செல்வதும்செந்தமிழ்மொழியேஎன்கின்றார்அறிஞர்டாக்டர்வின்ஸ்லோ (Dr. Winslow) அவர்கள்.

**உலகம்தழுவியஒருமொழி**

உலகெலாம்நிறைந்துநிற்கும்இறைவன்போல்உயரியதமிழ்மொழியும்நிலைபெற்றுநிலவுகின்றதுஎன்பதைச்சுந்தரம்பிள்ளைகாட்டுவார்.

தமிழ்மொழிவழங்காதஇடமேவையத்துள்இல்லைஎன்பதைக்காட்டவிழைந்தவர்,

**சதுமறையாரியம்வருமுன்சகமுழுதுநினதாயின்முதுமொழிநியநாதியென மொழிகுவதும்வியப்பாமே**

எனக்கூறிவியக்கின்றார். தமிழேஉலகத்திருந்தஒருமொழிஎன்பதை,

**அம்புவிதனக்குள்வளர்செந்தமிழ்வழூத்தியுனைஅன்பொடுதுதிக்கமனம்அருள்வாயே**

**(திருப்புகழ் 364)**

எனஅருணகிரிநாதர்அறிவுறுத்துவதினின்றும்அறியலாம்.

**உயர்தனிச்செம்மொழி**

"தான்வழங்கும்நாட்டின்கண்உள்ளபலமொழிகட்குத்தலைமையும், அவற்றிலும்மிகவேதகவுடைமையும்உள்ளஉயர்ந்தமொழி; தான்வழங்கும்நாட்டிற்பயிலும்மற்றையமொழிகளின்உதவியின்றித்தனித்துஇய

ங்கவல்லஆற்றல்சான்றதனிமொழி!

திருந்தியபண்பும்சீர்த்தநாகரிகமும்பொருந்தியதூயமொழிஎனப்புகலும்படியான செம்மொழி" எனஉயர்மொழி, தனிமொழி, செம்மொழிக்குவிளக்கம்தந்துதமிழைஉயர்தனிச்செம்மொழிஎன்கின்றார்பரிதிமாற்கலைஞர்.

**கவரிவீசவைத்தகன்னித்தமிழ்**

தமிழ்மொழியின்தனிச்சிறப்பும்தரணிபுகழ்உயர்வும்நோக்கியேமுடியுடைமூவேந்தரும்குறுநிலமன்னர்களும், வள்ளல்பெருமக்களும்வரையாதுவாரிவாரிவழங்கிப்புலவரிடத்தேமண்டிக்கிடந்தவறுமைத்துயரைவிரட்டியுள்ளனர். இங்ஙனம்கொடைநல்கிஇன்பத்தமிழ்ப்பாக்களைப்பெற்றமைநந்தமிழ்மொழியின்நனிமிகுசிறப்பினாலன்றோ?

சேரமான்தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறையின்முரசுக்கட்டிலில்அறியாதேறித்துயின்றமோசிகீரனாரைக்கொன்றிடாதுதுயிலெழுந்துணையும்கவரிகொண்டுவீசவைத்ததுவளமார்தமிழின்சிறப்பாகும். அந்நிகழ்ச்சியை.

**"மென்பூஞ்சேக்கை**

**அறியாதேறியவென்னைத்தெறுவர**

**இருபாற்படுக்குநின்வாள்வாயொழிந்ததை**

**அதூஉஞ்சாலுநற்றமிழ்முழுதறிதல்**

**அதனொடுமமையாதணுகவந்துநின்**

**மதனுடைமுழுத்தோளோச்சித்தண்ணெனவீசியோயே"**

**(புறம்.50:7-13)**

எனமோசிகீரனாரேஎடுத்துக்காட்டுவதன்வழிஅறியலாம்.

## நெல்லிக்கனிக்கீடாகவாழ்த்து

அதியமான்நெடுமானஞ்சிஅரிதின்முயன்றுபெற்றஅருநெல்லிக்கனியை ஒளவைக்களித்ததும்ஒண்டமிழின்உயர்சிறப்பன்றோ? உண்டாரைநெடிதுவாழச்செய்யும்நெல்லிக்கனியைத்தானுண்ணாதுஒளவைக்கு அளித்தான். தான்வாழ்வதைக்காட்டிலும்ஒளவைநீண்டநாள்கள்வாழ்ந்தால்நீள்தமிழும்நிலைத்துநிற்கும்எனும்நப்பாசைதான்வாழநினையாதுஅருநெல்லிக்கனியைஒளவைக் களித்தான்என்றால்அங்கே - அவன்நெஞ்சகத்தில்நிலைத்துநின்றது . நற்றமிழ்உணர்வே! அந்தத்தமிழ்த்தெய்வத்திடமிருந்துநெல்லிக்களிக்குஈடாக,

**பால்புரைபிறைநுதற்பொலிந்தசென்னி**

**நீலமணிமிடற்றொருவன்போல**

**மன்னுகபெருமநீயேதொன்னிலைப்**

**பெருமலைவிடரகத்தருமிசைக்கொண்ட**

**சிறியிலைநெல்லித்தீங்கனிகுறியா**

**தாதனனின்னகத்தடக்கிச்**

**சாதனீங்கவெமக்கீத்தனையே**

**(புறம். 91: 5-11)**

என்னும்வாழ்த்தினைப்பெற்றானேஅஃதொன்றேபோதும்!

## பகைமைமாற்றியபைந்தமிழ்

தமிழ்வாழ,

தான்வாழ்ந்ததண்டமிழ்வள்ளல்குமணனுக்கும்அவன்இளவல்இளங்குமணனுக்கும்பகைமையேற்பட்டுஇளவல்நாடுகொள, குமணன்வாழ்ந்துவருங்காலை, புலவர்பெருந்தலைச்சாத்தனார்கண்ணுற்றுவருந்தகுமணன்தன்தலையைத்தருதற்பொருட்டுப்புலவரிடம்வாள்தரஅதனைஎடுத்துக்கொண்டுஇளங்குமணனைக்கண்டுகுமணனின்குணமெல்லாம்எடுத்துரைத்துயான்வாழ -

தமிழ்வாழதலைநல்கமுன்வந்தானே! அவனின்தம்பியல்லவாநீ! எனக்கூறிஇருவர்மாட்டும்இருந்தபகைமையுணர்ச்சியைமாற்றியபெருமைமாண்புறுதமிழ்க்கன்றிவேறுஎம்மொழிக்குண்டு?

## இனியஉயிர்கள்காத்தஇன்றமிழ்

சோழன்நலங்கிள்ளியிடமிருந்துநெடுங்கிள்ளியிடம்இளந்தத்தன்என்னும்புலவர்வரஅவரைஒற்றரெனக்கருதிநெடுங்கிள்ளிகொல்லப்புக்குழிஅச்செயல்கண்

டுகோவூர்கிழார்இளந்தத்தனின்தூதுவராகமாறிப்புலவரைக்காத்ததும், சோழன்குளமுற்றத்துஞ்சியகிள்ளிவளவன்மலையமான், மைந்தர்களையானைக்கிடுவுழிஅக்காட்சியினைக்காணப்பொறாதுஅம்மைந்தர் கள்சார்பில்தூதுசென்றுஅவர்களைவிடுவித்ததும், கோப்பெருஞ்சோழனும்அவரின்இருமைந்தர்களும்தந்தையுடன்போரிடமுற்பட்ட பொழுதுசெய்தியறிந்துபுல்லாற்றூர்எயிற்றியனார்மக்களின்மடமையினையும்ம ன்னவனின்மனநிலையினையும்அறிந்துபோர்நிகழாவண்ணம்தடுத்ததும், அதியமான்நெடுமானஞ்சிக்கும்தொண்டைமான்இளந்திரையனுக்கும்நிகழவிருந் தபெரும்போரைஔவையார்நிறுத்தியதும்தமிழின்சொல்லாற்றலும்இனிமையும் சிறப்பும்அன்றோகாரணம்!

**நற்றமிழ்ச்சுவைவிரும்பியநமசிவாயம்**

தெய்வங்களையும்கவர்ந்திழுக்கும்ஆற்றல் - திறமைகன்னித்தமிழுக்குண்டென்றனர். தமிழ்மொழிதெய்வமொழிஎன்பதனை,

**கொன்றைச்சடையார்க்கொன்றைத்தெரியக்**

**கொஞ்சித்தமிழாற்பகர்வோனே (திருப்புகழ் 137)**

எனஅருணகிரிநாதர்எடுத்துச்சொன்னதற்கியையசிவபெருமான்தமிழ்ச்சுவைக்கா கஅரியசெயல்களைச்செய்துநின்றமையினைஇலக்கியங்கள்இயம்பிநிற்கின்றன.

திருவாரூரிலேபரவைநாச்சியாரின்ஊடலைத்தீர்க்கத்தெருவில்சிவனையே அலையவைத்துநம்பிஆரூரரின்நற்றமிழ்.

முதலையுண்டபாலகனைக்கழிந்தபருவத்தோடுவருவித்ததும், மயிலாப்பூரில்குடத்திலுள்ளஎலும்பைமீண்டும்பெண்ணாக்கியதும்மறைக்கதவினைத்திறந்ததும்நரிகளைப்பரிகளாக்கியதும், நமசிவாயம்நற்றமிழ்ச்சுவையிடத்துவைத்துமாளாதக்காதலேகாரணங்களாகும்.

**பைந்தமிழ்ப்பின்சென்றபசுங்கொண்டல்**

பச்சைமாமலைபோல்மேனி, பவளவாய்க்கமலச்செங்கனாய்விளங்கும்திருமாலும்தீந்தமிழினிடத்துவிருப்பமுடையார்என்பதனை.

**பழமறைகண்முறையிடப்பைந்தமிழ்ப்பின்சென்றபச்சைப்பசுங்கொண்டலே (காப்புப்பருவம் -1)**

எனக்குமரகுருபரர்தமதுமீனாட்சியம்மைபிள்ளைத்தமிழில்எடுத்துக்காட்டுவார். பைந்தமிழின்பின்சென்றவன்என்பதனை,

**கணிகண்ணன்போகின்றான்காமருபூங்கச்சிமணிவண்ணா!**

**நீகிடக்கவேண்டாம் -**

**துணிவொன்றிச்செந்நாப்புலவன்யான்செல்கின்றேன்நீயுமுன்றன்பைந்நா**

**கம்பாய்ச்சுருட்டிக்கொள்**

எனதிருமழிசையாழ்வார்பாடலும்,

**ஆடரவத்**

**தாழ்பாயலாளரைநீதானேதொடர்ந்தாயோசூழ்பாயோடுன்னைத்**

**தொடர்ந்தாரோ(91-93)**

எனத்தமிழ்விடுதூதின்பாடலும்விளக்கிக்காட்டும்.

இங்ஙனம்கொடுத்தெடுத்துத்தெள்ளித்தெளிக்குந்தமிழ்மொழிதெய்வங்களையும்தம்பால்ஈர்த்துத்தமதாக்கிக்கொண்டபெருமையினையுடைத்ததாகப்புலவர்கள்பாடியிருப்பதினின்றும்,

**தமிழம்மே! நின்சீர்முழுதும்அறைதல்**

**யார்க்கெளிதே**

எனஅரங்கவேங்கடாசலம்பிள்ளைஅவர்கள்அறைந்துள்ளதினின்றும்புத்தமுதம்வழிந்தொழுகும்தீந்தமிழ்நினைக்கநினைக்கச்சுவையூறிநெஞ்சமெலாம்நிலைத்துநிற்பதில்வியப்பொன்றுமில்லை.

## சிவனால்தோற்றுவித்ததமிழ்

கம்பராமாயணத்துள்,

**தழற்புரைசுடர்க்கடவுள்தந்ததமிழ்**

எனக்கம்பரும்,

**மறைமுதற்கிளந்தவாயான்மதிமுகிழ்முடித்தவேணிஇறைவர்தம்பெயரைநாட்டிஇலக்க**

**ணம்செய்யப்பெற்றே**

**அறைகடல்வரைப்பில்பாடைஅனைத்தும்வென்றாரியத்தோடு**

**உறழ்தருதமிழ்த்தெய்வத்தைஉள்நினைந்தேத்தல்செய்வாம்.**

**(காளத்திப்புராணம்)**

எனக்கருணைப்பிரகாசரும்கூறுவதன்வழிஅறியலாம்.

தமிழ், சிவன்என்னும்சொற்கள்ஒரேபொருளனஎன்பதை,

**தமிழ்சிவமினிமையெனுந்தனிப்பொருளாம்**

**அமிழ்தெனும்அநாதியியற்கையாயப்பன்னிருகலையினையுடையக**

**திரவனென்னத்**

**தலைமையாயமைந்ததனியியற்பிதாமொழி**

எனப்பேரிகைச்சூத்திரம்பேசுவதன்வழிஅறியலாம்.

சிவபெருமான்அகத்தியமுனிவருக்குத்தமிழ்இலக்கணத்தைத்தந்தருளினார் என்பதை,

**விடையுகைத்தவன்பாணினிக்கிலக்கணமேனாள்**

**வடமொழிக்குரைத்தாங்கியன்மலயமாமுனிக்குத்கிடமுறுத்தியம்மொழிக்**

**கெதிராக்கியதென்சொல் (87)**

எனப்பரஞ்சோதிமுனிவரும்,

**வடமொழியைப்பாணினிக்குவகுத்தருளியதற்கிணையாத்தொடர்புடையதென்**

**மொழியையுலகமெலாந்தொழுதேத்துங்**

**குடமுனிக்குவலியுறுத்தார்கொல்லேற்றுப்பாகரெனிர்**

**கடல்வரைப்பினிதன்பெருமையாவரேகணித்தறிவார்இருமொழிக்குங்கண்ணுத**

**லார்முற்குரவரியல்வாய்ப்இருமொழியும்வழிப்படுத்தார்முனிவேந்தரிசைப்பரப்பு**

**ம்இருமொழியுமான்றவரேதழீஇயினாரென்றாலிவ்**

**விருமொழியுநிகரென்றுமிதற்கையமுளதேயோ**

**(காஞ்சிப்புராணம் - தழுவக்குழந்தைபடலம்)**

எனச்சிவஞானமுனிவரும்,

**கோயிற்சிறந்துசிற்றம்பலத்தாடும்எங்கூத்தப்பிரான்வாயிற்சிறந்தமதியிற்**

**சிறந்தமதுநுதலே (214)**

எனமணிவாசகப்பெருந்தகையும்,

**ஆதிசிவன்பெற்றுவிட்டான் - என்னை**

**ஆரியமைந்தன்அகத்தியன்என்றோர்**

**வேதியன்கண்டுமகிழ்ந்ததேநிறை**

**மேவும்இலக்கணஞ்செய்துகொடுத்தான்**

எனத்தமிழ்த்தாயின்கூற்றாகப்புரட்சிக்கவிஞர்பாரதியாரும்மொழிந்துள்ளதினின்

றும்நன்கறியலாம்.

**அகத்தியருக்கும்முன்பிருந்ததமிழ்**

அகத்தியமுனிவன்பொதிகைமலையில்தங்கித்தமிழைத்தோற்றுவித்தார்எ

னும்கதைக்குச்சிலஇலக்கியங்கள்சான்றுபகருகின்றன.

**பொருப்பிலேபிறந்துதென்னன்புகழிலேகிடந்துசங்கத்திருப்பிலேயிருந்து**

**வைகையேட்டிலேதவழ்ந்தபேதைநெருப்பிலேகிடந்துகற்றோர்நினைவி**

**லேநடந்தோரேனமருப்பிலேபயின்றபாவைமருங்கிலேவளருகின்றாள்**

எனத்திருவிளையாடற்புராணமும்,

**ஓங்கலிடைவந்துயர்ந்தோர்தொழவிளங்கி**

**ஏங்கொலிநீர்ஞாலத்திருளகற்றும்- ஆங்கவற்றுள்**

**மின்னேர்தனியொழிவெங்கதிரொன்றேனையதுதன்னேரிலாததமிழ்**

எனத்தண்டியலங்காரம்மேற்கோள்பாடலும்தெளிவுறுத்தும்.

ஆனால்அகத்தியமுனிவன்தென்னகம்வருவதற்குமுன்னரேஅழகுதமிழ்தமி

ழகத்துவீதிகளில்உலவிவந்தசெய்திகளைச்சிலபாக்கள்செப்புகின்றன.

அகத்தியன்அருந்தமிழ்நாடடைந்துஆங்கிருந்தபால்வாய்ப்பசுந்தமிழினைக்சுற்று

அதன்வழிஅழியாப்புகழினைஅவனிமேற்கொண்டான்எனும்செய்தியினை,

**நின்றவனைவந்தநெடியோனடிபணிந்தான்**

**அன்றவனும்அன்பொடுதழீஇயமுதகண்ணான்**

**நன்றுவரவென்றுபலநல்லுரைபகர்ந்தான்**

**என்றுமுளதென்றமிழ்இயம்பிசைகொண்டான்**

எனக்கம்பர்எழிலுறக்காட்டுவார்.

இக்கருத்தினைவலியுறுத்துவான்போல்பரஞ்சோதிமுனிவரும்வழிமொழிகின்றார்

.

அகத்தியன்தென்னகம்வருவதற்குப்பன்னெடுங்காலத்திற்குமுன்பேதமிழகம்கல்வி - கேள்விகளில்சிறந்துவிளங்கியதாகக்குறிப்பிட்டுள்ளார்.

வடகிழக்கெல்லையினின்றுதென்மேற்கெல்லைக்குஅகத்தியன்செல்லுதற்குமுன்பாகவெள்ளெருக்கஞ்சடைமுடியானிடத்துவிடைபெறவருகின்றார். அப்போதுஅம்முனிவன்உலகெலாமுணர்ந்துஓதுதற்கரியவனிடத்துஒன்றைவேண்டுகின்றார். "அடியேன்செல்லஇருக்கின்றஊர், சீர்சால்செந்தமிழ்நாடெனக்கூறுவர். அந்தத்தமிழ்நாட்டிடத்துவாழும்மாந்தர்கள்அனைவரும்இனியதமிழ்நூலைநன்காராய்ந்துநூல்கேள்வியால்அறிவுநிரம்பப்பெற்றவர்களென்று. கூறுவார்கள். ஆதலினால்அத்தமிழ்நூலில்வினாவினார்க்குஏற்றாற்போல்விடையளிக்கவேண்டும்.

எமதுஇறைவனேஎனவேநற்றமிழ்நாட்டில்நடமிடும்இன்றமிழுக்குரியஇலக்கண நூலினைஅருளுகஎனஇறைஞ்சிநின்றதாக,

**விடைகொடுபோவானொன்றைவேண்டினானேகுந்தேயந்தொடைபெறுதமிழ் நாடென்றுசொல்லுபஅந்தநாட்டின்இடைபயில்மனத்தரெல்லாமின்றமிழாய்ந்து கேள்விஉடையவரென்பகேட்டார்க்குத்தரமுரைத்தல்வேண்டும்**

**(2577)**

**சித்தமாசகலவந்தச்செந்தமிழியினூறன்னை**
**அத்தனேயருளிச்செய்தியென்றனன்**

**(2578)**

என்னும்திருவிளையாடற்புராணப்பாக்கள்வழிபரஞ்சோதிமுனிவர்புலப்படுத்திக் காட்டுவார்.

தமிழ்நூலைநன்காராய்ந்துநூல்கேள்வியால்அறிவுநிரம்பப்பெற்றவர்கள்எனத்தாம்கூறக்கேட்டதாசகஅகத்தியர்கூற்றேகாணக்கிடப்பதால்அம்முனிவன்தென்னகம்வருவதற்குமுன்னரேதென்றமிழ்தீதுதீர்தமிழ்நாட்டின்கண்இருந்ததென்பதைஇனிதறியமுடிகின்றது.

தமிழகமாந்தர்கள்நூல்கேள்வியால்அறிவுநிரம்பப்பெற்றவர்கள்என்பதனால்அவர்கட்குத்தமிழ்அறிவுறுத்தியஆசான்கள்இருந்தனர்என்பதும்தமிழ்மொழியில்நூல்கள்பலநிறைந்திருந்தனஎன்பதும்பெறப்பெறுகின்றது.

## கடவுளரும்முனிவர்களும்

அயன், மால், சிவன்முதலோரும்தமிழ்பேசுவர். இந்திரன், குபேரன்முதலோரும், தாருகன், இரணியன்முதலோரும், அன்னர், அகத்தியர், மார்க்கண்டேயர். வான்மீகர், கவுதமர், சுகர், வசிட்டர், காசிபர்முதலியமுனிவர்களும், தமிழ்நூல்செய்தவராவர். சனகர், சனக்குமாரர்முதலோரும்தமிழ்நூலாராய்ந்தவர்.

**வசிட்டர்காசிபர்தவத்தானயோகியர்**

**அகத்யமாமுனியிடைக்காடர்கீரனும்**

**வகுத்தபாவினிற்பொருட்கோலமாய்வருமுருகோனே**

**(திருப்புகழ்)**

என்பதனால்அவ்வுண்மைதெளிந்துகொள்களனமாகறல்கார்த்திகேயமுதலியார் அவர்கள்குறிப்பிடுவதன்வழிநன்கறியலாம்.

**தமிழினிடத்துள்ளவேட்கை**

சிவபெருமான்சுந்தரேசராகவும், உமாதேவிதடாதகைப்பிராட்டியராகவும், முருகக்கடவுள்உக்கிரகுமாரராகவும்அவதரித்ததற்குத்தேன்தமிழினிடத்துள்ளதணியாவேட்கையேகாரணமாகும்என்பதை,

**தமரநீர்புவனமுழுதொருங்கீன்றாள்**

**தடாதகாதேவியென்றொருபேர்**

**தரிக்கவந்ததுவுந்தனிமுதலொருநீ**

**சவுந்தரமாறனானதுவும்**

**குமரவேள்வழுதியுக்கிரனெனப்பேர்**

**கொண்டதுந்தண்டமிழ்மதுரம்**

**கூட்டுணவெழுந்தவேட்கையாலெனிலிக்**

**கொழிதமிழ்ப்பெருமையாரறிவார்"**

**(மதுரைக்கலம்பகம் -93)**

என்னும்பாடல்வழிஎழிற்றமிழ்உலகிற்குஎடுத்துக்காட்டுவார்.

**தமிழ்ச்சுவையேகாரணம்**

மதுரைமாநகர்க்குத்தெய்வங்கள்வந்ததும்தீஞ்சுவைக்கனியுந்தண்டேன றையும்வடித்தெடுத்தசாரங்கனிந்தூற்றிருந்தபசுந்தமிழின்சுவையினைஅள்ளிப்ப ருகிடவேஎன்பதனை,

**கடுக்கவின்பெறுகண்டனுந்தென்றிசைநோக்கி**

**அடுக்கவந்துவந்தாடுவானாடலினினைப்பு**

**விடுக்கவாராமென்கால்திருமுகத்திடைவீசி**

**மடுக்கவுந்தமிழ்திருச்செவிமாந்தவுமன்றோ**

**(காஞ்சிப்புராணம்)**

எனசிவஞானமுனிவரும்.

**அண்ணலார்**

**தென்பால்உகந்தாடுஞ்செய்தியெலாம்உன்னிடத்தில்அன்பாவென்றப்பா**

**லும்ஆரறியார்**

எனத்தமிழ்விடுதூதுஆசிரியரும்எடுத்துக்கூறுவதினின்றும்அறியலாம்.

## அடைமொழிகள்பலபெற்றஅன்னைத்தமிழ்

செந்தமிழின்சிறப்புகருதியேபற்பலஅடைமொழிகளால்சிறப்பளித்துள்ளனர்செந்தமிழ்ப்புலவர்கள். இனிமையும்நோமையும்தமிழ், பாலேய்பசுந்தமிழ், செந்தமிழ், ஒண்டமிழ். மூவுலகும்புகழ்முந்துதமிழ், தெரிமாண்தமிழ், தமிழெனும்தீஞ்சொல், தமிழ்தழுவியசாயல், தேனிலேஊறியசெந்தமிழ்என்றெல்லாம்பலவாறுஅடையும்சிறப்பும்கொடுத்துஏற்றமளித்துள்ளனர்.

செந்தமிழ்மொழியின்சிறப்பினைஎடுத்துக்காட்டகுமரகுருபரசுவாமிகள் கையாண்டதொடர்கள்பலவாம்.

இவ்வளவிற்குவேறுவண்டமிழ்ப்புலவர்கள்செந்தமிழ்த்தேன்துளிகளைத்தங்கள் செய்யுட்களில்சிந்தியுள்ளார்களாஎன்பதுஐயப்பாட்டிற்குரியதாகும்.இனி.

குமரகுருபரசுவாமிகள்தம்பாடல்களில்பரவிக்கிடக்கும்பைந்தமிழ்த்தேன்துளிகளைநாமும்தும்பிகளாய்மாறிச்சுவைப்போம்.


அருந்தமிழ் 344

இசைமுத்தமிழ் 163

கலைத்தமிழ்த்தீம்பாலமுதம் 706

கொத்துமுத்தமிழ் 350

கொழித்தெடுத்துத்தெள்ளித்தெளிக்குந்தமிழ் 10

கொழிதமிழ் 196, 349, 385

கொழுத்ததமிழ் 620

சங்கத்தமிழ் 157, 174, 375, 377

செழுந்தமிழ்ச்செல்வம் 703

செழுந்தமிழ்த்தெள்ளமுது 702

சொற்சுவைபழுத்ததொகைத்தமிழ் 584

தண்டமிழ் 196, 634

தருசுவையமுதெழமதுரமதொழுகுபசுந்தமிழ் 115

தலைச்சங்கம்பொங்கும்பண்முத்தமிழ் 149

தீஞ்சுவைக்கனியுந்தண்டேனறையும்வடித்தெடுத்தசாரங்களிந்தூற்றிருந்தபசுந்த
மிழ் 393

துறைத்தமிழ் 88

தெள்ளுதமிழ் 448

தெளிதமிழ் 22, 196

தென்னந்தமிழ் 24

தேக்கமழ்மதுரமொழுகியதமிழ் 4

பண்ணுலாம்வடிதமிழ் 15

புத்தமுதம்வழிந்தொழுகும்தீந்தமிழ் 105

பைந்தமிழ் 158, 472

மதிரித்துவட்டெழுமுத்தமிழ் 5

முத்தமிழ் 176, 378, 435

முதுசெற்புலவர்தெளித்தபசுந்தமிழ் 32

முதுதமிழுததி 53

மும்மைத்தமிழ் 69, 127, 140, 390, 394

வண்டமிழ் 212

வண்டமிழ்க்கடல் 191

விரைத்தேன்பில்குந்தேத்தமிழ் 699

**முத்தமிழ்ப்பாகுபாடு**

நற்றமிழ்மொழியினைஇயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்எனமுக்கூறுகளாகப்பாகுபாடுசெய்துமுன்னோர்கள்முழுவளர்ச்சி பெறச்செய்ததும்தமிழ்மொழிக்கேஉரியதனிச்சிறப்பாகும். இப்பாகுபாடுஇன்றுநேற்றுவந்ததன்று. ஒல்காப்பெரும்புகழ்தொல்காப்பியருக்குமுன்பிருந்தேஇத்தொன்மைமொழியில் தொடர்ந்துவருகின்றது. தொல்காப்பியத்துள்உரை, இசை, நாடகம்என்னும்சொற்களைப்பலவிடங்களில்பயன்படுத்தியுள்ளார். ஆனால்முத்தமிழ்எனக்கூறிப்போந்தாரில்லை.

**பாட்டுரைநூலேவாய்மொழிபிசியே**

**(பொருள் 391)**

**பாட்டிடைவைத்தகுறிப்பினானும்**

**பாவின்றெழுந்தகிளவியானும்**

**பொருளொடுபுணராம்பொய்ம்மொழியானும்**

**பொருளொடுபுணர்ந்தநகைமொழியானுமென்**

**றுரைவகைநடையேநான்கெனமொழிப**

**(பொருள். 458)**

**இசைதிரிந்திசைப்பினும்இயைபுமன்பொருளேஅசைந்திரிந்தியலாஎன்ம**

**னார்புலவர்**

**(பொருள் 195)**

**இசைத்தலுமுரியவேறிடத்தான**

**(சொல் 59)**

**நாடகவழக்கினும்உலகியல்வழக்கினும்**

**பாடல்சான்றபுலனெறிவழக்கம்**

**(பொருள் 53)**

இங்ஙனம்தொல்காப்பியத்திலேபலஇடங்களில்வந்துள்ளமையான்முத்தமிழ்எனும்அமைப்புஇருந்திருப்பதுதெரியவருகின்றது.

முத்தமிழ்ப்பாகுபாட்டை,

**இயற்றமிழ்இசைத்தமிழ்நாடகத்தமிழென**

**வகைப்படசாற்றினர்மதியுணர்ந்தோரே**

எனப்பிங்கலநிகண்டும்.

**ஏழுலகும்புகழ்முத்துமுத்தமிழ்**

எனக்கம்பரும்,

**சங்கத்தமிழ்மூன்றும்தா**

எனஔளவையாரும்.

**திட்பமுனுமுத்தமிழுஞ்செவ்விபெறவுளத்திற்**

**பெட்பினொடுகற்றறிந்தபேரிளம்பெண்**

**(தஞ்சைப்பெருவுடையாருலா 281)**

**மன்னூரமுத்தமிழ்க்கோடிச்சுரநம்பர்மால்வரைமேல்**

**(கோடீச்சுரக்கோலை 241, 2)**

**நின்னாட்டியலிசைநாடகமாடுதிநீயெனக்கு**

**(கோடிச்சுரக்கோவை 175, 24)**

எனக்கொட்டையூர்சிவக்கொழுத்துதேசிகர்கூற்றாலும்முத்தமிழ்ப்பாகுபாடுஇருந்துவருவதுதெரியவருகின்றது.

**புலவர்களின்புகழாரம்**

தமிழின்சிறப்பை,

இனிமையைஇலக்கியங்களில்புலவர்பெருமக்கள்புகழ்ந்துள்ளனர்.

**இருந்தமிழேஉன்னாலிருந்தேன்இமையோர்விருந்தமிழ்தம்என்றாலும்வேண்டேன்**

**தித்திக்கும்தெள்ளமுதாய்த்தெள்ளமுதின்மேலானமுத்திக்கனியேயென்முத்தமிழே-**

**புத்திக்குள்உண்ணப்படுந்தேனேயுன்னோடுவந்துரைக்கும்விண்ணப்பமு**

**ண்டுவிளம்பக்கேள்.**

எனத்தமிழ்விடுதூதும்,

**கண்ணுதற்பெருங்கடவுளும்கழகமொடுஅமர்ந்துபண்ணுறத்தெரிந்துஆய்ந்தஇப்**

**பசுந்தமிழ்**

எனத்திருவிளையாடற்புராணமும்,

**சீர்கொண்டதமிழினாலேதிகழ்குறவஞ்சிகூறநன்னயத்தமிழினாலேநவில்**

**குறவஞ்சிகூற**

**(ஸ்ரீசரபேந்திரபூபாலகுறவஞ்சிநாடகம் -காப்பு)**

எனக்கொட்டையூர்ஸ்ரீசிவக்கொழுந்துதேசிகரும்,

**செந்தமிழ்நாடெனும்போதினிலே - இன்பத்**

**தேன்வந்துபாயுதுகாதினிலே**

**வள்ளுவன்தன்னைஉலகினுக்கே - தந்து**

**வான்புகழ்கொண்டதமிழ்நாடு -**

**நெஞ்சைஅள்ளும்சிலப்பதிகாரமென்றோர் - மணி**

**யாரம்படைத்ததமிழ்நாடு**

**கல்விசிறந்ததமிழ்நாடு - புகழ்க்**

**கம்பன்பிறந்ததமிழ்நாடு - நல்ல**

**பலவிதமாயினசாத்திரங்கள்–மணம்**

**பாரெங்கும்வீசும்தமிழ்நாடு.**

எனமுண்டாசுப்புலவன்பாரதியாரும்,

**தேனினும்இனியநற்செந்தமிழ்மொழியே!**

**தென்னாடுவிளங்குறத்திகழுந்தென்மொழியே!**

**ஊனினும்ஒளிர்வுறும்ஒண்டமிழ்மொழியே!**

**உணர்வினுக்குணர்வதாய்ஒளிர்தமிழ்மொழியே!**

**வானினும்ஓங்கியவண்டமிழ்மொழியே!**

**மாந்தருக்கிருகணாய்வயங்குநன்மொழியே!**

**தானியல்சிறப்புறுந்தனித்தமிழ்மொழியே!**

**தழைத்தினிதேங்குவாய்தண்டமிழ்மொழியே!**

எனப்பேராசிரியர்கா. நமச்சிவாயமுதலியாரும்,

**கனியிடைஏறியசுளையும் - முற்றல்**

**கழையிடைஏறியசாறும்**

**பனிமலர்ஏறியதேனும் - காய்ச்சிப்**

**பாகிடைஏறியசுவையும்**

**நனிபசுபொழியும்பாலும் - தென்னை**

**நல்கியகுளிரிளநீரும்**

**இனியனஎன்பேன்எனினும் - தமிழை**

**என்னுயிர்என்பேன்கண்டீர்.**

**உயிரைஉணர்வைவளர்ப்பதுதமிழே!**

**தமிழுக்கும்அமுதென்றுபேர்! - அந்தத்**

**தமிழ்இன்பத்தமிழ்எங்கள்உயிருக்குநேர்**

**ஊரில்தமிழன்மார்பைத்தட்டிப்**

**பாரில்தமிழன்நானேஎன்னும்**

**சீரைத்தந்ததமிழேவாழ்க!**

**ஓராஉலகின்ஒளியேவாழ்க!**

எனப்பாவேந்தர்பாரதிதாசனும்,

**தொன்மொழிதமிழைநன்கு**

**தொட்டகைமணக்கும்தம்பி!**

**சொன்னாலும்நாமணக்கும்!**

**சொல்பவர்வாயினிக்கும்!**

**மன்னர்தம்மடிவளர்ந்த**

**மாத்தமிழ்ப்பாலே! பாகே !**

**கன்னலே! கனியின்சாறே!**

**கற்கண்டே! அமுதே! தேனே!**

**(தமிழுணர்வு, பக். 32)**

**குயிலிசைக்கேளாவிட்டால்**

**குழிசெவியழிவதில்லை!**

**மயில்நடம்காணாவிட்டால்**

**மலர்விழிதுடிப்பதில்லை!**

**துயிலின்றித்துவண்டபோதும்**

**தளிருடல்தளர்வதில்லை!**

**உயிர்தமிழ்நினைவேஇன்றேல்**

**உலகிலேவாழ்வேஇல்லை!**

**(பக்கம் 36)**

**மிடுக்கானதமிழே! நெஞ்சில்**

**மிதக்கின்றாய்நாளும்வாழ்வேன்!**

**(தமிழுணர்வு: பக்கம் 37)**

**கம்பரொடுவள்ளுவரும்காப்பியரும்நல்லிளங்கோநம்தேவர்**

**உள்ளிட்டநற்புலவோர் - அம்புவியில்**

**நற்றமிழின்நற்கடலைநன்றாய்க்கடைந்ததனால்சொற்பஞ்சம்உண்டோதமிழ்க்கு.**

**(தமிழுணர்வு, பக். 40)**

எனக்கவிஞர்மு.

கோவிந்தராசனும்ஏற்றிப்போற்றிப்புகழ்ந்துள்ளதினின்றும்செந்தமிழின்சிறப்பினை - மாண்பினைநன்கறியலாம்.

## சொற்சிறப்பு

பிறமொழிகளைவிட -

உலகத்துமொழிகளைவிடதமிழ்மொழியில்சொல்வளம்உயர்ந்துகாணப்பெறுகின்றது. சொற்சிறப்புதமிழுக்கேஉரியதனிச்சிறப்பாகும்.

பிறமொழிச்சொற்களோஉருவத்தைமட்டுமேகாட்டக்கூடியன. தமிழ்மொழிச்சொற்களோஉருவம்பருவம்இரண்டையும்ஒருசேரக்காட்டும்தன்மையன. எடுத்துக்காட்டாகப்**பெண்ணை**எடுத்துக்கொள்வோம். ஆங்கிலத்தில்**Woman**என்பர். வடமொழியில்**ஸ்திரீ;**இந்தியில்**லட்கி**என்பர். இவைஉருவத்தைமட்டுமேஅம்மொழிகளில்காட்டிநிற்கின்றன. அங்கெல்லாம்பருவத்தைக்காணமுடிவதில்லை.

அங்ஙனம்காட்டவேண்டுமாயின்**யங்** (Young) **ஒல்டு** (Old)

என்பதைஉடன்சேர்க்கவேண்டும்.

பற்பலநிலைகளைக்காட்டஅம்மொழிகளில்சொல்வளம்இல்லை.

ஆனால்அருமைத்தமிழ்மொழியின்சொற்சிறப்போஉருவம்,

பருவம்இரண்டினையும்காட்டும்சிறப்புடையன.

| **சொல்வளம்** | **உருவம்** | **பருவம்** |
|---|---|---|
| பேதை | பெண் | 5 வயதிற்கும்கீழ் |
| பெதும்பை | பெண் | 10 வயதிற்கும்கீழ் |
| மங்கை | பெண் | 16 வயதிற்கும்கீழ் |
| மடந்தை | பெண் | 25 வயதிற்கும்கீழ் |
| அரிவை | பெண் | 30 வயதிற்கும்கீழ் |
| தெரிவை | பெண் | 35 வயதிற்கும்கீழ் |
| பேரிளம்பெண் | பெண் | 45 வயதிற்கும்கீழ் |
| மூதாட்டி | பெண் | 60 வயதிற்கும்கீழ் |
| கிழவி | பெண் | 60 வயதிற்கும்மேல் |

**ஆடவரைக்**குறிக்கஆங்கிலத்தில்**Male, Lad**எனவும்,

வடமொழியில்**புருஷன்**எனவும்,

இந்தியில்**லட்கா**எனவும்சொற்களைப்பயன்படுத்துகின்றோம்.

அழகுதமிழ்மொழியில்,

| | | |
|---|---|---|
| **பிள்ளை** | **ஆண்** | **குழந்தைப்பருவம்** |
| சிறுவன் | ஆண் | விளையாட்டுப்பருவம் |
| பையன் | ஆண் | பள்ளிப்பருவம் |
| காளை | ஆண் | காதற்பருவம் |
| தலைவன் | ஆண் | குடும்பப்பருவம் |
| முதியோன் | ஆண் | தளர்ச்சிப்பருவம் |
| கிழவன் | ஆண் | இறுதிப்பருவம் |

எனஅருமைப்பாகுபாடுகள்உள்ளன.

**பூக்களைக்**குறிக்கஆங்கிலத்தில்**Flower** எனவும்,

வடமொழியில்**புஷ்பம்**எனவும், இந்தியில்**பூல்**எனவும்கூறுகின்றோம்.

பூவினும்மென்மைபால்வாய்ப்பசுந்தமிழ்மொழியிலோ,

| | | |
|---|---|---|
| அரும்பு | பூ | அரும்புப்பருவம் |
| மொட்டு | பூ | மொக்குதோன்றும்பருவம் |
| முகை | பூ | முகிழ்க்கும்பருவம் |

| | | |
|---|---|---|
| மலர் | பூ | மலரும்பருவம் |
| அலர் | பூ | மலர்ந்தபருவம் |
| வீ | பூ | வாடும்பருவம் |
| செம்மல் | பூ | வதங்கும்பருவம் |

எனப்பலசொற்கள்உள்ளன.

தமிழைப்போல்பிறமொழிகளில்இவ்வாறில்லை.

அம்மொழிகளின்சொற்பஞ்சத்தையேஇவைகாட்டுகின்றன.

மேலும்தமிழில்ஓர்எழுத்தில்பொருள்உணர்த்தும்சொற்களுக்கும்பஞ்சமேஇல்லை

.

| | | |
|---|---|---|
| ஆ | - | பசு |
| ஈ | - | ஈதல் |
| ஊ | - | இறைச்சி |
| ஏ | - | அம்பு |
| ஐ | - | அழகு |
| ஓ | - | மதகுநீர்தாங்கும்பலகை |
| கா | - | சோலை |
| கூ | - | நீலம், ஓர்எழுத்து |

| | | |
|---|---|---|
| கை | - | மாந்தனின்உறுப்புக்களுள்ஒன்று |
| கோ | - | அரசன் |
| சா | - | சாதல் |
| சீ | - | இகழ்ச்சிக்குறிப்பு |
| சே | - | எருது |
| சோ | - | மதில் |
| தா | - | கொடு |
| தீ | - | நெருப்பு |
| து | - | உண் |
| தூ | - | தூய்மை, வலிமை, தசை |
| தே | - | இனிமை, சுவை |
| தை | - | ஒருமாதம் |
| நா | - | நாக்கு |
| நீ | - | ஒருவரைச்சுட்டுவது |
| நே | - | அன்பு |

| | | |
|---|---|---|
| நை | - | இகழ்ச்சிக்குறிப்பு |
| நோ | - | நோவு |
| பா | - | செய்யுள் |
| பூ | - | மலர் |
| பே | - | நுரை, அச்சம் |
| பை | - | பொருள்வைக்கும்உறை |
| போ | - | செல்லுதல் |
| மா | - | பெரிய |
| மீ | - | உயர்ச்சி |
| மூ | - | முதுமை |
| மே | - | மேல் |
| மை | - | கருமை, முகில் |
| மோ | - | முகர்தல் |
| வா | - | வருதல் |
| வீ | - | மலர் |

வை - வைத்தல்

வெள - கவர்தல்

யா - கட்டுதல், ஒருவகைமரம், அகலம்

**அரியசொற்கள்**

தமிழ்மொழிமேலும்பலஅரியசொற்களையும்தன்னகத்தேபெற்றுவிளங்குகின்றது.

அங்காடி (Market)

வலவன் (Pilot)

வானவூர்தி(Aeroplan)

உழைச்செல்வார்(Nurse)

காலதர் (Window)

கோட்டம் (Temple)

புறனடை(Exception)

மேலும்சங்ககாலநூல்களில்கணக்கிலடங்காப்பைந்தமிழ்ச்சொற்கள்காணக்கிடக்கின்றன. தமிழ்மொழியிலேவேறுஎம்மொழிகளைக்காட்டிலும்தன்வினை - பிறவினைச்சொற்கள்நிறைந்துள்ளன. வேர்ச்சொற்களும் (Root) ஏராளம்.

வேர்ச்சொற்கள்நிறையப்பெற்றிருக்கும்ஒருமொழியில்புத்தம்புதியசொற்களைப் புனைந்துகொள்வதில்எத்தகையதொல்லைகளும்இருந்திடஇயலாது.

இத்தகையவளமிக்க, தமிழ்மொழியின்சீரும்சிறப்பையும், பெயரையும்புகழையும்உணர்ந்தமேனாட்டார்பல்லாயிரக்கணக்கானகிலோமீட் டர்கள்கடல்கடந்துவந்து, தமிழகத்தில்உறைந்து, தமிழைக்கற்று, நூல்களும்இயற்றித்தமிழ்மாணாக்கராகவேமறைந்தவரலாறும்உண்டு.

அறிஞர்கால்டுவெல், ஜி.யு. போப், டாக்டர்வின்ஸ்லோ, பெர்ஸிவல்ஐயர், வீரமாமுனிவர், கமில்சுவலபில், எமனோ, பர்ரோபோன்றோரின்இதயங்களில்குடிகொண்டதமிழுககுஎன்றுமேஏற்றமும்நல் லதொருசிறப்பும்உண்டுஎன்பதில்எள்ளளவும்' ஐயமின்று.

தமிழர்கள்தம்உயிரினும்மேலாகப்போற்றிவளர்த்தமங்காப்புகழ்படைத்தமு த்தமிழ்த்தாயினைச்சங்கங்கள்நிறுவிஅதன்வழிதமிழ்ஆய்ந்துதொன்மைமொழியி ன்மாண்பினைமன்பதைஅறியச்செய்தனர்.

அவனிபுகழ்அன்னைத்தமிழ்அந்நாளில்சங்கத்தில்வளர்ந்தசரிதையினைஇனிதுற நாம்காண்போம்.

**தமிழின்செம்மொழிதகுதிசிறப்புகள்**

செம்மொழி (Classical language) என்பதுஒருமொழியின்இலக்கியப்பழமைஅடிப்படையிலும்பிறபண்புத்தகுதிகளின்அடிப்படையிலும்செய்யப்படும்வகைப்பாடுஆகும். செம்மொழியாகஒருமொழியைத்தெரிவுசெய்யஅதன்இலக்கியப்படைப்புகள்வளம்மிகுந்ததாகவும்பழமையானதாகவும், அதன்தோன்றல்ஏனையமொழிகளில்சாராதிருத்தலும்வேண்டும்.

ஒருமொழிக்குசெம்மொழிஎன்றதகுதிஅம்மொழியில்இடம்பெற்றிருக்கும்இலக்கியத்தரத்தின்அடிப்படையில்தான்முடிவுசெய்யப்படுகிறது. இருப்பினும்செம்மொழிஎன்பதற்குஅம்மொழியில்இடம்பெற்றிருக்கும்முக்கியமானஇரண்டுசிறப்புகள்தேவையாய்இருக்கிறது.

1. இலக்கியப்படைப்புகள்
2. கலைப்படைப்புகள்

இந்தஇருபடைப்புகளைக்கொண்டேஅந்தமொழிசெம்மொழிகளாக அறிவிக்கப்படுகின்றன.

**இலக்கியப்படைப்புகள்**

ஒருமொழியின்சிறப்பிற்கும்செம்மைக்கும்முதல்அடையாளமாகத்திகழ்வதுஅம்மொழியின்பழமைவாய்ந்தஇலக்கியங்கள்தான்.

இந்தஇலக்கியங்களில்இருக்கும்பழமையுடன்அதில்கருத்துச்செறிவுகளும் இருக்கவேண்டும்.

ஒருமொழியின்சிறப்புஅந்தமொழியில்படைக்கப்பட்டஇலக்கியப்படைப்புகள்வழியாகத்தான்அறியமுடிகிறது.

**கலைப்படைப்புகள்**

ஒருமொழியின்பழமைக்குஇலக்கியம்சான்றாகஇருந்ததுஎன்பதுடன் அந்தமொழிசார்ந்தபகுதிகளில்உருவாக்கப்பட்டகலைப்படைப்புகள்அந்த மொழியின்பழமையைஉணர்த்தும்அடுத்தசான்றாகஇருக்கவேண்டும்.

கலைப்படைப்புகள்என்பதுகட்டிடக்கலை,

சிற்பக்கலைபோன்றபழமைவாய்ந்தகலைச்சான்றுகளாகஇருக்கவேண்டும்

**உலகச்செம்மொழிகள்**

இன்றுஉலகில்செம்மொழிகளாகக்கருதப்படும்மொழிகள் 8 ஆகஇருக்கின்றன.

கிரேக்கமொழி,சமஸ்கிருதம்,இலத்தீன்,பாரசீகமொழி,அரபுமொழி,எபிரேயம்,தமிழ்,சீனமொழி.

**தமிழின்செம்மொழித்தகுதிகள்**

செம்மொழிஎன்றநிலையில்ஒருமொழிஏற்கப்படவேண்டுமானால்அதற்கென்றுசிலதகுதிப்பாடுகள்தேவைப்படுகின்றன.

செம்மொழிஎன்றுஒருமொழிஅழைக்கப்படவேண்டுமானால்அம்மொழி தொன்மைச்சிறப்புவாய்ந்ததாகஅதற்கெனஒருதனித்தபண்பாடுஉடையதாக, அந்தப்பண்பாடுஎதனோடும்தொடர்பற்றதாக, வளமையானஇலக்கியச்செழுமைவாய்ந்ததாகஇருக்கவேண்டும்என்றுகருதுகிறார்ஜார்ஜ்ஹர்ட்.

இவ்வளவில்சிறப்புபெற்றஉலகச்செம்மொழிகளாககிரேக்கம், இலத்தீன், அரபி, சமஸ்கிருதம், சீனம்போன்றபலமொழிகள்திகழ்ந்துவருகின்றன. இவற்றோடுதற்போதுதமிழும்செம்மொழியாகஏற்கப்பெற்றுள்ளது.

தமிழ்தொன்மையானதாக, தனித்தபண்பாடுஉடையதாக, இலக்கியவளம்மிக்கதாகஇருப்பதோடுவாழும்மொழியாகவும்அதுதிகழ்ந்து

வருகின்றது.

பெரும்பாலானசெம்மொழிகள்வழக்கில்இருந்துநீங்கிவிட்டன.

மக்களிடம்அவைபேச்சுமொழியாகக்கூடஇல்லை. குறிப்பாகசமஸ்கிருதம், பாலி, எகிப்துபோன்றனஇவ்வகைப்பட்டனவேஆகும்.

ஆனால்தமிழின்தொன்மைச்சிறப்பு,மரபுபண்பாடுபோன்றனமாறாமல், சிதறாமல்இன்னமும்காக்கப்பெற்றுவருகின்றன. இதற்குமிகமுக்கியகாரணம்தமிழ்என்றமொழியின்கட்டமைப்புமட்டுமேஆகும். தமிழ்என்பதைமன்னர்கள், புலவர்கள், மக்கள்வளர்த்தாலும்அவர்கள்மறைந்தபோதும்மறையாமல்தமிழ்காப்பற்றப்பட்டுக்கொண்டேவந்துள்ளதுஎன்பதுசிறப்பிற்குஉரியதாகும்.

பொதுவாக, செம்மொழிக்குஉரியதகுதிகளாகப்பதினோருகூறுகளைஎடுத்துரைக்கலாம்.1. தொன்மை 2. தனித்தன்மை 3. பொதுமைப்பண்பு 4. நடுவுநிலைமை 5. தாய்மைப்பண்பு 6. பண்பாட்டுக்கலைஅறிவுபட்டறிவுவெளிப்பாடு 7. பிறமொழித்தாக்கமில்லாதன்மை 8. இலக்கியவளம் 9. உயர்சிந்தனை 10.

கலைஇலக்கியத்தனித்தன்மை 11. மொழிக்கோட்பாடு. இப்பதினொன்றும்தமிழுக்குஉண்டு.

இரண்டாயிரம்ஆண்டுகள்பழமைவாய்ந்ததுஎன்றுதிருக்குறளுக்குக் காலம்வகுக்கப்பெற்றுள்ளது. இதன்காரணமாகதொன்மைச்சிறப்புவாய்ந்ததுதமிழ்என்பதுதெளிவு.செம் மொழித்தன்மைகள்பதினொன்றுக்கும்உரியதாகத்தமிழின்சங்கஇலக்கியங் கள்விளங்குகின்றன. இதன்காரணமாகதமிழின்செம்மொழித்தன்மைஉடையஇலக்கியங்களாகச் சங்கஇலக்கியங்கள்அமைந்துள்ளனஎன்பதுஉறுதியாகின்றனது.

தமிழின்செம்மொழித்தன்மையைஅறிந்துஉணர்த்தியதமிழறிஞர்களு ள்குறிக்கத்தக்கவர்கள்பரிதிமார்கலைஞர்,பாவாணர்,கால்டுவெல்போன்ற பலர்ஆவர். இவர்களின்செம்மொழிப்பற்றியகருத்துக்கள்பலதிறத்தன. இவர்கள்தரும்அனைத்துவரையறைகளும்தமிழுக்குஉள்ளனஎன்பதுமறுக்க முடியாதஉண்மை.

பாவாணர்பதினாறுதன்மைகளால்தமிழ்செம்மொழித்தன்மைபெற்று ள்ளதுஎன்றுகருதுகின்றார்.

1.தொன்மை 2.முன்மை 3.எண்மை (எளிமை)4.ஒண்மை (ஒளிமை)5.இளமை

6.வளமை7.தாய்மை8.தூய்மை9.செம்மை10.மும்மை11.இனிமை12.தனிமை13.பெருமை14.திருமை15.இயன்மை16.வியன்மைஎன்றபதினாறுதன்மையும்தமிழுக்குஇருப்பதாகப்பாவாணர்கருதுகின்றார்.இதன்காரணமாகவும்தமிழ்செம்மொழித்தகுதியைப்பெற்றிருக்கிறதுஎன்பதுஅறியத்தக்கதாகும்.

கால்டுவெல்தமிழின்தனித்தியங்கும்தன்மைபற்றிப்பேசுகின்றார். "திராவிடம்சமஸ்கிருதத்தில்இருந்துப்பிறந்ததுஎன்றகருத்துமுந்தியதலைமுறையினராயமொழிநூல்வல்லுநர்க்குஏற்புடைத்தாய்விளங்கினும்இக்காலைஅறவேஅடிப்படையற்றுப்போனகட்டுக்கதையாகிவிட்டது”என்பதுஇவரின்கருத்தாகும்.

இவ்வகையில்பலஅறிஞர்கள்தமிழின்செம்மொழித்தன்மையைத்தகுதியைஉலகம்உணரும்அளவிற்குஎடுத்துரைத்துள்ளனர்.

தொடர்ந்தஇந்தச்செயல்பாட்டின்வழியாகத்தமிழ்தற்போதுசெம்மொழித்த குதியைப்பெற்றுவிளங்குகிறது.

தமிழின்செம்மொழித்தன்மையைத்தற்போதுஉலகிற்குஉணர்த்தியவ ர்உணர்த்திவருபவர்கலிபோர்னியாவில்வாழும்பேராசிரியர்முனைவர்ஜார் ஜ்ஹார்ட்ஆவார்.

தமிழ்செம்மொழித்தகுதியைப்பெற்றிருப்பதற்கானகாரணங்களாகநான்கி னைஅவர்முன்னிறுத்துகிறார்.

தமிழ்மொழிபழமைச்சிறப்புவாய்ந்தது.

தமிழ்தனக்கானதனித்தஇலக்கியமரபினைஉடையது.

தமிழ்மொழியின்செவ்விலக்கியங்களானசங்கஇலக்கியங்கள்மற்றசெம் மொழிகளின்இலக்கியங்களுடன்ஒப்புநோக்கத்தக்கவை.

இந்தியப்பண்பாடுமரபுகளின்தனித்துவம்உடையதாகதமிழ்ச்செவ்விலக்கி யங்கள்விளங்குகின்றன.இந்தநான்குகருத்துக்களைஅவர்எடுத்துக்கூறிய தோடுமட்டுமில்லாமல்அதற்கானசான்றுகளையும்எடுத்துக்கூறிதமிழின்செ ம்மொழித்தன்மையைஉலகிற்குஎடுத்துக்காட்டினார்.

**செவ்வியல்நூல்கள்**

செவ்வியல்நூல்கள்எனவரையறுக்கப்பட்டவைஅனைத்தும்கி.பி. 6 ஆம்நூற்றாண்டிற்குமுந்தியவை. தனித்தன்மைகொண்டவை. 41 செவ்வியல்நூல்கள்கீழேகுறிப்பிடப்பட்டுள்ளன.

1. தொல்காப்பியம்

**எட்டுத்தொகை**

2. நற்றிணை
3. குறுந்தொகை
4. ஐங்குறுநூறு
5. பதிற்றுப்பத்து
6. பரிபாடல்
7. கலித்தொகை
8. அகநானூறு
9. புறநானூறு

**பத்துப்பாட்டு**

10. திருமுருகாற்றுப்படை
11. பொருநராற்றுப்படை
12. சிறுபாணாற்றுப்படை

13. பெரும்பாணாற்றுப்படை

14. முல்லைப்பாட்டு

15. மதுரைக்காஞ்சி

16. நெடுநல்வாடை

17. குறிஞ்சிப்பாட்டு

18. பட்டினப்பாலை

19. மலைபடுகடாம்

**பதினெண்கீழ்க்கணக்கு**

20. நாலடியார்

21. நான்மணிக்கடிகை

22. இன்னாநாற்பது

23. இனியவைநாற்பது

24. கார்நாற்பது

25. களவழிநாற்பது

26. ஐந்திணைஐம்பது

27. ஐந்திணைஎழுபது

28. திணைமொழிஐம்பது

29. திணைமாலைநூற்றைம்பது

30. பழமொழி

31. சிறுபஞ்சமூலம்

32. திருக்குறள்

33. திரிகடுகம்

34. ஆசாரக்கோவை

35. முதுமொழிக்காஞ்சி

36. ஏலாதி

37. கைந்நிலை

38. சிலப்பதிகாரம்

39. மணிமேகலை

40. முத்தொள்ளாயிரம்

41. இறையனார்களவியல்

இந்தியக்குடியரசுதலைவரின்ஆணைப்படிஇந்தச்செம்மொழித்தகுதித்தமிழுக்குக்கிடைத்துள்ளது.

பழமையானஇலக்கியமரபுகளைஇன்னும்தொடர்ந்துஉணர்த்திவரும்உலகமொழிகள்ஒன்றுதமிழ்என்பதால்அதற்குஇந்நேரத்தில்செம்மொழித்தகுதிவ

ழங்கப்படுகிறதுஎன்றுஇந்தியக்குடியரசுதலைவரின்அறிக்கைகுறிப்பிடுகிறது.

## தமிழ்ச்செம்மொழியின்பண்புகள்

**தொன்மை**

தமிழ்இலக்கணநூல்களில்மிகத்தொன்மையாகஅமைந்திருப்பதுதொல்காப்பியமாகும். ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்குமுன்புஇந்நூல்இயற்றப்பட்டது. வேதகாலவேதங்களுக்கும், இலக்கியங்களுக்கும்முற்பட்டது. தமிழ்மொழிக்குஇலக்கணம்வகுத்ததோடுமனிதவாழ்வுக்கும்இலக்கணம்வகுத்த வாழ்வியல்நூல்என்றசிறப்பினையும்இந்நூல்பெறுகிறது.

ஒருமொழியில்இலக்கணநூல்இருக்கிறதெனில்அதுதோன்றுவதற்குஆதாரமானஇலக்கியங்கள்அம்மொழியில்இருந்திருத்தல்வேண்டும். எனவே, தொல்காப்பியத்திற்குப்பலநூறுஆண்டுகளுக்குமுன்பேதமிழில்பலவகையானஇலக்கியப்படைப்புகள்இருந்திருத்தல்வேண்டும். இலக்கியவளம்மிக்கமொழிக்குஇலக்கணம்வகுத்ததொல்காப்பியபழமையிலிருந்துதமிழின்தொன்மையைஉணரலாம்.

**தனித்தன்மை**

சங்ககாலத்தமிழ்ப்புலவர்கள், ஒட்டுமொத்தமனிதவாழ்வைஅகம்-புறம்எனஇரண்டாகப்பிரித்துஇலக்கியம்படைத்தனர். உள்ளம்சார்ந்தவாழ்வைஅகவாழ்க்கைஎன்றும்வீரம்சார்ந்தபோர், கொடைவாழ்க்கையைப்புறவாழ்க்கைஎன்றும்பிரித்தனர்காதல்வாழ்வாகியஅக வாழ்வையும்களவியல்கற்பியல்என்றபாகுபடுத்திக்கண்டதனித்தன்மைதமிழுக்கு உண்டு. தமிழரின்வாழ்வியல்நெறி, இலக்கியத்தில்மட்டுமல்லதுசமுதாயஅமைப்புமுறையிலும்தனித்துவம்உடைய தாகவிளங்குகிறது.

இவ்வுலகமானதுநிலம், நீர், நெருப்பு, காற்று,ஆகாயம்ஐம்பூதங்களால்ஆனதுஎன்பதுஅறிவியல்உலகம்கண்டறிந்தஉ ண்மை. இதேஅறிவியல்உண்மையை 2000 ஆண்டுகளுக்குமுன்பேபுறநானூற்றுப்பாடல்தெரிவித்துள்ளது.

**"மண்திணிந்தநிலனும்**

**நிலம்ஏந்தியவிசும்பும்**

**விசும்புதைவருவளியும்**

**வளித்தலைஇயதீயும்தீ**

**முரணியநீரும், என்றாங்கு**

**ஐம்பெரும்பூதத்துஇயற்கைபோலப்"**

**(புறநானூறு, பா. 6 . 2)**

இவ்வுலகம்ஐம்பூதங்களால்ஆனதுஎன்றுகூறுவதோடுஎதிலிருந்துஎதுஉருவானதுஎன்றநிலையையும்விளக்குகிறது. நிலமும், நிலத்திலிருந்துவானம், வானிலிருந்துகாற்றும். காற்றிலிருந்துதீயும், தீயிலிருந்துநீரும்உருவாயினஎன்றுஉலகபரிணாமஅறிவியலைஉணர்த்துகிறது. இவ்வாறுஅறிவியல்நுட்பச்செய்திகளைப்பன்னெடுங்காலத்துக்குமுன்பேபதிவு செய்திருப்பதுதமிழின் - தமிழ்இனத்தின்தனித்தன்மையாகும்.

**பொதுமைப்பண்பு**

சங்கத்தமிழ்இலக்கியங்களின்சிறப்பியல்புகளிள்ஒன்றுதனிமனிதவாழ்வியல்பிரச்சினைகளைக்கூடச்சமுதாயக்கண்ணோட்டத்தில்அலசிஆராய்வதாகும். அனைத்துத்தரபினரும்தங்களைச்சார்ந்தஇலக்கியப்படைப்பாகஏற்றுக்கொள்வதற்குஏற்பஇலக்கியங்கள்அமைவதன்வழியாகஅனைவரும்ஏற்கும்பொதுமைப்பண்புடையபடைப்புகளாகவிளங்குகின்றன. இதற்குச்சிறந்ததொருசான்றாகத் 'திருக்குறள் ' எனும்அறநூலைக்கூறலாம். திருக்குறளுக்குஉலகப்பொதுமறை'

எனும்பெயரும்உண்டு. நாடு. மொழி, இனம், சமயம்அனைத்தும்கடந்தநிலையில்மானுடஇனத்தின்நலன்களைமட்டும்கருத்தில்கொண்டுவள்ளுவரால்இந்நூல்படைக்கப்பட்டுள்ளது.

**நடுவுநிலைமை**

சங்கஇலக்கியப்படைப்புகள்சமயச்சார்பற்றவைகளாகக்காணப்படுகின்றன. ஆனால், களப்பிரர்காலத்திலும், சங்கம்மருவியகாலத்திலும்அதற்குப்பின்னரும்பல்வேறுசமயங்கள்தமிழகத்தில்புகுந்ததன்காரணமாகப்பலசமயஇலக்கியங்கள்தமிழில்தோன்றின. எனினும்தமிழ்மொழியில்மிகப்பழமையானஇலக்கியங்களாகவிளங்குகின்றசங்கஇலக்கியங்கள்நடுவுநிலைமையோடுமக்களின்சமுதாயவாழ்வைப்பறைசாற்றுவதன்மூலம்தமிழ்மொழியின்நடுவுநிலைமையைஅறியமுடிகின்றது.

**தாய்மைத்தன்மை**

ஒருமொழிசெம்மொழியாகஇருக்கவேண்டுமென்றால்அதுபலமொழிகளில் உருவாக்கத்திற்குத்தாயாகஇருந்திருக்கவேண்டும்என்பதுசெவ்வியல்வரையைறைகளில்ஒருஅடிப்படைத்தகுதியாகும். தமிழில்இருந்துபல்வேறுமொழிகள்தோன்றியுள்ளன. தோடா, கோத்தா, பணியா, பெட்டக்குறும்ப,

இருளமொழிகள்யாவும்மலைவாழ்மக்களால்பேசப்படுபவை. இவை, தமிழில்இருந்துதான்தோன்றினஎன்றாலும்தனிமொழிகள்போல்கருதப்படுகின்றன. மூலத்திராவிடதமிழில்இருந்துதெலுங்கு, கன்னடம், மலையாளம்ஆகியதென்திராவிடமொழிகள்தோன்றியுள்ளன.

**பண்பாடு, கலை, பட்டறிவுவெளிப்பாடு**

சிறந்தமொழிஇலக்கியம்என்பதுகாலக்கண்ணாடியாகவிளங்கவேண்டும். அதாவதுஎழுதப்பட்டகாலம்எதுவோஅக்காலத்தின்போக்கைமுழுமையாகஉணர்த்துவதாகஅமையவேண்டும். சங்கஇலக்கியங்கள்வாயிலாகஅன்றையசமுதாயநிலைஎவ்வகைப்போக்குடையதாகஅமைந்திருந்தது, மக்கள்மனம்எந்நிலையில்இருந்தது, கலையுணர்வுஎவ்வகையில்சிறப்புற்றுஅமைந்தது. பண்பாட்டுஉணர்வுகள்எத்தகையநிலையில்இருந்தனஎன்பதைஉணரமுடிகிறது. எனவே, தமிழ்மொழிபண்பாடுகலைபட்டறிவுவெளிப்பாட்டிற்குச்சிறந்ததாகவிளங்குவது புலனாகின்றது.

**பிறமொழித்தாக்கமிலாத்தனித்தன்மை**

ஒருசமுதாயஅமைப்பில்ஒருமொழிபேசும்மக்களால்பிறமொழிபேசும்மக்களோடுகலந்துஉறவாடுவதுதவிர்க்கஇயலாது.

அக்காலகட்டங்களில்மொழிக்கடன்என்பதுஇயல்பாகஅமைந்துவிடுகிறது.

தமிழானதுமொழியைக்கடனாகவழங்குமேயன்றிகடன்வாங்குவதுஇல்லை.

தற்காலத்தில்தமிழில்பிறமொழிக்கலப்புகாணப்படுகிறது.

எனினும்தமிழால்தனித்துஇயங்கஇயலும்.

இதற்குக்காரணம்தமிழில்இடம்பெற்றுள்ளசொற்பெருக்கமேயாகும்.

வேறுஎந்தமொழியிலும்காணமுடியாதஅளவுக்குவேர்ச்சொற்களஞ்சியமாகத்தமிழ்மொழிஅமைந்திருக்கின்றது.

**இலக்கியவளம்**

உலகத்துமொழிகளில்எந்தமொழியில்மிகஅதிகஎண்ணிக்கையில்இலக்கியப்படைப்புகள்உருவாக்கப்பட்டுஉள்ளதோ, அந்தமொழி, செம்மொழியாகக்கருதப்படுவதற்கு, அதுவொருஅடிப்படைத்தகுதியாகக்கருதப்படும்.

சங்ககாலஇலக்கியப்படைப்புகளின்செழுமையைப்பிறமொழிஇலக்கியங்களோடுஒப்பீட்டுஅடிப்படையில்ஆய்ந்தவர்கமில்சுவலபில்ஆவார்.

அவர்சங்கஇலக்கியங்கள் 26,350

வரிகளில்அமைந்திருப்பதாகக்கணக்கிட்டுள்ளார்.

பொதுவாகஇலக்கியப்படைப்புகள்அரசர்முதலானமேன்மக்களைப்பற்றிப்பேசும் போதுசங்கஇலக்கியங்கள்சாதாரணகுடிமக்களின்சமுதாயவாழ்க்கைப்பற்றிஎடுத் துரைத்துள்ளன.

தொடர்ந்துஇலக்கியப்படைப்புக்களைஉருவாக்கிவரும்இயங்கியல்மொழியாகத் தமிழ்மொழிதிகழ்கின்றது.

**உயர்சிந்தனை**

உயர்சிந்தனைஎன்பதுதனிமனிதனைமட்டுமின்றிஒட்டுமொத்தமனிதசமு தாயத்தையேவழிநடத்துவதாகஇருத்தல்வேண்டும்.தமிழர்தம்வாழ்வில்வழிகாட் டும்ஒளிவிளக்குகளாகச்சங்கஇலக்கியங்கள்அமைந்துள்ளன. 'யாதும்ஊரே' யாவரும்கேளிர்!"ஒன்றேகுலம்ஒருவனேதேவன்' என்பனபோன்றவாழ்வியல்நெறிகள்தமிழ்இலக்கியங்களில்காணலாகின்றன. 'ஒருபானைசோற்றுக்குஒருசோறுபதம்'என்பதுபோலஇவைசிலசான்றுகளாகஅ மைகின்றன.

## தமிழ்செம்மொழிஇலக்கியத்தின்பாடுபொருள்சிறப்புகள்

இலக்கியப்பாடுபொருள்விழுமியங்களைஅவ்இலக்கியங்கள்படைக்கப்பட்டஇலக்கியக்கொள்கைகள்அடிப்படையில்அறிவதுஎளிது.சங்கஇலக்கியங்களை அகம், புறம்என்னும்அவைகளைப்பலதுறைகளாகவும்பிரித்துப்பாடுவதுஎன்னும்கோட்பாடு, உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சிஅமையப்பாடுவதிலும்சங்கப்புலவர்களுக்குத்தெளிவானகொள்கைஇருந்தது. இவற்றைஇலக்கியக்கொள்கைகள்எனலாம். தொல்காப்பியர்காலத்தில்கிரேக்கநாட்டில்வாழ்ந்தஅரிஸ்டாட்டில்கூறும்இலக்கியக்கொள்கைகளைக்காண்போம்.

பிளாட்டோவின்சீடரானஅரிஸ்டாட்டில் (Aristotle, 384-322 BC)கிரேக்கநாட்டுப்பேரறிஞர்களில்ஒருவராகவும், மிகப்பெரியஎழுத்தாளராகவும்முதல்திறனாய்வாளராகவும்கருதப்படுகிறார். அரிஸ்டாட்டில்ஆராய்ந்துஎழுதாததுறையேஇல்லைஎன்னும்அளவுக்குஅரசியல், வரலாறு,தர்க்கம் (Logic) கல்வி, நீதி, பௌதீகம்,கவிதையியல்என்றுபலதலைப்புக்களில்எழுதியுள்ளார். ஆசிரியராகவும்ஆராய்ச்சிஅறிஞராகவும்இருந்தவர்அரிஸ்டாட்டில்.அவரின்கவி

தையியல் (Poetics)

இலக்கியக்கொள்கைகள்பலவற்றைக்கொண்டசிறந்தநூலாகக்கருதப்படுகிறது.

கிரேக்கமொழியில்எழுதப்பட்டஅரிஸ்டாட்டிலினுடையகருத்துக்களைத் தெரிந்துகொள்வதற்குத்திறனாய்வாளர்களின்உதவியைத்தான்நாடவேண்டியுள் ளது.

திறனாய்வாளர்களுக்குள்அரிஸ்டாட்டில்கொள்கைகளைப்பற்றிமாறுபட்டகருத் துக்கள்இருந்தாலும்பெரும்பாலோர்உடன்படுகிறசிலமுக்கியமானகொள்கைகளு ம்உண்டு. அவை; 1.கவிதை, 2.துன்பியல், 3.கதைப்பாடல்என்பனவாகும்.

இலக்கியங்கள்அனைத்தும்தொடக்ககாலத்தில்கவிதையில்அமைந்திருந்த ன. கிரேக்கஇலக்கியங்களும்இதற்குவிதிவிலக்கல்ல. அகவே, அரிஸ்ட்டாட்டிலும்கவிதைக்குமுக்கியத்துவம்அளிக்கிறார்.

கவிதையின்தோற்றம்வளர்ச்சிபற்றிஆராய்ந்தஅரிஸ்டாட்டில்அதைஇருவகையா கப்பகுக்கிறார்.

1.குறில்நெடிலானஈரசைச்சீர்கொண்டயாப்பு (lambs) அல்லது வசைமொழி (Invectives) என்பதுஒருவகை.

2.கடவுள்மேல்பாடுகின்றபக்திப்பாக்கள் (Hymus) அல்லதுபுகழுரைஎனப்படும் 'Panegyries' மற்றொருவகை.

இவ்விருவகைக்கவிதைகளுள்ஈரசைச்சீர்யாப்பு, அல்லதுவசைமொழி, அங்கதமாகவளர்ச்சியடைந்தது. பக்திப்பாடல்அல்லதுபுகழ்மொழிகாப்பியமாகஅல்லதுவீரப்பாடலாகமலர்ந்தன. மேலும்வீரப்பாடல்களிலிருந்துதுன்பியலும்அங்கதத்திலிருந்துஇன்பியலும்வளர்ந்தனஎன்பதுஅரிஸ்ட்டாட்டில்கண்டமுடிவு.

கவிதையைப்பெருமைக்குரியஇலக்கியவகையாகக்கருதுகிறார்அரிஸ்ட்டாட்டில். அவர்கொள்கையின்படிகவிதையும்ஏனையகலைகளைப் 'போலச்செய்தல்' தான்என்றாலும்கவிதைஎன்பதுஒலிப்பொலியோ (Mimicry) புறத்தோற்றத்தைமட்டும்காட்டுவதோஅன்று. அதுகற்பனையோடுபோலச்செய்வதன்மூலம்ஏனையகலைவகைகளைக்காட்டிலும்ஒருமேலானஉண்மையைஉணர்த்துகிறது. கவிதையின்போலச்செய்தல்முறையானதுலட்சியப்படுத்தும்செயற்பாங்காகும். இந்தவிதத்தில்கவிதைஇயற்கையைக்காட்டிலும்மேலானஉண்மையையும்எதார்த்தத்தையும்கொண்டுள்ளதுஎன்பார்அரிஸ்ட்டாட்டில்.

அரிஸ்ட்டாட்டிலின்குருவானபிளாட்டோகவிஞர்களைப்பொய்யர்கள்என்கிறார்.

கவிதையைப்பொய்மையின்தாய்என்றுகுற்றஞ்சாட்டித்தம்முடையலட்சியப்பொதுவுடைமை (ideal Commonwealth)நாட்டிலிருந்துகவிஞர்களைநாடுகடத்திவிடுகிறார். கவிஞர்கள்எதார்த்தஉணர்வுஇல்லாதவர்கள், நிழலின்நிழலைஅவர்கள்போலச்செய்கின்றனர். ஆகவே, கவிதைஎன்பதுமூன்றுஅடுக்குஎதார்த்தத்திற்குப்புறம்பானதுஎன்பதுபிளாட்டோவின்கொள்கை. அவருக்குமறுப்புக்கூறும்முறையில்அரிஸ்ட்டாட்டில்கவிதைஉண்மையானது, வரலாற்றைக்காட்டிலும்மிகமேலானது, உண்மையானஅகிலத்துவமுடையதுஎன்றும்கவிதைதத்துவத்தைக்காட்டிலும்புரிந்துகொள்வதற்குஎளிதானதுஎன்றும்கூறுகிறார்.

## துன்பியல் - இன்பியல்பாடுபொருள்கள்

அரிஸ்ட்டாட்டில்துன்பியல்பற்றிக்கூறும்கொள்கைகள்அவருடையபடைப்பானகவிதைஇயல்நூலில் (Poetics) இடம்பெறுகின்றன. கவிதையியல்நூல், கவிதைகளைப்பற்றியவிளக்கத்தோடுமுடிகிறது.

துன்பியல்கவிதைவடிவங்களில்மிகவும்மேலானதுஎன்பதுஅரிஸ்ட்டாட்டிலின்கொள்கை. துன்பியல்என்பதுகருத்தாழம்மிக்கதும், நிறைவானதுமானஒருசெயலை "போலச்செய்துகாட்டுதல்" (Imitation) என்கிறார்.

போலச்செய்வதென்பதுகதைகூறும்முறையிலன்றுநடிப்பின்மூலம்காட்டுவது. அவ்வாறுநடித்துக்காட்டுவதில்நிகழ்ச்சிகளையும்சம்பவங்களையும்அழகாகவிளக்கிக்காட்டும்முறையிலும்மொழிநடையிலும்ஒருபரிமாணத்தைஅல்லதுமுழுமையானவடிவத்தைப்படைத்துக்காட்டல்வேண்டும்என்கிறார். அனுதாபம்மற்றும்மேடைகளில்நடித்துக்காட்டத்தகுதிவாய்ந்தஉயர்ந்தஉணர்ச்சிகளை "நாடகத்தூய்மையின்" (Catharsis) மூலமேவெளிப்படுத்தவேண்டும்என்பதுஅரிஸ்ட்டாட்டில்கூறும்துன்பியல்பற்றியகொள்கையாகும். இனித்துன்பியல்நாடகத்தலைவன்பற்றியஅரிஸ்ட்டாட்டிலின்கொள்கையைக்காண்போம்.

துன்பியல்என்பதுதலைவன்ஒருவன்நல்லொழுக்கவிதிமுறைகளையும்நீதியையும்நிலைநாட்டுவதற்குப்போராடுவதும், அப்போராட்டத்தில்வெற்றிபெற்றுஅல்லதுதோல்வியுற்றுஅவன்இறப்பதும்ஆகி

யநிகழ்ச்சிகளைவிளக்கும்நாடகமாகும்.

இந்தநாடகத்தலைவன்தன்னேரில்லாதவனாகவும்பலராலும்பாராட்டப்பெறும்சி

றப்பியல்புகளைஉடையவனாகவும்இருக்கவேண்டும்.

அவன்,

நீதியைநிலைநாட்டுவதில்பணிந்துபோகிறவனாகஇல்லாமல்எதிர்த்துப்போராடி

வீழ்ச்சிஅடைவதன்மூலம்பலரின்அனுதாபத்தைப்பெறுகிறவனாகவும்இருக்கவே

ண்டும்.

நாடகத்தில்கதைத்தலைவன்பெரும்பங்கும்,அவன்முடிவைஏற்றுக்கொள்ளும்மு

றையும்நாடகத்தின்துன்பியல்உச்சநிலைக்குக்காரணமாகஅமைகிறது.

கதைத்தலைவன்சாதாரணமனிதஇயல்புகளையும்குறைபாடுகளையும்உ

டையவனாகஇருக்கவேண்டுமேயன்றிகுறைபாடற்றமுழுநிறைவுப்பாத்திரமாக

இருக்கக்கூடாது. கதைத்தலைவனின்மிகப்புனிதமானமுயற்சிகளும்,

அரியசெயல்களும்அவனைக்குற்றம்புரிவதற்கும்துன்பத்திற்கும்ஆளாக்குகிறது.

என்பதைமறைமுகமாகவிளங்கவைக்கவேண்டும்என்பது -

துன்பியல்பற்றியஅரிஸ்டாட்டில்கொள்கையாகும்.

1.மனிதவாழ்க்கையில்நிகழும்செயல்களைப்பற்றியது.

2.அச்செயல்கள்பலருக்குப்பொதுவானதும்முழுமையானதும்,

கருத்தாழம்மிக்கதுமாகஇருத்தல்வேண்டும்.

3.நாடகத்தின்பல்வேறுபகுதிகளுக்கும்பொருந்துமாறுபலவகைக்கவிதைஉத்திக

ளைக்கொண்டவளமானமொழிநடையில்இயற்றப்படல்வேண்டும்.

4.கதைகூறும்முறையில்அமையாமல்நடித்துக்காட்டத்தக்கநாடகமுறையில்அமை

வது, அச்சம்,

இரக்கம்என்னும்மாட்சிகளைப்படைத்துக்காட்டிசெம்மைப்படுத்துவதுதுன்பியல்

என்பதுஅரிஸ்டாட்டிலின்கொள்கை.

கொடியமரணம், சித்திரவதைபோன்றஅழிவுஅல்லதுதுன்பநிகழ்ச்சி, நல்லவனின்வீழ்ச்சிஇவைகளெல்லாம்துன்பியல்நாடகத்தின்சிறப்புக்கூறுகாளகும். இந்தஅடிப்படையில்லைலா- மஜ்னு, ரோமியோ -ஜூலியட், அம்பிகாபதி - அமராவதிபோன்றதுன்பியல்நாடகங்கள்குறிப்பிடத்தக்கவைஆகும்.

அரிஸ்ட்டாட்டில்கூறும்இன்பியல்பற்றிக்காண்போம்.

இன்பியல்என்பதுபிறரைத்துன்புறுத்தாத, அழிவுசம்பந்தமில்லாத, சிலமனிதக்குறைபாடுகளையும்,

விகாரங்களையும்சாதாரணமனிதனிடத்தில்இருப்பதைக்காட்டிலும்மிகைப்படுத்திக்காட்டுவது.

இன்பியலின்முக்கியநோக்கம்குறைகளைநையாண்டிசெய்வதன்மூலம்நகைச்சுவையூட்டுவதாகும்.

அரிஸ்ட்டாட்டில்லட்சியமானதுன்பியல்கதைத்திட்டத்தின்இயல்பு, அமைப்பு, கூறுகள்அகியவற்றில்மிகுந்தகவனம்செலுத்துகிறார். அரிஸ்ட்டாட்டில்கொள்கையின்படிகதைத்திட்டம்என்பதுசம்பவங்கள், நிகழ்ச்சிகள்ஆகியவற்றின்அமைப்புஆகும். கதைத்திட்டம்என்பதுதுன்பியலின்பொருள்நிறைந்தஒன்று. "கதைத்திட்டம்என்பதுமுதன்மையானமுக்கியத்துவம்வாய்ந்தது. துன்பியலுக்குஉயிர்போன்றது. கதைத்திட்டம்இல்லாமல்துன்பியல்இல்லை" என்கிறார்.

அரிஸ்ட்டாட்டில்.துன்பியல்உருவாக்கத்திற்கானஆறுஉறுப்புகளைக்கூறுகிறார். அவை; 1 கதைத்திட்டம். 2.பாத்திரங்கள், 3.சிந்தனை, 4.இனிமை, 5.சொற்தேர்வு, 6.காட்சிஎன்பனவாகும். இந்தஆறுஉறுப்புக்களுள்கதைத்திட்டத்திற்கேமுதன்மைஅளிக்கிறார்.

கிரேக்கமொழியில் 'poet' என்பதற்குப்படைப்பாளன் (maker) என்றுபொருள். கவிஞன்ஒருபடைப்பாளன். அவன்படைப்பாளன்என்றுபெயர்பெறுவதுகவிதைகளைப்படைப்பதால்அன்று. கதைத்திட்டத்தைப்படைப்பதனால்தான்என்றுகூறுவதிலிருந்துஅரிஸ்ட்டாட்டில் கதைக்கும்கதைத்திட்டத்திற்கும்வேறுபாடுஉண்டுஎன்கிறார்.

அவர்கொள்கையின்படி, கவிஞன்கதையைப்புதிதாகக்கண்டுபிடிக்கவேண்டுவதில்லை. அவன்ஒருமரபுக்கதையைத்தேர்ந்தெடுத்துஅதைவைத்துக்கொண்டுதன்கதைத்திட்டத்தைஉருவாக்கலாம். இந்தஅடிப்படையில்வரலாறு, புராணம்வாய்மொழிக்கதைமுதலியவற்றிலிருந்துகதையைத்தேர்ந்தெடுப்பதுசிறந்தது. காரணம்அப்படிப்பட்டகதைகள்பழக்கமானதும்எளிதில்புரிந்துகொள்ளக்கூடியதும்ஆகும். பாத்திரப்படைப்புக்குஉதவியாகவும்இருக்கும். கதைகளைத்தேர்ந்தெடுத்துமுறைப்படுத்துவதுகவிஞனின்திறமையைப்பொறுத்தது.

அவ்வாறுதேர்ந்தெடுப்பதில்பொருத்தமானநிகழ்ச்சிகளையும்சந்தர்ப்பங்களையும்மனத்தில்கொண்டுதேர்ந்தெடுக்கப்படும்சம்பவங்கள்கருத்தாழம்மிக்கவை

யாகவும்கனமானசெய்திகளையும்கொண்டுஅமையவேண்டும். கருத்தாழமுள்ளசெயலின்போலச்செய்தலானதுன்பியல்பார்வையாளர்கள்மனத்தில்அவலஉணர்வுகளையும்அனுதாப, அச்சஉணர்வுகளையும்எழுப்பவேண்டுமானால்அதில்அற்பமானசம்பவங்களுக்கு இடமிருக்கக்கூடாதுஎன்பதுஅரிஸ்ட்டாட்டிலின்துன்பியல்பற்றியகொள்கையாகும்.

அரிஸ்டாட்டில்கொள்கையின்படிதுன்பியல்கதைத்திட்டம்தொடக்கம்,இடைநிலை, முடிவுஆகியமூன்றுகூறுகளும்கொண்டதாகஅமையவேண்டும். அதாவதுமுழுமையானதாக (Complete) இருக்கவேண்டும்என்கிறார். அதுபோதுமானஅளவுக்குநிகழ்ச்சிகளைக்கொண்டதாகஇருக்கவேண்டும்என்கிறார். இதைஅளவுஎனப்பொருள்படும் 'Magnitude' என்பர். மேலும்கதைத்திட்டத்தின்வகைகளைப்பற்றிப்பேசுகிறார்.

துன்பியலின்பாத்திரப்படைப்புபற்றியஅரிஸ்ட்டாட்டிலின்கொள்கைக்கூர்ந்துகவனிக்கத்தக்கது. அவர்கொள்கையின்படிதுன்பியல்என்பதுஉயர்ந்தஅல்லதுசிறந்தமனிதனைக்காட்டுவது. லட்சியநோக்குடையது. இன்பியல் (comedy)

என்பதுஇயல்பானமனிதனைக்கேலிக்குரியவனாகஅல்லதுதாழ்ந்தவனாகக்காட்டுவதுஆகும்.

துன்பியல்மனிதனைஅவனுள்மறைந்துகிடக்கும்ஆற்றல்களோடுகாட்டுவது.

துன்பியலில்இடம்பெறும்பாத்திரங்கள்நடைமுறைவாழ்க்கையில்காணக்கூடியவர்கள்அவர்களுள்சிறந்தவர்களைத்தேர்ந்தெடுத்து, அவர்களிடமுள்ளசிறப்புஅம்சங்களைக்காண்பவர்மனத்தில்பதியுமளவுக்குச்சிறப்பித்துக்காட்டப்படல்வேண்டும். இதுஎப்படிப்பட்டதென்றால், ஒருபிச்சைக்காரரைப்பார்த்துவரையப்பட்டபடம்உண்மையானபிச்சைக்காரரைவிடக்கவர்ச்சியாகஇருப்பதைப்போன்றது. அதைப்போல்பாத்திரப்படைப்பும்எதார்த்தமானமனிதனைப்போன்றதுஎன்றாலும்லட்சியப்படுத்தப்பட்டஎதார்த்தமாகஅமையவேண்டும்என்பதுஅரிஸ்ட்டாட்டிலின்கொள்கை.

இந்தஅடிப்படையில்துன்பியலில்இடம்பெறும்பாத்திரங்கள்வாழ்க்கையில்காணப்படும்ஆண்,பெண்களைப்போலஇருந்தாலும்லட்சியப்படுத்தப்பட்டஎதார்த்தமனிதர்களாக,

நடைமுறையில்உள்ளவர்களைவிடஉயாந்தவர்களாகஇருக்கவேண்டும்என்கிறா ர்அரிஸ்ட்டாட்டில்.

சுருக்கமாகச்சொன்னால்துன்பியல்பாத்திரங்கள்நல்லவர்களாகஇருக்கவேண்டு ம். பழங்காலக்கிரேக்கநாட்டில்பெண்கள்தாழ்ந்தவர்களாகவும், அடிமைகள்பயனில்லாதவர்களாகவும்கருதப்பட்டனர். ஆனால், துன்பியலில்இடம்பெறும்பெண்கள்அடிமைகள்ஆகியோரிடமும்சிலசிறப்புக்கள் உண்டுஎன்றுகாட்டல்வேண்டும். முழுக்கெட்டவன்இல்லாதகாரணத்தால்முழுக்கெட்டவனைக்காட்டக்கூடாதுஎன் பதுதுன்பியல்பாத்திரம்பற்றியஅரிஸ்ட்டாட்டில்கொள்கையாகும்.

மேலும், பாத்திரப்படைப்பில்பொருத்தம் (Appropriateness) இருக்கவேண்டும்என்கிறார். ஒருபெண்ணுக்குஆண்இயல்புகளையோஅடிமைக்குப்பிரபுத்துவமோபெருந்தன் மையோஇருப்பதாகக்காட்டுவதுபொருத்தமற்றது. அவரவர்க்குரியஇயல்போடுகாட்டப்படவேண்டும்என்பதுஅரிஸ்ட்டாட்டில்கொ ள்கை

அரிஸ்ட்டாட்டிலின்இக்கொள்கைதொல்காப்பியர்மரபியலில்கூறும்அந்த ணர், அரசர், வணிகர்,

வேளாளர்இலக்கணத்தோடுஒப்புநோக்கத்தக்கது.சான்றாக,

"ஓதலும்தூதும்உயர்ந்தோர்மேன"என்பதைப்போன்றது.

துன்பியலைவிளக்கும்போதுஅதுஇரக்கஉணர்வினையும்அச்சஉணர்வி னையும்தூண்டவல்லதாகஇருக்கவேண்டும்என்கிறார்.அதுகேதார்சிஸ்மூலம்அ மையவேண்டும்என்கிறார். "கேதார்சிஸ்" என்றசொல்லின்பொருள்பற்றித்திறனாய்வாளர்கள்வெவ்வேறுவிளக்கங்களைத் தருகின்றனர். அரிஸ்டாட்டிலும்அதற்குப்பொருள்சொல்லவில்லை. கதைத்திட்டத்திற்குத்தேர்ந்தெடுக்கும்நிகழ்ச்சிவாழ்க்கையிலிருந்துலட்சியப்படுத் தவேண்டும்.

வாழ்க்கையிலிருந்துஎடுக்கப்படுவதாயினும்அவைஅற்பமானநிகழ்ச்சிக ளாகஇல்லாமல்கனமானபெரியநிகழ்ச்சியாகஇருக்கவேண்டும். அதையும்லட்சியப்படுத்திநடிக்கவேண்டும். பாத்திரங்களைலட்சியப்படுத்துவதற்குகுறைகளைக்கழித்து, நிறைகளைமட்டும்பெரிதுபடுத்திக்காட்டல்வேண்டும். எதையும்மிகைப்படுத்திக்காட்டும்முறையை 'கேதார்சிஸ்' என்பர்சிலதிறனாய்வாளர்கள்.

ஹம்ஃபிரேஹவுஸ் (Humphery House) என்பவர் “கேதார்சிஸ்' என்பதுதூய்மைக்கொள்கை (Purification Theory) என்கிறார். அதாவதுமக்கள்கற்றுக்கொள்ளும்படிநீதியைப்போதிப்பதாகத்துன்பியலின்கதையும், நிகழ்ச்சிகளும், பாத்திரப்படைப்பும்அமையவேண்டும்என்றுகொள்கிறார்.

மேலும், அரிஸ்ட்டாட்டில்கற்பனை (Imagination), ஒருமைப்பாடு (Unity) போன்றஇலக்கியக்கூறுகளைப்பற்றியதெளிவானகொள்கைஉடையவராகக்காணப்படுகிறார். அவற்றைவிரித்தெழுதுவதுபெரிதாகும்.

அரிஸ்ட்டாட்டிலும்தொல்காப்பியரும்காலத்தால்ஓரளவுஒத்தவர்கள். இடத்தால்நீண்டதொலைவுக்குஅப்பாலிருப்பவர்கள்என்றாலும்இருவரும்உலகநாகரிகத்தின்முன்னோடிகளானஇருமாபெரும்நாகரிகஇனத்தாரின்கலைப்படைப்புக்களுக்குஇலக்கணம்வகுத்தவர்கள்.

அரிஸ்ட்டாட்டிலின்இலக்கியக்கொள்கைகவிதை, நாடகம், துன்பியல். இன்பியல்போன்றஇலக்கியவகைகளுக்கும்அவைபடைக்கும்பாங்கானகற்பனை ,போலச்செய்தல்,கதைத்திட்டம், பாத்திரப்படைப்பு, கதைபொதிபாடல்போன்றபரந்துபட்டஇலக்கியப்பார்வைகளும்உடையது.

அரிஸ்டாட்டில்துன்பியலில்பெண்களையும்அடிமைகளையும்மிகஉயர்ந்தவர்களாகச்சித்திரிக்கப்படல்கூடாதுஎன்கிறார்.

தொல்காப்பியரும்பெண்கள்நாணமுடையவர்களாகப்படைக்கப்படல்வேண்டும், அடிமைகளும்குற்றேவலாளர்களும்அகனைந்திணைக்குஉரியவர்களாகச்சித்தரிக்கப்படக்கூடாதுஎன்கிறார்.

அடிமைகளுக்குப்பிரபுத்துவஇயல்புகள்இருப்பதாகவோபெருந்தன்மை (Nohility) உள்ளதாகவோபடைக்கப்படக்கூடாதுஎன்றுஅரிஸ்ட்டாட்டில்கூறுவதுபோலவேதொல்காப்பியரும் "நான்காம்நிலையிலுள்ளவேளாளரைப்பற்றிப்பாடுங்கால்அவர்களுக்குரியதொழிலாகக்குறிப்பிடப்படவேண்டியதுஉழுதொழில்தவிரபிறசிறப்புக்கள்கூறப்படக்கூடாது" என்றுகூறியுள்ளதோடுஒப்பிடத்தக்கது.

சுருங்கச்சொன்னால்இருவரும்தங்கள்மொழியிலுள்ளஇலக்கியங்களுக்கு இலக்கணம்கண்டமுதல்திறனாய்வாளர்களாகஇருப்பதால்பலஇலக்கியக்கொள்கைகளைஉருவாக்குகின்றனர்.

அரிஸ்ட்டாட்டில்அடிமைச்சமுதாயஅமைப்பில்தோன்றியஇலக்கியங்களுக்குஇலக்கணம்வகுக்கின்றார்.

தொல்காப்பியர்அடிமைச்சமுதாயஅமைப்புசிதைந்துகொண்டிருந்தநிலஉடைமைச்சமுதாயத்தில்தோன்றியஇலக்கியங்களுக்குஇலக்கணம்வகுக்கிறார்.

டாக்டர்பொற்கோஅரிஸ்ட்டாட்டிலோ, தொல்காப்பியரோவாழ்க்கைக்குஇலக்கணம்கூறவில்லைஇலக்கியங்களுக்கேஇலக்கணம்கூறுகின்றனர்என்கிறார். தொல்காப்பியர்பொருளதிகாரத்தில்கூறும்பலகருத்துக்கள்இலக்கியம்பிரதிபலிக்கும்வாழ்க்கைமுறையாகும்.

தொல்காப்பியரும்அரிஸ்ட்டாட்டிலும்சிலவகைகளில்மாறுபட்டகொள்கை உடையவர்கள்என்றாலும், இலக்கியம்மக்களுக்குநல்லொழுக்கத்தைப்போதிப்பதாக, லட்சியநோக்கம்உடையதாகஅமையவேண்டும்என்னும்பயன்பாட்டுக்கொள்கை உடையவர்களாகக்காணப்படுகின்றனர்.

**இதிகாசம்- காவியம்- காப்பியம்- கதைபொதிப்பாட்டு - பாடுபொருள்கள்**

மேல்நாட்டுப்பழம்பெரும்காப்பியங்களைத்தொன்மைக்காப்பியம்எனலாம்

,

தீரச்செயல்கள்செய்யவல்லவீரர்களைப்பாத்திரங்களாகக்கொண்டநீண்டகதை பொதிபாடல்கள்காப்பியங்கள் (Epics) எனப்படும். ஹோமர்எழுதியஇலியட்,ஒடிசி, வெர்ஜில்எழுதியஏன்சிட்போன்றகாப்பியங்களையும்நம்முடையநாட்டில்தோன்

றியமகாபாரதம்,

இராமாயணம்சிலப்பதிகாரம்போன்றவற்றையும்தொன்மைக்காப்பியங்கள்என லாம்.

தொன்மைக்காப்பியக்கொள்கைகளைவகுத்தளித்தவர்அரிஸ்டாட்டில்என் னும்கிரேக்கத்தத்துவஞானியாவார்.அவரைப்பின்பற்றிஅறிஞர்கள்கூறும்காப்பி யஇலக்கியக்கொள்கைகள்சிலவற்றைக்காண்போம்.

கதையமைப்பில்எளிமையும், தெளிவும்நிரம்பியிருத்தல், கிளைக்கதைகள்பலவற்றைக்கொண்டிருப்பினும்மூலக்கதையின்வளர்ச்சிக்குவி ளக்கமாகஅமைதல்.

**கதைமாந்தர்** **:**வீரம், கொடை, தியாகம்முதலியபண்புகள்காரணமாகமக்களால்மதிக்கப்பெற்றுத்தலைவர்களாக ஏற்றுக்கொள்ளப்பெற்றஇனக்குழுத்தலைவர்களின்இயல்புகளைக்கொண்டவர்க ளாயிருப்பர்.

**உள்ளடக்கம்**

**:**உள்ளடக்கத்தைப்பொறுத்தவரைதொன்றுதொட்டுப்புறஉலகத்தைப்பற்றியும்இ

யற்கைநிகழ்ச்சிகளைப்பற்றியும்வாழ்க்கையைப்பற்றியும், தாங்களேகற்பித்துக்கொண்டநம்பிக்கைகளின்தொகுப்பாகஅமைவதுஎனலாம்.

மேற்குறிப்பிட்டவீரம், கொடை, தியாகம்முதலியநற்பண்புகளைஉடையதலைவனையும், தொல்பழங்காலமக்கள்பாடலானநாட்டுப்பாடற்கூறுகளையும்நம்பிக்கைகளையும்இயற்கைமுதலியவற்றைப்பற்றியகற்பனைக்கொள்கைகளும்நிறைந்தகாப்பியங்களைநம்பிக்கைக்குரியஇலக்கணங்களைஉடையகாப்பியங்கள் (Authentic Epicsw) என்பர். இவற்றைஇயற்கைக்காப்பியங்கள்என்றும்சொல்லலாம். மகாபாரதம்,ஹோமரின்இலியட்,ஒடிசி, இராமாயணம்போன்றவைஇக்கூறுகளைக்கொண்டுள்ளதால்அவற்றைநம்பகமானகாப்பியங்கள்எனலாம்.

பன்னூறுஆண்டுகளாகப்பாமரமக்களின்வாய்மொழிப்பாடலாகவழங்கிவந்தநாட்டுப்பாடல்கள்பிற்காலத்தில்கி.மு.5 ஆம்நூற்றாண்டுகற்றறிந்தசான்றோர்களால்திருத்தமுறஅமைக்கப்பட்டஎழுத்துவடிவமேஇன்றையசங்கஇலக்கியங்களாகும்என்றுசிலர்கருதுகின்றனர். இக்கொள்கையின்படிசங்ககாலம்என்றுநாம்கருதுகின்றகாலத்திற்குப்பன்னூறுஆண்டுகளுக்குமுன்னதாகத்தோன்றியநாட்டுப்புறப்பாடல்கள்,

சங்கப்பாக்களுக்கும்தொல்காப்பியத்திற்கும்மூலமானவைஎன்பதுஉறுதியாகிறது

.

இதன்அடிப்படையில்தொல்காப்பியர்கூறும்இலக்கியவடிவம்உள்ளடக்கம், படைப்பாளன், இலக்கியத்தின்பயன்,யாருக்காகப்படைக்கப்படுவது, உத்தி, அணிஆகியகொள்கைகளைஅறிந்துகொள்ளுதல்தமிழிலக்கியக்கொள்கையின்அடிப்படையைஅறிந்துகொள்வதற்குஉதவுவதாகும்.

இலக்கியம்என்றசொல்தொல்காப்பியத்தில்எங்கும்பயன்படுத்தப்படவில்லை. ஆனால்நூல், சூத்திரம், செய்யுள், என்றமூன்றுசொற்களும்பலஇடங்களில்ஆளப்படுகின்றன.

இதன்அடிப்படையில்நோக்கினால்சங்ககாலத்தில்இன்றுநாம்கருதுவதுபோன்ற இலக்கியவகைவழக்கத்தில்இல்லையோஎன்றஎண்ணத்தோன்றுகிறது.

தொல்காப்பியர்குறிப்பிடும்சூத்திரம்என்பதுஇலக்கணத்தைச்சொல்லும்பாட்டுஅல்லதுநூற்பாவாகியதனிச்செய்யுளையேகுறிப்பதாகும்.

நூல்என்பதும்இலக்கணத்தைக்கூறும்தனிச்சூத்திரத்தைக்குறிப்பதேஆகும்.

செய்யுள்என்பதுஅகநானூறுபுறநானூறுபரிபாடல்போன்றநூல்களில்காணப்படும்தனிப்பாக்களைக்குறிப்பதாகும்.

பழங்காலத்தில்உலகஇலக்கியங்கள்பெரும்பாலும்செய்யுள்வடிவிலேயே அமைந்திருந்தனஎன்பதுமுன்பேசுட்டப்பட்டதாகும்.

அதுபோலவேபழங்காலத்தமிழ்இலக்கியங்கள்அனைத்தும்செய்யுள்வடிவிலேயே அமைந்திருந்ததனால்தொல்காப்பியரும்செய்யுள்வடிவத்தில்அமைந்தஇலக்கியத் துக்கேஇலக்கணம்கூறிச்செல்கிறார். செய்யுளுக்குஇன்றியமையாதஉறுப்புக்கள் 34 என்றுகருதுகிறார். அதில்மாத்திரைமுதல்அளவியல்ஈறாகச்சொல்லப்படும் 11 உறுப்புகளும்யாப்புப்பற்றியவையாகும்.

திணைமுதல்வண்ணம்வரைகூறப்படும்பதினைந்துஉறுப்புகளும்பெரும்பாலும் செய்யுளில்கூறப்படும்பொருள்பற்றியவையே. அவற்றோடுஅம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபுஎன்பனஉருவமும்உள்ளடக்கமும்உத்தியும்பற்றியஎட்டுஉறுப்புக்களையு ம்கூட்டிச்செய்யுளுறுப்பு 34 என்பர்.

இதைக்கூர்ந்துநோக்கினால்பொருள்,வடிவம்என்னும்வேறுபாடின்றிஇர ண்டின்கூட்டாகக்கவிதைபிறக்கிறதுஎன்னும்அவயவிக்கொள்கை (Organic theory) உடையவர்தொல்காப்பியர்என்பதுபெறப்படுகிறது. மயக்கமில்லாத, புகழ்பொருந்தியஇயல்புகளைஎடுத்துக்கூறுவது 'இயன்மொழிவாழ்த்துத்துறை'யாகும்.

புறப்பொருள்திணைஏழனுள்ஒன்றுவாகை. அதுபேறு, வெற்றிஎன்றுபொருள்படும். அதுகெடுதல்இல்லாதகோட்பாட்டினைஉடையதத்தமக்குரியஇயல்பைவெவ்வேறாகமிகுதிப்படுத்திக்கூறுவதாகும். அதாவதுமற்றவர்களைக்காட்டிலும்ஒருவர்பெற்றிருக்கிறசிறப்பைப்பற்றிஎடுத்துரைப்பதாகும். அரசன்பெற்றுள்ளசிறப்புக்கள்ஐந்துஎன்கிறார்தொல்காப்பியர். அந்தஐந்தாவனஓதுதல், வேள்விசெய்தல், ஈதல், படைவழங்கல், குடிஓம்புதல்என்பர்உரையாசிரியர்இளம்பூரணர்.

கல்விகற்றலால்ஏற்படுகின்றவெற்றிஒன்று. வேள்விசெய்வதாகியவெற்றிஅரசன்பெறுகிறஇரண்டாவதுசிறப்பாகும். பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதிபலவேள்விகள்செய்தான்என்பதுமனங்கொளத்தக்கது. கொடைத்தன்மையில்சிறந்தஅரசர்கள்பலரைச்சங்கப்பாக்களில்காணமுடியும். மிகுந்தபடையைப்பெறுவதாகியநாலாவதுசிறப்பைப்பலமன்னர்களும்பெற்றிருந்தனர். குடிமக்களைக்காப்பாற்றியஅரசன்புகழப்படுகிறான். இங்குதொல்காப்பியர்வாகைஎன்றுசொல்வதுபோர்க்களத்தில்பெறுகின்றவெற்

றியைமட்டும்குறிப்பிடுவதில்லைஎன்பதும்பொதுவாகஅரசன்பெறுகின்றசிறப்பு களைக்குறிப்பிடுவதுஎன்பதும்அறியத்தக்கது.

சங்கஇலக்கியங்களில்காணப்படும்பாடல்களில்அகப்பாக்கள்பெரும்பாலும்நாடகப்போக்கில்அமைந்தவைஎனலாம். பெரும்பாலானபாடல்கள்குழுமுறைவாழ்க்கைச்சிந்தனைகளையேபிரதிபலிக்கின்றன. புலவர்கள்கற்பனையாகச்சிலபாத்திரங்களைப்படைத்துஅவர்களின்உணர்ச்சிகளைஅவர்கள்வாயிலாகவேவெளிப்படச்செய்கிறார்கள். இதையேநன்றாகச்சொன்னால்அவற்றில்புலவர்களின்கூற்றுக்கள்இல்லை. அவர்களால்படைக்கப்பெற்றபாத்திரங்களின்கூற்றுக்களேஇடம்பெறுகின்றன. கலித்தொகைப்பாக்களில்அமைந்தநாடகப்போக்குமிகச்சிறந்தஎடுத்துக்காட்டுஎனலாம். கலித்தொகைப்பாடல்கள்ஒவ்வொன்றும்ஒவ்வொருஓரங்கநாடகம்போல்அமைந்திருப்பதுஅறியத்தக்கது. ஒவ்வொருபாடலும்தலைவி, தோழி, செவிலிபோன்றபலபாத்திரங்கள்உரையாடிக்கொள்வதுபோல்அமைந்துள்ளது. இதைநாடகப்பாடல் (Dramatic Poetry) என்றுசொல்லலாம்.

இதுபோன்றநாடகப்பாக்களை,நாடகத்தன்னுணர்ச்சிப்பாடல் (Dramatic lyric) நாடகக்கதைப்பாடல் (Dramatic Story), நாடகத்தனிமொழிப்பாடல் (Dramatic Manologue) எனமூன்றுவகையாகப்பிரிக்கிறார்வின்செஸ்டர். கதைமாந்தர்கள்பேசுவதைப்போன்றபாணியில்அமையும்நாடகப்பாக்கள்இன்றும்எழுகின்றன.

'நாடகத்தனிமொழி'

என்பதுமேற்குறிப்பிட்டநாடகப்பாடல்களிலிருந்துசிறிதுவேறுபடுவது. நாடகப்பாக்களில்பாத்திரங்கள்உரையாடுவதுபோல்கருத்துக்கள்அமையும். நாடகத்தனிமொழிப்பாடலில்ஒருபாத்திரம்தன்உணர்ச்சிகளையோஎண்ணங்களையோதனியேகூறிக்கொள்வதாகஅமையும்.நெஞ்சொடுகிளத்தல்என்னும்துறையில்அமைந்தபாக்கள்இதற்குத்தக்கசான்றாகும்.

**"நீங்கின்தெறூஉங்குறுகுங்கால்தண்ணென்னுந்**

**தீயாண்டுப்பெற்றாள்இவள்"                ( குறள் -1104)**

தலைவியிடம்உள்ளஇந்தஇயல்புகளைஎண்ணிப்பார்த்ததலைவன்தானே கூறிக்கொள்வதாகஅமைகின்றது.

இக்குறளைநாடகத்தனிமொழிப்பாடல்எனலாம்.

பாடல்கள்அகநிலைப்பாடல் (Subjective Poetry), புறநிலைப்பாடல் (objective Poetry) என்றுஇருவகையாகப்பிரிக்கப்படும். புறநிலைப்பாடல்களின்அடிப்படைஇயல்பு, கவிஞனுடையஎண்ணங்களையும்உணர்ச்சிகளையும்பற்றியதாய்இல்லாமல்சமுதாயத்தின்கோபம்துன்பதுயரங்கள், காதல், வீரம், போர்போன்றஉணர்ச்சிகளையும்செயல்களையும்பற்றியதாய்அமையும். அகநிலைப்பாடல்களில்கவிஞன்சமுதாயஉணர்வுகளைத்தன்உணர்ச்சியுடன்கூட்டித்தருகிறான்.

புறநிலைப்பாடல்களில்கவிஞன்தன்சொந்தவிருப்பங்களையும்உணர்ச்சிகளையும்சமுதாயஉணர்ச்சிகளுடன்கரைத்துக்கொண்டு, தன்ஆளுமையைமறைத்துக்கொண்டுசமுதாயஉணர்வுகளைவெளிப்படுத்துகிறான். அப்படிப்பட்ட (Narrative) Poetry) புறநிலைப்பாடல்களைக்கதைப்பாடல். நாடகப்பாடல் (Dramatic Poetry) எனஇருவகையாகப்பிரிக்கிறார்ஹட்சன்.

அகப்பொருளும்புறப்பொருளும்விரவியசங்கப்பாக்கள்பல்வேறுகாலங்களில்உருவானவை. நாட்டுப்பாடல்களாகப்பிறந்துபாணர்களாலும்விறலியர்களாலும்பாராட்டிப்பாடிவளர்க்கப்பெற்றபைந்தமிழ்பனுவல்கள்பல.

அகப்பாக்கள்மிகப்பெரும்பாலும்காதல்உறவுகள்பற்றியும்,

உணர்வுகள்பற்றியும்அமைவதால்அவற்றின்இலக்கியக்கொள்கைஇன்பியல்

(Heddonism) எனலாம்.

அதாவதுசுகபோகங்களைஅனுபவிப்பதேவாழ்க்கையின்குறிக்கோளாகக்கொண்டவையாகும்.

வீரயுகப்பாக்களானநம்புறப்பொருள்பாக்கள்போர். வீரசெயல்கள்,

பகிர்ந்துண்டுபல்லுயிரோம்பும்கொடைச்சிறப்புபோன்றவற்றைப்பாடுவதால்அவற்றின்இலக்கியக்கொள்கையைவீரம்எனலாம்.

இந்தஅடிப்படையிலேயேசங்கப்பாக்களின்இலக்கியக்கொள்கைகாதலும்வீரமும் எனலாம்.

கதைகூறும்பாக்களில்குறிப்பிடப்படவேண்டியது 'பாலட்'(Ballad) எனப்படும்.

கதைபொதிபாடல்என்பதுஒருதனிநிகழ்ச்சியைப்பற்றியகதைத்திட்டத்துடன்ஓசைநயத்துடன்கதைகூறும்போக்கில்அமைந்தஇசைப்பாடல்,

இலக்கியவகைகளுள்மிகப்பழமையானது

வாய்மொழியாகப்பாடப்பட்டுவந்ததால்பாடியவர்களின்கற்பனைகளையும்பெற்றுவளர்ந்தது.

இதுபொதுமக்களின்சுவைக்கேற்பஅமைந்தவருணனைமுறையில்அமைவது.

இதன்நுவல்பொருள்வாழ்க்கையின்அடிப்படைப்பிரச்சினைகளானவீரதீரச்செயல்கள், காதல், வெறுப்பு, அன்பு, இரக்கம்,குடும்பவாழ்க்கைப்பிரச்சினைபோன்றவையாகும்.

இயற்கைஇறந்தஆற்றல்களில்அல்லதுமீஇயற்கைச்செயல்களில்அவர்கள்கொண்டநம்பிக்கைகளும்ஒருகணிசமானஇடத்தைப்பெற்றுள்ளன.

இதில்இடம்பெறும்காதல், அன்பு, இரக்கம், வீரம், அக்காலமக்களுக்குச்சுவையூட்டிமகிழ்விப்பன.

இதனுடையஅமைப்பும்நடையும்நேரடியானதும்விறுவிறுப்பானதும்விரைந்துகதைசொல்லும்இயல்புகளோடும்சிறுபிள்ளைத்தனமானமுதிர்ச்சியடையாததும்ஆகும். அதேநேரத்தில்ஆற்றல்வாய்ந்ததுமாகும்என்பர்ஹட்சன்.

அல்லிஅரசாணிகதை, மதனகாமராசன்கதை,விக்கிரமாதித்தன்கதை, நல்லதங்காள்கதை, இராசாதேசிங்குகதை. கட்டபொம்முகதை, அண்ணன்மார்சுவாமிகதை,

கான்சாகிபுகதைபோன்றவைகள்பிற்காலத்தியநிலஉடைமைச்சமுதாயச்சிந்த

னைகளைப்பிரதிபலிக்கின்றகதைபொதிபாடல்களாகும்.

இவ்வகைக்கதைபொதிபாடல்களிலிருந்தேபுராணங்களும்உலகமகாகாப்

பியங்களும்வளர்ந்தனஎன்பதுஅறியத்தக்கது.

தெய்வவணக்கப்பாடல்களும்,

இயற்கையைத்தம்வசப்படுத்தமந்திரங்களும்,

இனக்குழூக்களின்மக்களிடையில்வாய்மொழியாகவழங்கிவந்தன.

தொடக்கக்காலத்தில்சமுதாயஉணர்வுகளைப்பிரதிபலித்தகதைகள்காலப்போக்

கில்குழுத்தலைவர்களைப்பற்றியகதைகளாகவளர்ந்தன.

பிற்காலத்தில்குழூக்களில்வேலைப்பிரிவினைகள்ஏற்பட்டுச்செல்வங்காரணமாக

மக்களுக்கிடையில்ஏற்றத்தாழ்வுகள்தோன்றின.

இந்தநிலையில்,

"குலங்கள்ஒன்றுசேரும்பொழுதுவென்றடக்கப்பட்டுஅரசர்களோடுஇணையும்

பொழுதும்பழங்காலம்பற்றியபுராணங்கள்தோன்றின.

தெய்வங்களைப்பற்றியும்வம்சங்களைப்பற்றியும்பலகதைகளைக்குழுத்தலைவர்

களுக்காகவும்,

அரசர்களுக்காகவும்பௌராணிகர்கள்படைத்தார்கள்”என்றுபுராணங்கள்தோன்றியவரலாற்றுநிலையைவிளக்குகிறார்பேராசிரியர்நா. வானமாமலை.

காப்பியம்என்றசொல்சங்கஇலக்கியங்களில்காணப்படவில்லை. கவிஎன்னும்வடமொழிச்சொல்கவிதையையும்கவிஞனையும்குறிக்கும். கவியால்செய்யப்படுவதுகாவியம். காவியம்தமிழில்காப்பியமாயிற்று. வடமொழியில்காவியம், மகாகாவியம்என்றுஇருசொற்கள்உள்ளன. தமிழில்பெருங்காப்பியம், சிறுகாப்பியம்என்பர். பெருங்காப்பியம்என்றுநம்மால்அழைக்கப்படும்மகாபாரதமும், இராமாயணமும்வடமொழியில்இதிகாசங்கள்எனப்படும். காப்பியம்என்றசொல்முதன்முதலாகஇடம்பெறுவதுமணிமேகலையில்தான். அடுத்துப்பெருங்கதை, சிந்தாமணிஆகியநூல்களில்இச்சொல்இடம்பெறுகிறது. அடியார்க்குநல்லார்இதைத்தொடர்நிலைச்செய்யுள்என்பர்.

காப்பியங்கள்வளர்ச்சிக்காப்பியம் (Epic of growth) என்றும், கலைக்காப்பியம் (Epic of Art) என்றும்இருவகைப்படும். நாட்டில்வழங்கிவரும்கதைகளையும், கதைபொதிபாடல்களையும்அடிப்படையாகக்கொண்டுவளர்வதுவளர்ச்சிக்காப்

பியம்எனப்படும். இராமாயணம், மகாபாரதம், சிலம்பு, மேகலைபோன்றவைஇவ்வகையுள்அடங்கும்.

புலவன்ஒருவன்முற்றிலும்தன்கற்பனையாற்றலால்படைக்கும்கதைப்போக்கில் அமைந்தஇலக்கியமேகலைக்காப்பியம்எனப்படும். சிந்தாமணி, பெருங்கதைபோன்றவற்றைஇதற்குச்சான்றுகளாகக்கூறலாம்.

அறம், பொருள், இன்பம்,வீடுஎன்னும்உறுதிப்பொருள்நான்கினுள்ஒன்றுகுறையினும்அதுபெருங் காப்பியம்ஆகாதுகாப்பியமாகும்.

**"அறமுதல்நான்கினும்குறைபாடுஉடையது**

**காப்பியம்என்றுகருதப்படுமே" (தண்டியலங்காரம் - 10)**

சிலம்பும்மேகலையும்தமிழ்க்காப்பியங்களுள்காலத்தால்முந்தியவை. இவற்றைஇரட்டைக்காப்பியம்என்றும்வழங்குவர். சிலப்பதிகாரம்சமணமுனிவராகியஇளங்கோவடிகளால்இயற்றப்பெற்றது. மணிமேகலைபௌத்தசமயத்தவரானசாத்தனாரால்எழுதப்பட்டது. அரசாட்சியில்தவறுசெய்தவர்களைஅறக்கடவுள்தண்டிக்கும்என்பதும்,

பத்தினிப்பெண்ணைச்சான்றோரும்போற்றுவர்என்பதும்,

ஊழ்வினைதவறாமல்தண்டனைகொடுக்கும்என்பதும்சிலம்பின்அடிக்கருத்துக்

கொள்கைகள் (Theme).

அரசன்குடிதழுலிக்கோலோச்சவேண்டும்.இல்லையென்றால்அவனுக்கும்தண்ட

னைஉண்டுஎன்றகுரலைச்சிலப்பதிகாரத்தில்முதன்முதலாகக்கேட்கமுடிகிறது.

ஊழ்வினைசங்ககாலம்முதல்பேசப்பட்டுவந்ததுஎன்றாலும்,

நீதிநூல்களில்அதுமிகுதியாகவலியுறுத்தப்படுகிறது. சிலம்பு,

மேகலைக்காப்பியங்களில்அதுகதைவடிவத்தில்,

நிகழ்ச்சிகளின்மூலம்வலியுறுத்தப்படுகிறது.

சிலம்பும்மேகலையும்வெவ்வேறுமதத்தைச்சார்ந்தவர்களால்எழுதப்பட்டிரு

ந்தாலும்கற்புடைமையைப்போற்றுவதிலும்ஊழ்வினையைவலியுறுத்துவதிலும்

இயற்கைஇறந்தநிகழ்ச்சிகள்இடம்பெறுவதிலும்ஒன்றாகவேஇருக்கின்றன.

இரண்டுகாப்பியங்களிலும்கற்புடைமகளிராகச்சிறப்பிக்கப்படுபவர்கண்

ணகி,

ஆதிரைஆகியஇருவரும்வணிகர்குலப்பெண்கள்என்பதுஓர்ஒப்புமைஆகும்.

நிலமானியகலாச்சாரத்திற்கும்,

வணிகக்கலாச்சாரத்திற்கும்இடையில்ஏற்பட்டமோதலைச்சிலம்பில்நன்குகாண முடிகிறதுஎன்றாலும்கதைபொதிபாடல்களைப்போல்நம்பழங்காப்பியங்கள்சமு தாயநலநாட்டத்தின்அடிப்படையில்ஆளுவோரைத்திருத்துவதாகவும்நல்லொழுக் கவிதிமுறைகளைவலியுறுத்துவதாகவும்அமைந்திருப்பதுஅறியத்தக்கது.

எனவே, காப்பியங்கள்சமுதாயஉணர்வுகளின்வெளிப்பாடுஎனலாம். இவ்வாறுசொல்லுவதால்அவைகள்பொதுமக்களின்இலக்கியமாகஇருந்தனஎன் றுகொள்ளமுடியாது. அவைகள்சாராம்சத்தில்பெருங்குடிமக்களானநிலவுடைமையாளர்களின்பொழுது போக்குக்காகஅமைந்தவை.

‘Epas'என்னும்கிரேக்கச்சொல்லின்பொருள் 'சொல்' என்பதாகும். பின்னர்பேச்சு, அல்லதுகதை, ஒருபாட்டு, வீரப்பாட்டு (A Heroic Poem) என்றுஅதன்பொருள்விரிவடைந்தது. எனவேஅவைவீரர்களைப்பற்றியும், அவர்களின்தீரச்செயல்களைப்பற்றியும்பாடப்பெற்றஎளியகதைகளிலிருந்துவள ர்ந்திருக்கமுடியும்என்பதுஅறிஞர்களின்முடிவு. காவியங்களில்ஹோமரால்கிரேக்கமொழியில்இயற்றப்பெற்றஇலியட்டும் (Iliad), ஒடிசியும் (Odyssey) பழமைவாய்ந்தகாப்பியங்களாகக்கருதப்படுகின்றன.

காவியஇலக்கியத்தின்பெருமைஉணர்ந்தவர்கள்அவற்றைமனிதனுடையஆன்ம இயக்கத்தின்மாபெரும்செயல்என்பர்.

காவியம்என்பதுமனிதநாகரிகவளர்ச்சியில்தோன்றியதுஆகும். மேலும், அளப்பரும்ஆற்றல்வாய்ந்ததனிமனிதனைமையமாகக்கொண்டுஅவனுடையவெற்றிகளையும், மக்கட்பிரச்சினைகளையும்பற்றியநீண்டகதைப்பாடல்என்றும்கூறலாம்.பாட்டுவடிவிலமைந்தஇலக்கியங்களில்முதலில்தோன்றியதுகாவியமாகவேஇருக்கமுடியும்என்பர்வின்செஸ்டர்.

காவியத்திற்குஉணர்ச்சியோடுபுறவுலகநிகழ்ச்சிகளைக்காணும்பார்வைஇன்றியமையாதது. தன்னுணர்ச்சிப்பாக்கள்கவிஞனின்சொந்தஅனுபவங்களையேமுதன்மைப்படுத்துவன. ஆனால், காவியத்திற்குத்தன்னையும்கடந்துபுறவுலகநிகழ்ச்சிகளைக்காணும்விரிந்தபார்வைதேவைப்படுகிறது. இத்தகையமனநிலைமனிதனுக்குத்தொடக்கத்திலேயேவளர்ந்திருத்தல்அரிது.

காப்பியம்இயற்றுபவனின்தன்னுணர்ச்சியைஅடிப்படையாகக்கொள்ளாமல்ஓர்இனத்தின்உணர்வுப்பிரதிபலிப்பாகவோ,

ஒருகாலத்தின்பிரதிபலிப்பாகவோஅமைகிறது. நாட்டில்வழங்கும்கதைகள், பழங்காலம்முதல்வழங்கிவரும்நாட்டுப்பாடல்கள்ஆகியவற்றின்தொகுப்பாகவும், வளர்ச்சியாகவும்மலர்வது. எனவே, காவியம்தனிஒருஆசிரியரின்உணர்ச்சிப்புலப்பாட்டுப்பாடலாகஅமையாமல்பல ர்கருத்துக்களின்தொகுப்பாகஅமைகிறதுஎன்கிறார்ஹட்சன்.

**வடமொழிக்காப்பியங்கள்**

வடமொழிக்காப்பியங்களில்காலத்தால்முந்தியவைமகாபாரதமும், இராமாயணமுமாகும். இவைஇதிகாசங்கள்எனப்படும். இவற்றுள்மகாபாரதத்தைவியாசரும்இராமாயணத்தைவால்மீகியும்இயற்றினர். இவைஇரண்டும்வெகுகாலமாகமக்களிடையேவழங்கிவந்தஇந்தியமக்கள்அனை வருக்கும்பொதுவாகஅமைந்துவிட்டஇலக்கியச்செல்வங்களாகும்.

மகாபாரதம்உலகமகாஇலக்கியங்களைஎல்லாம்விடஅளவில்பெரியது. நமதுதேசத்தில்பூர்வகாலத்துவழங்கியபல்வேறுஅறிவுத்துறைகளும்இதில்காணப் படும். பாரதசமுதாயத்தாருடையகனவுகளும்,விருப்பங்களும், நோக்கங்களும், மனத்திற்குஉவகையூட்டும்கதைகளும்இதில்விளங்குகின்றன. இதனைஒற்றுமையுள்ளஓர்இதிகாசம்என்றுகூறுவதெல்லாம்உபசாரந்தான்.

பலஇதிகாசங்கள்ஒன்றுசேர்ந்தமைந்தஒருபெரும்பேரிலக்கியம்என்றேஇதனைக் கூறுதல்வேண்டும்' என்பார்பேராசிரியர்வையாபுரிப்பிள்ளை.

பரதவமிசத்துஅரசன்குருஎன்பவனின்வழியில்வந்தகௌரவர்கள்குருக்ஷேத்திரம்என்றநாட்டைஆண்டுகொண்டிருந்தார்கள். இந்தக்கௌரவஅரசவம்சத்தாரிடையில்நிலஉடைமைகாரணமாகஏற்பட்டகுடும்பவிவகாரம்பெரியபோராகமுடிகின்றது. இந்தயுத்தம்உண்மையில்நடந்திருக்கமுடியும். இவற்றைப்பற்றியநாட்டுப்பாடல்கள்வழங்கிவந்தன. இன்னாரென்றுஅறியமுடியாதயாரோஒருகவிஞர்இந்தநாட்டுப்பாடல்செய்திகளைத்தொகுத்துஒருவீரசரிதமாகஅமைத்தார். அவரைவியாசர்என்கிறோம். இச்சரிதகதையேமகாபாரதத்தின்உட்கருவாகஅமைந்தது.

காலம்செல்லச்செல்லமேற்குறிப்பிட்டகுருக்ஷேத்திரநிகழ்ச்சிக்குநூற்றுக்கணக்கானஆண்டுகளுக்குமுந்தியவீரர்களைப்பற்றியகதைகள்வாய்மொழிப்பாடல்கள்புராணக்கூறுகள்எல்லாம்கலந்துமகாபாரதமாகஉருவாகிவிட்டது.

பாரதக்கதையைக்கூர்ந்துநோக்கினால்அதுதோன்றியகாலத்தைநம்மால்கணித்துவிடமுடியும். பாரதக்கதைபதினெட்டுநாட்கள்நடந்தபோரைப்பற்றியது. போர்ஏன்நடந்தது? சொத்துடைமைகாரணமாக,

அதாவதுபாண்டவர்களின்சொத்துக்களைதுரியோதனனும்அவன்தம்பிமார்களு ம்கவர்ந்துகொண்டனர்.

பெரியகுழுசிறியகுழுவானதம்பங்காளிகள்சொத்தைக்கவர்ந்துகொண்டது.

இழந்தசொத்தைத்திரும்பப்பெறுவதற்குப்பாண்டவர்போர்செய்கின்றனர்.

ஆகவே,

பாரதக்கதைசொத்துடைமைதோன்றிவிட்டஒருசமுதாயஅமைப்பில்தோன்றியது என்பதுஉண்மை. இந்தியமண்ணில்,

குருக்ஷேத்திரப்பகுதியில்சொத்துடைமைஎப்பொழுதுதோன்றியதுஎன்பதுமானி டவியலார்கணிக்கவேண்டியஒன்று.

பேராசிரியர்வானமாமலைகூறுவதுபோல்,

குருக்ஷேத்திரயுத்தத்திற்குமுன்பேவாய்மொழியாகத்தெய்வவணக்கப்பாடல்களு ம்,

இயற்கையைத்தம்வசப்படுத்தமந்திரங்களும்குழுக்களின்வரலாறுகளும்மக்களி டையேவழங்கிவந்தன.

பின்னால்சமுதாயத்தில்சொத்துடைமைஏற்பட்டுஅதன்பயனாய்வேலைப்பிரிவி னைஉருவாகி,

செல்வத்தால்மக்களுக்கிடையேவர்க்கஏற்றத்தாழ்வுகள்தோன்றியநிலையில்வீரர் களானதனிமனிதர்களின்செயல்களைப்பற்றியக்கதைகள்தோன்றின.

இந்தஅடிப்படையில்,

போரில்வெற்றிபெற்றபாண்டவர்களின்வீரத்தைப்பாராட்டும்கதைகள்தோன்ற லாயின. மேலும், பலகதைகளும்அவற்றோடுசேர்ந்துகொண்டன. ஆகவேதான்பழங்காலவீரக்கதைகள், நீதிக்கதைகள், கடவுளர்களைப்பற்றியக்கற்பனைக்கதைகள், யுத்தவருணனைகள், புரோகிதர்களுக்குரியசெய்யுள்கள்தத்துவம்சட்டம்போன்றபலசெய்திகள்மகாபா ரதத்தின்உள்ளடக்கமாகஅமைந்தன.

பாரதத்தில்பதினெட்டுப்பருவங்கள்உள்ளன. அவைவருமாறு:

1.ஆதிபருவம், 2.சபாபருவம். 3.வனபருவம், 4.விராடபருவம். 5.உத்தியோகப்பருவம், 6.பீஷ்மபருவம், 7.துரோணபருவம், 8.கர்ணபருவம், 9.சல்லியபருவம், 10.சௌப்திகபருவம், 11.ஸ்திரீபருவம், 12.சாந்திபருவம், 13.அனுசாஸனபருவம், 14.அசுவமேதபருவம், 15.ஆசிரமவாசிகபருவம், 16.மௌஸலபருவம், 17.மகாபிஸ்தானிகபருவம், 18.ஸ்வர்க்காரோஹணப்பருவம்.

மகாபாரதத்தின்பாதிஅளவுபாரதக்கதைபற்றியது. மறுபாதிகதைகள், உபாக்கியானங்களும்,நீதிவாக்கியங்களும்நிரம்பிஉள்ளனஎன்பர்பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை.

மகாபாரதக்கதைகளும்புராதனவரலாறுகளும்வசனநடையில்சிலவும், வசனமும்செய்யுளும்கலந்தசம்புநடையில்சிலவும்அமைந்துள்ளன. இப்போதுஅதில்ஒருஇலட்சம்சுலோகங்கள்உள்ளனஎன்பர். வியாசர்கூறியவை 20,000 சுலோகங்கள். இதைப்போன்றபலசெய்திகள்காலப்போக்கில்இடம்பெற்றவை.

மகாபாரதத்தின்உருவம், உள்ளடக்கம், உத்திபற்றியஇலக்கியக்கொள்கைகள்அனைத்தும்அதற்கேஉரியவை. காரணம்அதற்குஒப்பானநூல்உலகத்தில்இல்லை. அதன்கொள்கைகளைப்பிறநூல்கொள்கைகளுடன்ஒப்பிட்டுப்பேசமுடியாது. குமரிமுதல்இமயம்வரைவாழ்ந்தமக்களின்கற்பனைவளமெல்லாம்பெற்றஒரேநூல்பாரதம். ஆகையினால்அதனுடையஇலக்கியக்கொள்கைகளைச்சிலவிதிமுறைகளுக்குள் அடக்குவதென்பதுஇயலாதஒன்று.

இந்தியமண்ணில்தோன்றியஎல்லாவகையானஇலக்கியங்களும்ஒவ்வொருவகையில்பாரதக்கருத்துக்களைத்தாங்கியுள்ளன.

பாரதத்தில்பழங்காலத்துமுதிராதகுழுமுறைச்சமுதாயநாகரிகம்முதல்அரசின்தோற்றமானவீரயுகநாகரிகம்வரைகாணமுடியும். இத்தன்மையானசிறப்பைக்கண்டுவியந்தபேராசிரியர்வையாபுரிப்பிள்ளை, இது "ஒரேஆசிரியர்இயற்றியதுமன்று, இதனைத்தொகுத்தவர்ஒருசிறந்தஆசிரியருமன்று. இவ்விதிகாசத்தைக்கவிதைக்காடுஎன்றுதான்சொல்லுதல்வேண்டும். சிறுசிறுசெடிகளுக்கும்புதர்களுக்கும்இடையேதோன்றும்அழகியபுஷ்பங்கள்போல, அங்கங்கேகவிதைநயமும்காணப்படுகிறது. உருவமற்றுமயங்கிக்கிடக்கும்கொடிப்பிணங்களுக்கிடையேஎன்றும்நிலவதற்கு இலக்கியச்சுவையும்மிகவும்ஆழ்ந்தஞானக்கருத்துக்களும்மலர்ந்துதிகழ்கின்றன" என்கிறார்.

இராமாயணம், பாரதத்தைநோக்கஇலக்கியக்கொள்கையில்மாறுபட்டதாகத்தெரிகிறது. பாரதத்தைவிடஅளவில்சிறியது, அமைப்பில்ஒழுங்கும்முறையும்உள்ளது.

இராமாயணம்ஒருதன்னேரில்லாதவீரத்தலைவனுடையவரலாற்றைக்கூறும்காப்பியம், பாரதத்தைத்தொகுத்தவர்வேதங்களைத்தொகுத்தவேதவியாசர், ஒருரிஷி. இராமாயணத்தைத்தொகுத்தவர்வான்மீகிமுனிவர்என்றகவிஞர். இவர்மக்களிடையேவழங்கியஒருமாவீரனைப்பற்றியசெய்திகளைமுறையாகத் தொகுத்தஆதிகவியாவார். வான்மீகிராமாயணம் 'ஆதிகாவியம்' என்றுஅழைக்கப்படுகிறது. காரணம்பாரதத்திற்குமுந்தியதுஎன்றபொருளில்அன்று. காவியநெறிகளைப்பின்பற்றிப்பாடியவர்களில்இவரேமுற்பட்டவர்என்றகாரணத்தால்அவரைஆதிகவிஎன்றும், அவரால்செய்யப்பட்டகாவியத்தைஆதிகாவியம்என்றும்அழைப்பர்.

பிற்காலக்காவியக்கவிஞர்களுக்கெல்லாம்வரிச்சட்டமாய்வான்மீகியின்படைப்புஅமைந்தது. இராமாயணம்காவியஅமைப்புமுறையில்செய்யுளின்பொருளைக்காட்டிலும்உருவத்திற்குமுக்கியத்துவம்கொடுத்திருப்பதுஒன்று. உவமை, உருவகம்முதலியஅலங்காரங்களுடன்செய்யுள்அமைந்திருப்பதுஇதன்மற்றொருசிறப்பாகும்.

இச்சிறப்புக்களோடுதோன்றியகாவியங்களில்இராமாயணம்முதலாவதாகையால் அதுஆதிகாவியம்எனப்பட்டது.

